மார்ச் 2026

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

விலை
ரூபா 100/=

310






ஈழத்தின் சொற்கொண்டல்

**அஷ்ஷெய்ஹ் மௌலவி**
**அப்துர் றஊப் மிஸ்பாஹீ பஹ்ஜீ**

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

# ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

310

ஒளி : 26 சுடர் : 10

ஸ்தாபகர், ஆலோசகர் : தி. ஞானசேகரன்

ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானலக்ஷ்மி
ஓவியர் : கிறிஸ்டி நல்லரெத்தினம்

ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6. இலங்கை
தொலைபேசி: + 94 11 258 6013
+ 94 71 736 2862
மின்னஞ்சல்: editor@gnanam.info

சந்தா விபரம் : இலங்கை Rs. 1500/=
வெளிநாட்டுச் சந்தா $ 100
(தபால் செலவு உட்பட)

வங்கி விபரம்
G. BALACHANDRAN
Acc. No. - 009020348846
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX


பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

## இதழினுள்ளே.....

### கவிதைகள்


- குப்பிழான் குமரன் 05
- மாவனல்லை எம்.எம்.மன்ஸூர் 07
- கிறிஸ்டி நல்லரெத்தினம் 08
- கலாதினி பா.முருகானந்தன் 21
- காரைக்கவி 24
- இஹ்ஸான் ஜுனைதீன் 27
- அம்பிகை சண்முகலிங்கன் 30
- வேதா.இலங்காதிலகம் 34
- கனகசபாபதி செல்வநேசன் 36
- மனோகரி ஜெகதீஸ்வரன் 39
- அல்வின் அலெக்ஸாண்டர் / அன்னலட்சுமி இராஜதுரை 43


### கட்டுரைகள்


- பேராசிரியர் சபா ஜெயராசா 02
- கெ.சித்திரவேலாயுதன் 12
- லத்பான் றோஸின் 18
- தமிழ்மணி அகளங்கன் 22
- மொழிவரதன் 40


### சிறுகதைகள்


- யே.கிறித்துறாஜா 09
- ஹசிப் உர் ரஷீத் இப்தி / சு.முரளிதரன் 14
- பேராசிரியர் சி.மௌனகுரு 31
- கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் 41
- கலாநிதி ஜெகநாதன் தற்பரன் 44


### பத்தி


- பேராசிரியர் துரை. மனோகரன் 46


### வாசகர் பேசுகிறார் 48


- ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
- புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
- பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
- படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.
- ஞானம் சஞ்சிகையானது பொதுவெளி (Public Domain) பதிப்புரிமையை உடையது.

# ஆசிரியர் பக்கம்...




## அனைவருக்கும் அன்பு வணக்கம் !

### யார் பலசாலி...?

அனு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் **ஈரான்** ஈடுபட்டுள்ளதாக கடந்த பல ஆண்டுகளுக்கும் மேலாக **இஸ்ரேல்** குற்றம்சாட்டி வருகிறது. இந்த இழுபறியில் **அமெரிக்கா**வும் தலைநீட்ட, கடந்த 2025ஆம் வருடம், பன்னிரு நாட்கள் நடந்த யுத்தம், பலருக்கும் ஞாபகத்துக்கு வரலாம். அதனைத் தொடர்ந்தும், அனு சக்தி பேச்சுவார்த்தைகளில் ஈரான் பிடிகொடுக்காமையால், தற்போது மீண்டும் உக்கிர போர் 2026 பெப்ரவரி இறுதியில் மூண்டுள்ளது.

போரைத் தொடங்கியுள்ள இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், ஈரானும் அதிரடி தாக்குதலை நடத்திவருகிறது. இஸ்ரேலைத் தாண்டி வளைகுடா பிராந்தியத்திலுள்ள அமெரிக்காவின் நட்பு நாடுகளையும் ஈரான் தாக்கி வருகின்றமை கலக்கத்தைத் தருகின்றது. ***சவுதி அரேபியா*, *ஐக்கிய அரபு எமிரேட்ஸ்*, *கத்தார்*, *பஹ்ரைன்*, *ஓமன்*, *ஜோர்டான்*** என போரினால் பாதிப்படைந்துவரும் நாடுகளின் பட்டியல் நீள்கின்றது.

நடக்கும் போரினால் ***ஹார்மோஸ் ஜலசந்தி*** மூடப்பட்டிருக்கிறது. இதனால், பல உலக நாடுகளுக்கு ஏற்றுமதி, இறக்குமதி சென்று சேர்வதில் சிக்கல்களும் தாமதங்களும் ஏற்பட்டுள்ளன. இதன் விளைவாக அத்தியாவசிய பொருட்களின் விலையும் கடுமையாக உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. உலகளவிலான எண்ணெய் வர்த்தகம் பாதிப்படையும் என்பதற்கு கடந்த சில நாட்களாக எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் நிற்கும் இலங்கையர்கள் சாட்சியாகின்றனர்.

யார் பலசாலி? என்னும் தொனி இந்தப் போரின் அடிநாதமாகின்றது. உலக நாடுகள் தலையிட்டு உடனடியாக போரை நிறுத்த முயல வேண்டும்.

இது ஒருபுறம் நடக்க, ***2026 இருபதுக்கு இருபது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர்***, தற்போது இலங்கை மற்றும் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது. இதில், இலங்கை அணி அரையிறுதிப் போட்டிக்குள் தெரிவுசெய்யப்படாமல் மோசமான நிலையில் வெளியேறியது. இதனைத் தொடர்ந்து பயிற்சியாளர், ***சனத் ஜெயசூரியா***வும் பதவியைவிட்டு விலகியுள்ளார். இருப்பினும் ***ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க*** தனித்து “சிக்ஸர்” ஒன்றை அடித்து வெற்றி பெற்றிருப்பது கவனத்துக்குரியது.

பாதுகாப்பு காரணங்களுக்காக இந்திய மண்ணில் விளையாட **பங்களாதேஷ்** அணி மறுப்பு தெரிவித்தது, உலகக் கிண்ணத் தொடரில் பங்குபற்றாமல் விலகிக்கொண்டது. இந்த சூழ்நிலையை கருத்தில்கொண்டு, பாகிஸ்தானும் உலகக் கிண்ணத் தொடரில் இருந்து விலகுவது குறித்து பரிசீலிப்பதாக அறிவித்தது.

இந்த தருணத்தில்தான் இலங்கை ஜனாதிபதி களமிறங்கினார். அனுர, **பாகிஸ்தான்** பிரதமருடன் தொலைபேசியில் உரையாடினார். இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கு இடையே நிலவும் நீண்ட கால நட்புறவு மற்றும் கிரிக்கெட் விளையாட்டில் இருநாடுகளுக்கும் இடையே நிலவும் ஒத்துழைப்பு ஆகிய விடயங்கள் தொடர்பில் இருதலைவர்களுக்கும் இடையே கருத்துகள் பரிமாறப்பட்டன. அனுரவின் கோரிக்கையைக் கருத்தில்கொண்டு, பாகிஸ்தான் தேசிய கிரிக்கெட் அணி இலங்கைக்கு வந்து, பெப்ரவரி 15 அன்று இந்திய அணியுடன் விளையாடியது. ஜனாதிபதி அந்தப் போட்டியைச் சென்று பார்த்தமையும் குறிப்பிடத்தக்கது. இலங்கை ஜனாதிபதியின் செயலினை, உலக கிரிக்கெட் அமைப்புகள் உட்பட பல நாடுகள் பாராட்டியுள்ளன. உலக கிரிக்கெட் இரசிகர்களின் மனங்களையும் வென்றுள்ளார்.

யார் பலசாலி..?

ooo

# இலங்கையில் தமிழ் இசை வளர்ச்சி
## நீண்ட தேடலை வேண்டிநிற்கும் துறை



பேராசிரியர்
சபா ஜெயராசா

**இ**லங்கையில் தமிழ்இசை வளர்ச்சி பற்றி எழுதுவோரும், பேசுவோரும் இருபதாம் நூற்றாண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று, இசை கற்று வந்தவர்களில் இருந்து உரையாடலைத் தொடங்குகின்றனர்.

ஆனால், அதற்கு முன்னரே நீண்ட நெடிய இசைமரபு இருந்து வந்தமைக்கு பல்வேறு சான்றுகள் உள்ளன. ***யாழ்ப்பாணம்*** என்ற பெயரே ஈழத்தமிழ் இசையின் நீண்ட வரலாற்றுச் சான்றாக உள்ளது.

பண்பாட்டு வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் வேறு வேறுவிதமான இசைமரபுகள் நிலைபெற்று வந்தன. தமிழர்களுக்குரிய இசையும், சிங்களவர்களுக்குரிய இசையும், பன்மை இயல்பினைக் கொண்டவை.

தமிழ் இசையில் மக்களிய (Folk) இசை, கூத்திசை, பண்ணிசை, கருநாடக இசை, மேடைநாடக இசை, திரை இசை, மெல்லிசை, இணைவு இசை (Fusion), கருவி இசை, கலப்பு இசை முதலானவை உள்ளடங்குகின்றன.

சிங்களவர்களின் இசையில் மக்களிய மரபு, பௌத்தமரபு, இந்திய இசை மரபு, மேலைப்புல காலனித்துவ மரபு, முதலியவற்றை அடியொற்றிய பன்மை வடிவங்கள் காணப்படுகின்றன. விரிந்து, போட்டி, கோலம், நூர்த்தி, மெல்லிசை முதலானவை அவர்களின் இசை வடிவங்கள்.

தமிழர்களின் ***மக்களிய இசை*** என்பது, கிராமிய வழிபாட்டிசை, சடங்கு இசை, போரிசை, தாலாட்டு இசை, கிராமிய ஆடல் இசை, தூது இசை, கூத்திசை, காதல் இசை, கருவி இசை என்றவாறு பன்மை விரிவைக் கொண்டது.

மக்களிய இசை வடிவங்களிலிருந்து முகிழ்ப்பு (Emergd) அடைந்த வடிவங்களே பண் இசையும், கருநாடக இசையுமாகும். உலகில் உள்ள Classical இசைகள் அனைத்தும் மக்களிய இசையிலிருந்து வரன்முறைப்பட்டு மேலெழுந்த வடிவங்களே.

ஈழத் தமிழர்களின் எழுத்து வழியான இசை வரலாறு வீரயுகம் என்று அழைக்கப்படும் கிறீஸ்துவுக்கு முற்பட்ட சங்க காலத்தில் இருந்து, தொடக்கம் பெறுகிறது. சங்கப் புலவர் வரிசையில் ***ஈழுத்துப் பூதன் தேவனார்*** உள்ளடக்கப்படுதல். தமிழ் நாட்டுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையே நிலவிய மொழித் தொடர்பையும், பண்பாட்டுத் தொடர்பையும், இசைத் தொடர்பையும், புலப்படுத்தும்.

இசை தழுவிய வாய்மொழிப் பாடல்களே எழுத்து வழியான பாடல்கள் தோன்றுவதற்குரிய அடிப்படைகளாயின. பாணர், கூத்தர், கோடியர், வயிரியர், விராலியர் முதலியோர் இசை ஆற்றுகையில் ஈடுபட்டமை தமிழ் நாட்டுக்கும் இலங்கைத் தமிழ்ச் சூழலுக்கும் பொதுவான நிகழ்ச்சியாயிற்று.

பாணர் மரபும், யாழ் மரபும் இலங்கைத் தமிழ்ச் சூழலில் இருந்தமைக்கு ***யாழ்ப்பாணம்*** என்ற பெயர் சான்றாகும். யாழ்ப்பாண நகரத்துக்கு அண்மையில் உள்ள ***அரால்*** என்ற ஊரில் இசைக் கருவிகள் செய்வோர் இன்றும் வாழ்கின்றனர். அராவுதல் என்பதன் பொருள் தீட்டிச் செப்பமாக்குதல் என்பதாகும். யாழின் நரம்புகள் தீட்டிச் செப்பமாக்கப்பட்டே உருவாக்கப்படுகின்றன. அராவுதல் என்பதிலிருந்தே அராலி என்ற பெயர் வந்திருக்கலாம் என்ற கருத்து உண்டு. அந்தக் கிராமத்திக்கு அண்மையில் ***கொட்டுக்காடு*** (கொட்டைக்காடு) என்ற புலம் உண்டு. தண்ணுமை, முழவு ஆகியவற்றின் உடற்பாகம் 'கொட்டு' எனப்படும். கொட்டு செய்வதற்குரிய மரங்களை வளர்க்குமிடம் அதுவாயிற்று.

இவ்வாறு பெயர்களை அடிப்படையாக வைத்து பெரும் முடிவுகளை எடுத்தல் மட்டுப்

பாடுகளைக் கொண்டது. அதனை நிறுவுவதற்கு மேலும் ஆய்வுகள் வேண்டப்படுகின்றன.

பழந்தமிழர் குறிப்பிடும் ***யாழ்*** என்ற எண்ணக்கரு, மிடற்றிசை, நரம்புக்கருவி இசை, குழல் கருவி இசை ஆகிய விரிந்த பொருளைக் கொண்டது. யாழினை அடிப்படையாகக் கொண்டே பண்கள் வகைப்படுத்தப்பட்டன. தொல்காப்பியம் குறிப்பிடும் யாழ் என்ற கருத்து வடிவம் சங்க காலத்தில் பாலை என்று குறிப்பிடப்பட்டது. பிற்காலத்து கருநாடக இசையில் அது ***மேளகர்த்தா இராகம்*** என்று குறிப்பிடப்படுகிறது.

***தொல்காப்பியர்*** குறிப்பிடும் ***பறை*** என்ற கருத்து வடிவம் பிற்காலத்தில் ***தாளம்*** என்று வழங்கப்படலாயிற்று.

பழந்தமிழர் இசை பற்றிய விரிவான ஆய்வுகளை ***ஆப்பிரகாம் பண்டிதர்*** (கருணாமிர்த சாகரம்), ***சுவாமி விபுலாநந்தர்*** (யாழ் நூல்), ***வீ.ப.கா. சுந்தரம்*** (பழந்தமிழ் இலக்கியத்தில் இசை), ***எஸ். இராமநாதன்*** (சிலப்பதிகாரத்து இசை நுணுக்க விளக்கம்) ஆகியோரும் வேறும் பல ஆய்வாளரும் விரிவாக நோக்கியுள்ளனர்.

தமிழ் நாட்டின் இசை அடையாளங்களே இலங்கைத் தமிழ்ச் சூழலுக்கும் பொதுவாக இருந்தமையால் இலங்கையை வேறுபடுத்திப் பார்க்கும் செயற்பாடு, பின்காலனியச் சூழல் வரை ஏற்படவில்லை.

சங்ககாலத்தில், அரசு என்ற நிறுவன வளர்ச்சி நிலை பெறத்தொடங்கிவிட்டது. சங்க மருவிய காலத்தில் அது மேலும் உறுதிபெற்று வளர்ச்சியடைந்தது. பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் அது பேரரசாக எழுச்சி கொண்டது.

சமூக வர்க்கப்பிரிவுக்கு ஏற்றவாறு இசையும், வர்க்கப் பிரிவடைந்தது. ஒழுங்குபடுத்தப்பட்ட முகிழ்ப்பு இசை, சமூகத்தின் மேலடுக்கினருக்கு உரியதாயிற்று. சமூகத்தின் அடிநிலை மாந்தர், மக்களிய இசையோடு உறவாடினர். இசைக் கருவிகளிலும் வர்க்க வேறுபாடு இடம் பெறலாயிற்று.

பெருமுழவு, தப்பட்டை முதலிய தோற் கருவிகள் சமூகத்தின் அடிநிலை மாந்தர்க்குரிய வையாயின. தண்ணுமை, மத்தளம் முதலானவை மேலடுக்கினருக்குரிய கருவிகளாயின.

தமிழகத்தில் ***களப்பிளர்*** ஆட்சிக்காலம் கி.பி. 600 வரை நிகழ்ந்தது. ***சிம்மவிஷ்ணு*** என்ற பல்லவ மன்னன், களப்பிளரை வீழ்ச்சியடையச் செய்து, தமிழகத்தின் வடபுலத்தைத் தமது ஆட்சிக்கு உட்படுத்தினான். காஞ்சிபுரம் அவர்களின் தலைநகரம் ஆயிற்று. பல்லவர் ஆட்சி மேலும் வலுவடைந்து, ஐந்தரை நூற்றாண்டுவரை நீடித்திருந்தது.

இலங்கையில், பல்லவர் ஆட்சிக்காலத்தில் வேதாகம வழிபாட்டுடன் இணைந்த பக்தி இசை வளரலாயிற்று. நாயன்மாரும், ஆழ்வாரும் பண்களை அடிப்படையாகக் கொண்ட பக்திப் பாடல்களைப் பாடினர்.

திருஞானசம்பந்தர், மாதோட்டம் மற்றும் திருமலையில் அமைந்துள்ள சிவனை பண் இசையுடன் இணைந்த பதிகங்களால் பாடினார்.

சிவவழிபாடும் பண்ணிசை மரபும் தமிழ் நாட்டைப் போன்று ஈழத்திலும் பரவலுற்றிருந்தது. திருமலை, யாழ்ப்பாணம், பூநகரி, வல்வெட்டித்துறை, மாதோட்டம், பருத்தித்துறை, கீரிமலை முதலாம் கரையோரப் பட்டினங்களிலும் சிவன் கோயில்கள் அமைவுற்றிருந்தன.

பண்ணாகம், பண் அடைந்த தரிப்பு, பண் தரிப்பு, பண்ணாலை (பன்னாலை) முதலிய கிராமங்கள் பண்ணிசையின் அடையாளங்கள்.

பண்ணிசை மரபு இலங்கையில் தொடர்ந்து நீடித்து வந்தது, குப்பிளான், இணுவில், அளவெட்டி, நாகதீபம், வேலணை, மண்டூர், மாதோட்டம், உடப்பு, நல்லூர், முதலாம் இடங்கள் பண்ணிசை நிலையங்களாயின.

பிற்காலத்தில் ஈழத்துச் சித்தர்கள் பண்ணிசைக் காவலராயும் இருந்தனர். ***வடிவேற் சுவாமிகள்***, ***சிவ யோக சுவாமிகள்***, ***இணுவை தியாகராஜ சுவாமிகள்***, ***அளவெட்டி விநாசித்தம்பி சுவாமிகள்***, பண்ணிசையில் அமைந்த பக்திப் பாடல்களை எழுதினர்.

பொலன்நறுவையைத் தலைநகராகக் கொண்டு, சோழப் பெருமன்னர் ஆட்சிசெய்த காலத்தில் சிவவழிபாடும், பண்ணிசை மரபும் நீள் வளர்ச்சியடைந்தன. சிவாலயங்களில் ஆடல் நிகழ்த்திய தேவரடியார்ப் பெண்கள், பண்ணிசை பாடியும், ஆடல் நிகழ்த்தியும், சிவவழிபாட்டுக்கு மேலும் பக்திச் சுவையூட்டினர்.

***பண்ணும் பரதமும்*** என்ற தொடர்பு பிற்காலத்தில் மேலும் நீட்சி கொள்ளலாயிற்று.

பண்ணிசை என்பது தொடர் வளர்ச்சி கொண்ட வடிவம். மாதவியின் ஆடல், பண்ணோடிணைந்த ஆடலாக வளர்ந்து, பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும், அது மேலும் உயர்ச்சியடைந்தது. கி.பி. *1526*ஆம் ஆண்டு முதல் *1736*ஆம் ஆண்டுவரை மதுரையைத்

தலைநகராகக் கொண்டு நாயக்கர் ஆட்சி இடம்பெற்றது. கண்டியைத் தலைநகராகக் கொண்டு இலங்கையிலும் நாயக்கர் ஆட்சி இடம்பெற்றது.

விஜய நகர நாயக்கர் ஆட்சிக் காலத்தில் கருநாடக இசை தமிழகத்திலும், இலங்கையிலும் வளரலாயிற்று. கருநாடக இசைக்குத் தமிழரின் முகிழ்ப்பு ஆடலாகிய பரத நாட்டியத்தை பயன்படுத்தல் முன்னெடுக்கப்பட்டது. பரதம் ஆடுவோர், சிவன் கோயில்களுக்கு அண்மையில் தொடர்ந்து வாழ்ந்தனர்.

யாழ்ப்பாண அரசு கி.பி.*1215*ஆம் ஆண்டிலிருந்து *1624*ஆம் ஆண்டுவரை நிலைபெற்றிருந்தது. அக்காலப்பகுதி தமிழ்மொழி, இலக்கியம், இசை, ஆடல், சிற்பம், கணிதம், சோதிடம், மருத்துவம் முதலாம் கலைகளின் வளர்ச்சிக் காலமாக அமைந்தது. பண்ணிசை, கருநாடக இசை ஆகிய இரண்டும் வளர்ச்சியுற்றன.

அக்கால சமூக அடுக்கமைவின் அடிநிலைகளில் வாழ்ந்தோர் ***குடி மக்கள்*** என அழைக்கப்பட்டனர். மக்களிய இசையையும், கூத்தையும், முழவு முதலாம் இசைக் கருவிகளையும் அவர்களே பாதுகாத்து வளர்த்து வந்தனர். கிராமிய வழிபாட்டோடு இணைந்த நிலையில் அவர்களின் இசையும் கூத்தும் இடம்பெற்றன.

ஈழத்துக் கிராமங்களின் சமூக இயல்பை அடியொற்றி, இருநிலை இசைக்கோலங்கள் வழிபாட்டுடன் இணைந்து காணப்பட்டன. சிவன், பிள்ளையார், முருகன், அம்மன் கோயில்களில் பண்ணிசையும் கருநாடக இசையும் இடம்பெற்றன. முனியப்பர், காத்தவராயர், ஐயனார், இளந்தாரிகள், அண்ணமார், கருப்பண்ணாசாமி, வல்லியக்கர், கொத்தி (கொற்றவை) அம்மன், கண்ணகி அம்மன் முதலாம் வழிபாட்டிடங்களில் மக்களிய இசையும், நாட்டுக் கூத்தும் இடம்பெற்றன.

யாழ்ப்பாண அரச அவையிலும், இசை வல்லவர்கள் இருந்தார்கள். அரச அவைப் புலவர்க்கு நிலமும் நாணயமும் வழங்கும் சோழ அரசர் காலத்து மரபு, யாழ்ப்பாண அரசிலும் தொடர்ந்தது. இசை வல்லவர்க்கு புலவும், சேது நாணயமும் வழங்கப்பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

அக்காலத்தில் இசை தழுவிய தல புராணங்கள் எழுதப் பெற்றன. கோவை, உலா, கலம்பகம், சதகம், தூது முதலியவை வழிபாட்டுடனும் இசைக் கோலங்களுடனும் இணைந்தவாறு புனையம்பெற்றன.

***செகராசசேகர மன்னன்*** (*1318-1414*) வேண்டுகோளை ஏற்று, **பண்டிதராசர்**, ***தட்சிண கைலாச புராண***த்தை எழுதினார். பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ***அரசகேசரி*** என்பார், **இரகுவம்சம்** என்ற காப்பியத்தை எழுதினார். இவை இசைச் சாயல் கொண்ட வடிவங்கள்.

அக்காலத்தில் உருவாக்கம் பெற்ற தமிழ்ச் சங்கம், இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் உள்ளடக்கியதாக அமைந்தது. நல்லூரோடு இணைந்திருந்த **நாயன்மார்கட்டு** பண்ணிசை வளர்க்கும் புலமாக இருந்தமையால், பண்ணிசை வளர்த்த நாயன்மாரின் அடையாளம் பெற்றது. பண் இசைப்போர் மாமிச உணவு தவிர்க்கவேண்டும் என்ற மரபு அக்காலத்தில் இருந்தது. அந்த மரபு, இன்றும் தொடர்கிறது.

பரராசசேகர மற்றும் செகராசசேகர மன்னர் வழிபட்ட கோயில்கள் அவர்களது பெயரால் இன்றும் இணுவில் கிராமத்தில் உள்ளன. தமிழிசை மரபு இன்றும் அங்கே காணப்படுகின்றது.

செகராசசேகரன் கோயிலுக்குச் செல்லும் நுழைவாயில் "மன்னன் தோட்டம்" என அழைக்கப்படுகிறது. அங்குள்ள காணி உறுதிகளில் "மன்னன் தோட்டம்" என்ற பெயர் இன்றும் பதிவுற்றுள்ளது. இசைவல்லார் அங்கு இன்றும் வாழ்கின்றனர்.

போர்த்துக்கேயர், *1505*ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தனர். அவர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தர் வந்து *1796*ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்தனர். அவர்களது வருகையால் மேலைப்புல இசை வகைகள் தமிழ்ச் சூழலுக்குக் கிடைக்கப்பெற்றன. அத்துடன் பியானோ என்ற இசைக்கருவியும் அறிமுகமாயிற்று.

பியானோ "கின்னரப் பெட்டி" என்றும் "கட்டைப் பெட்டி" என்றும் அழைக்கப்பட்டு தமிழ்ச் சூழலோடு இணைவு கொண்ட இசைக் கருவியாயிற்று. கட்டைகளை அழுத்தித் தந்திகளில் இசையை எழுப்புதலால், "கட்டைப் பெட்டி" என்று உடுவில் கிராமத்தில் அழைக்கப்பட்டது.

கத்தோலிக்க சமயத்தினர் தமிழ்ச்சூழலில் நிலவி வந்த மக்களிய இசைக்கும், கூத்துக்கும் முதன்மை வழங்கினர். விவிலியக் கதையை மக்களிய இசையுடன் இணைந்த கூத்தாக வளர்த்தனர். அந்த மரபு இன்னும் மன்னாரிலும்

கத்தோலிக்கர் வாழும் இடங்களிலும் பாது காக்கப்பட்டு வருகின்றது.

கிறீஸ்தவ துதிப்பாடல்கள் மேலைத்தேய இசை தழுவியும் பாடப்பெற்றன. தமிழிசையிலும் பாடப்பெற்றன. கருநாடக இசை வடிவில் இராகதாள அமைப்புடன் கீர்த்தனைகள் எழுதப் பெற்றன.

கிறீஸ்தவத்தைப் பொது மக்களிடம் எடுத்துச் செல்வதற்கு அம்மானை இசைப்பாடல்கள் பெருமளவில் பயனுள்ளதாக அமைந்தமை குறிப்பிடப்படுகிறது. கத்தோலிக்க குருமார், அம்மானை இசைப்பதிலும் ஆற்றலுள்ளோராய் இருந்தனர்.

போர்த்துக்கேயர் தமது நாட்டு இசையை இலங்கைத் தமிழ்ச்சூழலுக்கு அறிமுகம் செய்தமை போன்று, ஒல்லாந்தர் தமக்குரிய ***இலெவின் சிலைட்*** *(Levenslied)* இசையையும் கிறீஸ்தவ சமயப் பாடல்கள் வாயிலாக அறி முகப்படுத்தினர்.

## இனிமை நிறைந்த மனித வாழிடம்

இயற்கை தந்த மனித வாழ்விடம் இது
இனிமைகள் நிறைந்த உலகம் இது
இயற்கையின் அதிசக்தியை அறிந்து
இன்பமுடன் வாழ்வது எம் கையில்

வாழ்வை நாங்கள் வளமாக்க
வழிகள் பல உள்ள உலகம் இது
இன்ப வாழ்வை நாம் அனுபவிக்க எமக்கு
இன்றியமையாதது நேர்மறை எண்ணங்கள்

எல்லா நிகழ்விலும் இன்ப துன்பத்தை
இயற்கை படைத்து அளிக்கவில்லை
மனிதன் மனமே தன் இன்பங்களை
துன்பமயமாக்கும் எதிர்மறை எண்ணங்களால்

மனம் என்னும் மாயையால் ஏற்படும்
சித்து விளையாட்டினை விளங்கிக் கொண்டு
உலக வாழ்வை யாவரும் ரசிப்பதற்கு
உறுதியை கொடுக்க வேண்டியவர் அன்னையே

– **குப்பிழான் குமரன்**

ஆங்கில ஆட்சிப் பரவலோடு (1796-1948) இலங்கைத் தமிழ்ச் சூழலில் தமிழிசையின் பன்மைப்பாடு மேலும் பரவலுற்றது. ஆங்கில இசையுடன் இணைந்த வயலின், கிட்டார், அக்கோடியன், மன்டோலின், ஆர்மோனியம் முதலாம் இசைக்கருவிகள் தமிழுக்கு அறி முகமாயின. தமிழிசையோடு வயலின் இணைந்து சென்றமையால் அது பெரும் வரவேற்பைப்பெற்றது.

ஆனால், ஆர்மோனியம் அத்தகைய வரவேற்பைப் பெறவில்லை. ஆர்மோனியம் தமிழ் இசையோடு இணைக்கப்படுவதை இலங்கையில் ***கலாயோகி ஆனந்த குமாரசாமி*** ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தியாவில் **இரவீந்திரநாத்தாகூரும்** தேசிய இசையில் பயன் படுத்தப்படுதலை ஏற்றுக் கொள்ளவில்லை.

அகில இந்திய வானொலியில் 1940ஆம் ஆண்டிலிருந்து 1971ஆம் ஆண்டுவரை ஆர்மோனி யத்துக்கு இடமளிக்கப்படவில்லை.

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கை வானொலி அமைச்சராக இருந்த சேர் பொன். இராமநாதனின் மருமகனார் ***சு.நடேசபிள்ளை*** அவர்களும் ஆர்மோனியத்துக்கு இடமளிக்க வில்லை. எமது இசைக்குரிய கமகங்கள் என்ற நுண்ஒலி அசைவுகளை ஆர்மோனியத்தில் மீட்க முடியாது என்பதனால் அது ஒதுக்கி வைக்கப்பட்டது.

ஆங்கில இசை மற்றும் இசைக்கருவிகளின் இணைப்போடு ***மெல்லிசை*** என்ற வடிவம் வளர்ச்சியடையத் தொடங்கியது. திரை இசை, வழிபாடு, விடுதலைக் கவிதை, சீர்திருத்தக் கவிதை, காதற் கவிதை, கற்பித்தலுக்குரிய பாடல் முதலியவற்றுக்கு மெல்லிசைப் பயன் படுத்தப்படுகிறது. மெல்லிசைக்கு ஆர்மோனி யம் துணைசெய்தது.

இலகுவாக அனுபவிக்கக்கூடிய இசையாக அது அமைந்தது. "வானொலி வளர்த்த இசை" என்றும் அது அழைக்கப்படும். மெல்லிசை வாயிலாகவே ஈழத்துப் பாடல்களை இலங்கை வானொலி வளர்த்தது. அதற்குரிய பாடல்களை ***இ.முருகையன், சில்லையூர் செல்வ ராசன், என்.சண்முகலிங்கன், இ. இரத்தினம்*** முதலான கவிஞர்கள் எழுதினர். அதிகளவு இசைக்கருவிகளைப் பயன்படுத்தல், அந்த இசைக்குரிய பிறிதொரு சிறப்புப்பண்பு.

"கலப்பிசை" (Remix), "இணைப்பிசை" (Fusion), "பொப்இசை" முதலாம் வடிவங்களும்

வளர்ச்சியடையத் தொடங்கின. பழைய பாடல் களைப் புதிய வடிவில் பாடுவது, நாட்டார் இசையுடன் கலந்து பாடுவது, பிறமொழிகளோடு கலந்து பாடுவது ''கலப்பிசை''யாகும்.

வேறுபட்ட இசை வகைமை *(Genres)* இணைத்துப் பாடுவது ''இணை இசை''யாகும். இசையில் செழுங்கலவை *(Blend)* நிலை அதில் ஏற்படுத்தப்படுகிறது. வேறுபட்ட பண் பாடுகளை விளங்கிக் கொள்வதற்கும் அது வழிவகுக்கின்றது.

மெல்லிசைப் பண்பு, இலகுப் பண்பு, வர்த்தகப் பண்பு முதலியவற்றை ''பொப் இசை'' கொண்டுள்ளது. கருத்துப் பரவலுக்கும் அந்த இசை பயன்படுத்தப்படுகிறது.

புதிய வகை இசைக் கோலங்களை இலங்கைத் தமிழ்ச் சூழலில் வளர்த்தவர்களுள், ***கண்ணன்***, ***நித்தி. கனகரத்தினம்***, ***எ.ஈ.மனோகரன்***, ***முத்தழகு*** முதலியோர் முக்கியமானவர்கள், ***கண்ணன்*** அவர்களின் அரை நூற்றாண்டுக் கால மெல்லிசைப் பணியைக் கௌரவித்தது கொழும்புத் தமிழ்ச் சங்கம் *2025*ஆம் ஆண்டு ''தலைக்கோல்'' விருது அவருக்கு வழங்கியது.

தமிழ்த் தேசிய உணர்வுக்கு வலுவூட்டலில் **புதுவை இரத்தினதுரை**யின் பாடல்கள் இசை ஓசையினையும், பேச்சு ஓசையையும் இணைத்து மெல்லிசை வடிவங்களாயின.

சுதந்திரத்துக்குப் பின்னர் அத்தகைய மெல்லிசை வளர்ச்சிக் கோலங்கள் மேலெழுந்தன. அதேவேளை மக்களிய இசையிலும் மீள் எழுகை நிகழ்ந்தது. மலையகம், கிழக்கு மாகாணம், வடமாகாணம் முதலியவற்றின் மக்களியப் பாடல்கள் தொகுக்கப்பட்டன. மக்களிய இசையைப் பதிவு செய்தலும் மேற் கொள்ளப்படலாயின.

தமிழ்த்தேசிய இனச்சால்பிய அடையாள நிறுவல், தனித்தமிழ் இயக்கம், தமிழிசை இயக்கம் முதலிய ஈழத்தமிழர் இசை வளர்ச்சி யில் ஊன்றிய செல்வாக்கை ஏற்படுத்தின.

அண்ணாமலை இசைக்கல்லூரி *1929*ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது. ''இசைக்கலைமணி'' ''நாட்டியக்கலைமணி''ப் பட்டப்படிப்புகள் *1940*ஆம் ஆண்டில் அங்கு தொடங்கப்பெற்றன. தமிழ் இசை வளர்ச்சியின் நடுநிலையமாக அண்ணாமலைப் பல்கலைக்கழகம் செயற்படத் தொடங்கியது. இசை வல்லுனர் பலர், அங்கு பேராசிரியர் பணிக்கு அமர்த்தப்பட்டனர்.

மிடற்று இசையிலும் கருவி இசையிலும் கலைமணிப் பட்டம் பெற, இலங்கை மாணவர் அங்கு சென்று வந்தனர். இலங்கையில் ஆசிரியப் பணிக்கு அமர்த்தப்பட்ட அவர்களின் இசைப்பணி சிறப்புப் பதிவுக்குரியது. தரமான இசை அனுபவத்தை வளர்க்க அவர்களின் இயங்கு பணி துணைசெய்தது.

***எம்.எஸ்.சுப்புலட்சுமி***, ***தண்டபாணி தேசிகர்***, ***மதுரைச் சோமசுந்தரம்*** முதலானோர் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டனர். இலங்கைத் தமிழ் சூழலில் நிலவிய தரமான இசைச்சுவை அனு பவம் மேலும் மெருகுபெற்றது.

இவ்வேளையில் இலங்கையில் உள்ள தவில் நாதசுரக்கலைஞர்கள் மேற்கொண்ட தரமான இசைக்கலைப் பணியையும் குறிப்பிட வேண்டும்.

தரமான இசைச்சுவையை ஊர்கள் தோறும் வளர்ப்பதில் அவர்கள் நீண்ட பங்காற்றி வருகின்றனர். அதேவேளை திரைப்படங்களின் செல்வாக்கினால் திரைப்படப் பாடல்களை மீள வாசிக்கும் கிளைச் செயற்பாடும் வளர்ச்சி பெற்று வருகிறது.

***கலாநிதி என்.கே.பத்மநாதன்***, ***கலாநிதி பஞ் சாபிகேசன்*** முதலாம் பெரும் கலைஞர்கள் திரைப்படப் பாடல்களை வாசிப்பதைத் தவிர்த்துக் கொண்டனர்.

சேர்.பொன். இராமநாதனுடைய மருகர் எஸ். நடேசபிள்ளை *1960*ஆம் ஆண்டு ''இராமநாதன் இசைக்கல்லூரி''யை நிறுவியமையும், பெரும் இசை வல்லுனர்களைத் தமிழகத்திலிருந்து அழைத்துவந்து பாடம் நிகழ்த்தியமையும் ஈழத்து இசை வளர்ச்சியை மேலெழச் செய்தது. தொடர் வளர்ச்சியடைந்த அந்த நிறுவனத்தை *1975*ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பொறுப்பேற்று கல்விச் செயற்பாடுகளை முன் னெடுத்தது.

இக்கட்டுரை ஆசிரியர், இராமநாதன் நுண் கலைத்துறையின் தலைவராகப் பணிபுரிந்த வேளை, *1999*ஆம் ஆண்டில் இசை மற்றும் ஆடல் துறைகளில் பட்டப்படிப்புகள் தொடக்கப்பெற்றன. அதற்குமுன்னர் அங்கு பயின்ற மாணவர் களுக்கு ''இசைக்கலைமணி'' ''நாட்டியக் கலைமணி'' என்ற சான்றிதழ்களே வழங்கப் பெற்றன. இசையில் பட்டப்படிப்பு தொடங்கப் பெற்றமை வளர்ச்சிக்கு மேலும் எழுச்சியூட்டியது. தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் இசைப்பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இசை அளிக்கை நிலையிலும், ஆய்வு நிலையிலும் ஏற்றங்கள் நிகழத் தொடங்கின. இரு பல்கலைக்கழகங்களிலும், கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் ஆண்டுதோறும் இசை ஆய்வு மாநாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பெரும் இசைக்கலைஞர்களைக் கௌரவித்து பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி வருதலும், கொழும்புத் தமிழ்ச் சங்கம் "தலைக்கோல்" வழங்குதலும் பதிவுக்குரியவை.

அறிவும், ஆய்வும், அளிக்கைகளும் தொடர் வளர்ச்சிகளைக் கொண்டவை. வளர்ச்சியானது தரநிலையில் உன்னதங்களை எட்டி வருகிறதா என்ற ***அகநிலைத் திறனாய்வு*** முக்கியமானது.

உலக இசை வளர்ச்சியும், இசைத் தேடலும் சமூகவியல், உளவியல், தொழில் நுட்பவியல் ஆய்வுகளை அடியொற்றி ஆழ்ந்து வளர்ந்து செல்கின்றன. இசையின் அரசியல் ஆராயப் படுகிறது. இசை வர்த்தகப் பண்டமாக்கப்படுதல் நுணுகி நோக்கப்படுகிறது.

வளர்ந்து வரும் இளம் தலைமுறையினரிடத்தே சுவையை ஏற்படுத்துவதில் மரபுவழி இசையின் மட்டுப்பாடுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

உலக விடுதலை இயக்கங்களில் இசையின் வகிபாகம் ஆய்வுப் பொருளாகின்றது. இசையில் செயற்கை நுண்மதி பிரயோக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இசைச் சிகிச்சைமுறை தொடர்பான செயல் நிலை ஆய்வு (Action Research) முன்னெடுக்கப் படுகின்றது. இசை அளிக்கையில் புதிய இசைக் கருவிகளின் பயன்பாடு பல நிலைகளிலே முன்னெடுக்கப்படுகிறது.

மக்களிய இசையின் பலமும், வளமும், ஆற்றலும் மீட்டெடுக்கப்பட்டு, மீள் ஆளுகைக்கு உட்படுத்தப்படுகிறது. அதனைப் பயன்படுத்திப் புதிய இசை வடிவங்கள் உருவாக்கப்படுகின்றன.

உலக நிலையில் இசை ஆய்வுகளும், அளிக்கைகளும், மேலோங்கிவரும் நிலையில், எமது நடப்பியல் நிலைவரத்தை அகநிலைத் திறனாய்வுக்கு உட்படுத்துதல் நெருடும் தேவையாகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக் கழகங்கள் அந்தப் பணியை முன்னெடுக்க வேண்டும். ஈழத்துக்கென்று தனித்துவமான முகிழ்ப்பு இசையை வளர்க்க ***பீடாதிபதி வசாவிளான் தவமைந்தன்*** மேற்கொள்ளும் ஆக்கப்பணி மேலும் நீட்சிகொள்ளவேண்டும். ***கலாநிதி சுகன்யா அரவிந்தன்***, இசைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டமை, ஈழத்துத் தமிழ் இசை வளர்ச்சிக்குரிய பொறுப்பை மேலும் அடையாளப்படுத்தியுள்ளது.

○○○

# பிரார்த்தனை

கவிதையின் அழகு எனும் விளக்கில்
நான் பிறந்தேன் அல்ல
அதை நேசிக்க கூட அல்ல

எனக்கு கிடைத்தது
எளிய ஒரு மனித இதயம்
மென்மையாக துடிக்கும் ஒன்று

ஒரு துளி துக்கம் கூட
என்னை முழுவதும் ஈரமாக்கும்
ஒரு சிறு மகிழ்ச்சி கூட
என்னை வானளாவ உயர்த்தும்
என் கண்களில் கனவுகள் உள்ளன
ஆனால் அவை
பொன்னால் அலங்கரிக்கப்படாதவை
அன்பு கிடைத்தால் சிரிப்பேன்
அன்பு மறுக்கப்பட்டால்
மௌனமாக இருப்பேன்
என் வாழ்க்கை
பெரிய ஒரு கதை அல்ல
ஆனால் உண்மையால் எழுதப்பட்டது

என் இறுதி வேண்டுதல் இதுவே
மனிதனாக பிறந்தேன் என்பதற்காக
மனிதனாகவே
இறக்க அனுமதியுங்கள்.

**கலாபூஷணம் மாவனல்லை**
**எம். எம். மன்ஸூர்**

# கண்ணீர் வாழ்க்கை

கண்களில் நீர் வைத்தான்!
உவர்ப்பையும் சேர்த்து வைத்தான்!
கனவை நெஞ்சில் வைத்து
கவலையும் சேர்த்து வைத்து
வாழடா வாழு என்று
கருவறைக்கு அனுப்பி வைத்தான்!

வந்து நான் பிறந்து விட்டேன்
வானில் அவன் நின்று கொண்டான்!
வலிய வந்த உறவுகளும்
வாடி நின்ற தாய்ப் பசுவும்
கூடி வந்த நண்பர்களும்
கொஞ்ச வந்த பைங்கிளியும்
கொண்டு வந்த சோகங்களை
குழைத்து உள்ளே அனுப்பி வைத்தேன்!

குடத்தில் கல் நிரப்பி
குளமாக்கி நீர் பருகும்
காக்கைகள் பல வந்து
கூடாரம் அமைத்ததம்மா!

கடுகுக்குள் மரத்தை வைத்தாய்
மலருக்குள் மணத்தை வைத்தாய்
கருவுக்குள் என்னை வைத்தாய்
எனக்குள் ஏன் கவலை வைத்தாய்
இறைவா?

வானத்தில் வட்டமிடும் வல்லூறு
வடிவத்தில்
சாவு என்னை சாகடிக்க
சதித் திட்டம் போடுதம்மா!

தூரத்தில் நின்று கொண்டு
துதி பாட கேட்பதென்ன?
பக்கத்தில் வந்தமர்ந்து
பக்தி மார்க்கம் சொல்லி வைப்பாய்!

போதுமையா இவ்வாழ்வு
போகும் இடம் புரியவில்லை!
அனுப்பி வைத்த உனக்கு இன்னும்
அழைத்துக் கொள்ள தெரியல்லையே!
ஆசைகளை துறந்து இங்கே
அம்மணமாய் நிற்கின்றேன்!
அழைத்து என்னை அணைத்துக்கொள்
ஆண்டவனே பரம் பொருளே!

**கிறிஸ்டி நல்லரெத்தினம்**
(அவுஸ்திரேலியா)






# தீவில் கடைசி நாள்

யே. கிறித்துறாஜா
முதுகலை மாணவன்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

கண்களை இடதுபக்கம் திருப்பினால் பரந்து விரிந்த நீலக்கடலையும், அலைகளோடு போராடும் கரையினையும், அதன் ஆர்ப் பரிப்பையும் காண்பான். வலதுபக்கம் திரும்பினால் முள்ளுப் பற்றையாய் வளர்ந்த செடிகளையும், ஊதா நிறப் பூக்களோடு படர்ந்திருக்கும் அவரைக் கொடிகளையும் காண்பான். இரண்டு பக்கங்களும் வேண்டா மென்று கண்களை நடுவே கொண்டுவந்தால் அகன்ற வான்வெளியில் கண்சிமிட்டும் நட்சத்திரங்களைத்தான் காண்பான். எந்தப் பக்கம் திரும்புவது, எதைப் பார்ப்பது என்பதை அறியாமல் சிலநேரம் கண்களை மூடவும் செய்கிறான். தலையில் கட்டியிருந்த தலைப் பாகையை தலையணையாக்கி, மணலாலும் ஊரியாலும் செய்த படுக்கையில் படுத்தவாறே காற்றைத் துணைக்கு அழைத்துக் கொண் டிருந்தான், செபஸ்ரியான்.

"குருசு வெள்ளிக்கு நேரா நிலவு வெளிக் கிடவும் சொல்லு... வலை இழுக்க வெளிக் கிடுவம்" என்று நோபேட் சொன்னவை ஞாபகம் இருக்க, இடையிடை கண்கள் தென்திசையை நோக்கியும் சென்றன.

தென்னிலங்கை முகங்காட்டி, பாம்பில் பள்ளி கொண்டிருக்கும் திருமால்போல யாழ்ப்பாணம் நோக்கிக் கால்களையும், இந்தியாவை நோக்கித் தலையணையையும், மன்னாரை நோக்கி முகத்தையும் வைத்த வாறு ஒருக்களித்த நிலையில் படுத்திருந் தான் செபஸ்ரியான். அவனது தலைமாட்டுப் பக்கத்தில்தான் அந்தோனியார் தேவாலயம் காணப்படுகிறது. கோயிலுக்கென்றே தீவு அமைந்ததுபோல தனித்தீவில் கோயில் கொண்டிருந்தார் புனிதராம் அந்தோனி. 'அந்தோனி எனும் நாமம் அடியோர்க்குத் தஞ்சம்' என்று பாடிக்கொண்டு இலங்கை மற்றும் இந்தியப் பக்தர்கள் என இருதரப்பினரும் இணைந்து திருவிழாக்காணும் புனித நில மாயிற்று இவன் படுத்திருக்கும் பூமி. புனித இடங்களுக்கு தாழ்த்தப்பட்டவனும், மாமிசம் புசிப்பவனும் வருவது தீட்டு, எனும் சட்டம் இத்தீவில் அறிமுக மாகாதவரை செபஸ்ரியான் போன்ற மீனவர்கள் இத்தீவுக்கு வருவதற்குத் தடை ஏது.

தடையேதும் இல்லையென்று நினைத்தால் அதுவும் பிழையானதே. தீவைக் காவல் செய்ய கடற்படையினர் உள்ளனர். சிங்கள மொழிபேசும் இலங்கைக் கடற்படை வீரர்களின் பூரண கட்டுப்பாட்டிலும், கண்காணிப்பிலும் உள்ள இடம்தான் இந்தக் ***கச்சதீவு***.

எவ்வாறாக இருந்தாலும் செபஸ்ரியான் போன்ற பல நூறு மீனவர்களின் பாதம் பட்ட இடமாக உள்ளதனாலேயே இன்றும் செபஸ்ரி யானால் இத்தீவில் இளைப்பாற முடிகிறது.

"கொஞ்சம் இருந்துக்கோ, நான் அந்த மெழுகுவர்த்தித் தட்டுக் கல்லுவரை போய்ற்று வாறன்" என்றபடி கையில் மூன்று மெழுகு வர்த்திகளை ஏந்தியபடி தேவாலயத்தை நோக்கி நகர்ந்தான் நோபேட்.

தேவாலயத்தின் முன்பகுதியில் இருட்டு வண்ணத்தில் அமைக்கப்பட்டிருந்தது மெழுகு வர்த்திப் பீடம். மெழுகு உருகி ஓடிய தடங்கள் அப்படியே இருக்கின்றன. அப்பக்திக் குறியீடு களுக்கு நடுவே, தான் கொண்டுவந்த மெழுகு வர்த்திகளையும் ஏற்றுவதற்குத் தயாரானான். இடுப்பில் சொருகியிருந்த தீப்பெட்டியை எடுத்து மெழுகுவர்த்திகளை ஏற்றியபின்னர், தேவால




யத்தை நோக்கி முன்பக்கம் திரும்பி இரு கரங்களையும் குவித்து மன்றாடிக் கொண்டான்.

மன்றாடச் சென்றவன் திரும்பி வந்தாலும் செபஸ்ரியான் இன்னும் அசதியிலிருந்து மீளவில்லை. "நேரமாச்சுது வெளிக்கிடு" என்ற நோபேட்டின் சத்தத்திலேயே செபஸ்ரியான் நினைவுக்கு வந்தான்.

"கரையில கிடக்கிற எல்லாத்தையும் ஒண்டு விடாம எடுத்துவை, திரும்ப இங்க வரக் கிடைக்காது, எல்லாப் பொருட்களையும் எடுத்து வச்சிற்றாயெண்டா, கடைசியா இந்த இரண்டு ஐஸ் பெட்டிகளையும் வச்சுப்போட்டு வள்ளத்த தள்ளிரலாம்" என்றான் நோபேட்.

"நீ சொல்லுற மாதிரிக்கு எல்லாத்தையும் எடுத்து வச்சிரலாம். ஆனா, வள்ளத்த தள்ள முதல் ஒரு வேலைய முடிச்சிற்ரு வரணும், நீ அத மறந்திட்டாய் போல"

"அதென்ன விசயம்"

"நாளைக்கு விடிஞ்சா நாலாவது நாள். நாம இஞ்ச நிண்ட இந்த மூண்டு நாளுக்கும் நம்ம மாத்தையாமாருக்கு மீன் குடுத்திற்ரு வந்தம் எல்லோ... இண்டைக்கு கடைசி நாள். நாளைக்கு விடிஞ்சா நாம நம்மட ஊர்ல நிப்பம். அதால இப்ப ஐஸ்பெட்டிக்க கிடக்கிற மீனில ஒரு ஐஞ்சாற எடு. போய் குடுத்திற்ரு அப்பிடியே சொல்லிட்டும் வந்திர்றன்" என்றான், செபஸ்ரியான்.

"மீன் குடுக்கிற விஷயத்த மறந்துதான் போய்ற்ரன். ஆனா, இங்க வந்து இறங்கேக்க நடந்த ஒண்டையும் நான் மறக்கலப்பா. சரி நீ போய் குடுத்திற்ரு வந்திரு" என்றபடி நோபேட் பொருட்களைப் படகில் ஏற்றத்தொடங்கினான்.

இந்தத் தீவு இந்திய இலங்கைக் கடற்பரப்பின் நடுவே அமைந்துள்ள தீவு. இந்தத் தீவைச் சூழவுள்ள கடற்பரப்பில் மீன்பாடு அதிகம் என்றபடியால் இந்திய மீனவர்களும் இலங்கை மீனவர்களும் தங்கள் தொழில்களோடு வந்துசேரும் இடமாக உள்ளது. இலங்கை அரசிற்கு சொந்தமான இந்தத் தீவைப் பாது காக்கவும், கண்காணிக்கவும் என தீவில் கடற்படையினர் முகாமிட்டுள்ளனர். இந்திய இலங்கை கடல்சார் அரசியலில் அடிக்கடி பேசப்படும் இடமும் இதுதான்.

"தமிழக மீனவர்கள் பத்துப் பேர் கைது", "இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் தமிழக மீனவர் ஒருவர் பலி", "இந்திய மீனவர்கள் தங்கள் படகுகளோடு இலங்கை கடற்படையால் கைது" என அடிக்கடி வலம்வரும் செய்திகள் இத்தீவை அண்டியே நடைபெறுவன.

இத்தீவில் வந்திறங்குவது அவ்வளவு இலகுவானதன்று. வருடத்தில் ஒரு தடவை மட்டுமே நடைபெறும் அந்தோனியார் தேவாலயப் பெரு நாளில் கலந்துகொள்வதற்கு மட்டும், இந்திய இலங்கை மக்கள் இங்கு செல்ல அனுமதிக்கப் படுகின்றனர். மற்றையபடி அனுமதியில்லை. ஆனால், இவ்விடயத்தில் மீனவர்களுக்கான அனுமதிகள் சற்று வேறானவை.

இந்தத் தீவுக்கு மிகத் தொலைவில் மக்கள் வசிக்கக்கூடிய தீவுகள் உள்ளன. அத்தீவுகளில் இருந்து வரும் மீனவமக்கள் தொழில் நிமித்தம் தங்கிநிற்க வேண்டும் எனக்கூறும்போது அதற்கு அனுமதி அளிப்பதும், மறுப்பதும் இங்குள்ள கடற்படையினரின் கைகளிலேயே உள்ளது. தேசிய அடையாள அட்டையைக் கேட்டு விசாரிப்பது, முன்பின் பழக்கமிருந்தால் அனுமதியளிப்பது, சிலவேளைகளில் அனுமதி மறுப்பது, போன்றன இம்மீனவர்களுக்கு நேரும் நிலைமைகள்தான்.

மூன்று நாட்களுக்கு முன்னர் செபஸ்ரியான், படகில் இருந்த மீன்களைக் காட்டி, அதிலுள்ள சில மீன்களை கடற்படையினருக்கு தட்சணையாகச் செலுத்தி தங்குவதற்கு அனுமதி பெற்றான். இவ்வாறு கடினப்பட்டு முதல்போட்டு

தங்குமிடம் வாங்கிய பின், தொடர்ந்து மூன்று நாட்கள் மீன்பிடியில் ஈடுபட்டு, பிடித்த மீன்களை ஐஸ்பெட்டிகளில் சேமித்துவைத்தான். இறுதி நாளாகிய இன்று பிடிபடுகின்ற மீன்களையும் ஐஸ்பெட்டிகளில் போட்டுக்கொண்டு நாளை காலையில் தன் தீவை அடைந்துவிடுவான்.

தாங்கள் இப்பொழுது புறப்படப்போகும் செய்தியைத் தெரிவித்து, கையிலுள்ள மீன்கள் சிலவற்றையும் கொடுத்து ''அப்பி கிகில்லா என்னம்'' என்ற வார்த்தையோடு செபஸ்ரியான் கடற்படையினரிடமிருந்து விடைபெற்றான்.

செபஸ்ரியான் எடுத்துவைக்கும் ஒவ்வொரு காலடியிலும் அவனுக்கு ஒருவகை மனவுணர்வு ஏற்பட்டது. சில வேளைகளில், தான் சஞ்ஜீவி மலையின் மேல் நிற்பதாகவும் உணர்வான். அந்தக்காலத்தில் இவனது அம்மையா நீக்கிலான் சொன்னவை இவனுக்கு இப்போதும் ஞாபக மிருக்கிறது. இலங்கையில் இராமனின் படைகள் மூர்ச்சையாகி கிடந்தவேளையில் சஞ்ஜீவி மலைக்கு மூலிகை தேடிச்சென்ற அனுமன், மூலிகை எதுவெனத் தெரியாத நிலையில் சஞ்ஜீவி மலையையே பெயர்த்து எடுத்து வந்தான் என்றும், ஆகாய மார்க்கமாக வரும்போது அனுமனின் கச்சைப் பகுதியிலிருந்து ஒரு பகுதிமண், தங்கள் தீவுக்கு அருகில் விழுந்த தென்றும், அதனைக் கச்சதீவு என்று அழைப்ப தாகவும் கூறியிருக்கிறார். அவ்வாறு கேள்விப் பட்டவனுக்கு இந்த மண்ணின் மீது நடக்கும் போதெல்லாம் சஞ்ஜீவி மலையின் மேல் நடப்பதாகவே எண்ணம் வரும்.

''மாத்தையாக்களிட்ட சொல்லிட்டன். இனி வெளிக்கிடலாம்'' என்றபடி நோபேட்டின் அருகில் வந்தான், செபஸ்ரியான்.

''எல்லாத்தையும் எடுத்துவச்சிற்ரன். இனி வள்ளம் தள்ளுறதுதான் வேல'' என்றான், நோபேட்.

வள்ளத்தை தள்ளி கடலில் இறக்கிவிட்டு, தெற்கு நோக்கிக் கைகளையுயர்த்தி அந்தோனி யாரை வேண்டிக்கொண்டனர் இருவரும். கோயிலுக்கு நேராக படகைக் கொண்டுவந்து நீரால் கழுவிக்கொண்டு வலையை நோக்கிப் படகைச் செலுத்தினர்.

கச்சான்காற்று அளவாக வீசி அவர்களது வலை இழுக்கும் வேலையை இலகுபடுத்திக் கொண்டிருந்தது. வலையைப் பிடித்து, இருபது நிமிடங்கள் இருக்கும். அதற்கிடையில் கொழு கொழுத்த கட்டிபோன்ற ஒன்று கைகளுக் கிடையில் வந்து சென்றதை வலையை இழுத்துக் கொண்டிருந்த செபஸ்ரியான் உணர்ந்து கொண்டான். அது சொறி என்று சொல்லப்படும் ஒரு வகை உயிரி. இவ்வுயிரி மனித தோலில் பட்டால் புறத்தோலில் எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது. மாறாக கைகாலில் இருந்து நெஞ்சுப் பகுதிவரை வலியும் இழுப்பும் இருக்கும். அவ்வாறான சொறிதான் இன்று செபஸ்ரி யானுக்கு பட்டிருக்கிறது.

விடயத்தை நோபேட்டிடம் சொன்னான் செபஸ்ரியான். வலைகளை இழுத்து முடிக்க குறைந்தது ஒன்றரை மணித்தியாலயங்களாவது தேவை. வீட்டை அடைய இன்னும் நான்கு மணித்தியாலங்களாவது எடுக்கும். நோபேட்டுக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை.

உடல் முழுவதும் உளைவு. நெஞ்சுப் பகுதி பொறுத்து சுவாசம் இடையிடை தடைப் படுகிறது. உடலின் எல்லாப்பாகமும் தாக்கப் படுவதுபோல் நோவு. தாங்கமுடியாமல் அழுகையும் வந்துவிட்டது செபஸ்ரியானுக்கு. இழுக்கவேண்டிய வலைகளை அப்படியே விட்டுவிட்டு அருகில் உள்ள கடற்படையினரிடம் உதவிகேட்கும் யோசனையில் படகினை கரைக்குத் திருப்பினான் நோபேட்.

பதினைந்து நிமிடத்தில் கச்சதீவு மண்ணை வந்தடைந்தனர் இருவரும். படகின் கடையால் பகுதியில் இருந்த நோபேட் முன்பகுதிக்கு வந்து செபஸ்ரியானின் கைகளைப் பிடித்து தூக்கும்போதே தெரிந்தது செபஸ்ரியானின் உடலில் உயிர் இல்லை என்பது.

நேரம் இரவு பதினொன்றாகியிருந்தது. அந்தோனியாரின் தலத்தில், இவன் நம்பிய சஞ்ஜீவி மலை மண்ணில் இவனது உடலைக் கிடத்தினான், நோபேட். இவனது வரவினைப் பார்த்திருக்கும் மனைவி பிள்ளைகளுக்கு விடயத்தைக் கூறி, உடலை ஒப்படைக்க வேண்டிய நிலையில் நோபேட். நேரம் தாழ்த் தாமல் படகைத் திருப்பி இயக்க ஆரம்பித்தான். படகு புறப்பட்டது. இத்தீவில் கடைசிநாள் செபஸ்ரியானுக்கு இவ்வாறே முடிந்தது.

❍❍❍

# கவிதைகளில் உணர்வு வெளிப்பாட்டுக்கு வல்லின மெல்லின எழுத்துக்களின் பங்களிப்பு



கெ.சித்திரவேலாயுதன்

**க**விதைகளிலே கோபம், ஆவேசம் மற்றும் குதூகலம், சோகம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்த முறையே வல்லின எழுத்துக்கள், மெல்லின எழுத்துக்களைக் கவிஞர்கள் கையாள்வதால் அத்தகைய கவிதைகளை வாசகர்கள் படிக்கும்போதே அவ்வப் பாத் திரங்களின் உணர்வு வெளிப்பாட்டினை உள்ள படி உள்வாங்கக்கூடியதாக அமைகிறது.

முதலில் கோபாவேசத்தை வெளிப்படுத் தும் பாடல் ஒன்றைப் பார்ப்போம். கம்பராமா யணத்தில் கைகேயிக்குக் கொடுத்த வரத் தினால் சூழ்நிலைக் கைதியாகிய தசரதன் முடிசூட்டவிருந்த மூத்த மைந்தன் இராமனை வனவாசம் அனுப்பிவிட, இராமன் கங்கையைக் கடந்து செல்லும் சூழலில், குகன் இராமனின் ஆருயிர் நண்பனாக மாறுகிறான். இதற்கிடையே பரதன் படைகளுடன் வருவதைக் கண்டு குகன் கோபாவேசத்துடன் கூறுவதாக அமைந்த பாடல் இதோ,

ஆழ நெ**டு**ந்திரை **ஆறு** கடந்திவர் போவாரோ
வேழ நெ**டு**ம்ப**டை கண்டு** விலங்கி**டு**ம் வில்லாளோ
தோழமை என்**ற**வர் **சொ**ல்லியே
**சொ**ல்லொரு**சொ**ல்அன்**றோ**
ஏழமை வேடன் இ**றந்தி**லன் என்**றெ**னை ஏ**சா**ரோ

இப் பாடலில் ***க் ச் ட் த் ப் ற்*** என்னும் வல்லின மெய்யெழுத்துக்களிலிருந்து பிறக்கும் உயிர் மெய் எழுத்துக்களே மிகுத்து வருவதால், இவற்றைச் சந்தத்துடன் படிக்கும்போது படிப்பவர்கள் மனதும் குகன் பாத்திரத்துடன் ஒன்றிவிடுவது இயல்பாகிவிடும்.

இதுபோலவே இராமாயாணத்திலே இரா மனுடனான முதல்நாள் போரில் இராவணன் தோல்வியடைந்து தன் படைகள் மடிவதைக் கண்டு பெரும் அதிர்ச்சியும் கோபமும் அடைகிறான். இராமனின் வலிமையை உணர்ந்தாலும் தன் மானத்தைக் காத்துக் கொள்ளவும், தம்பியான கும்பகர்ணனின் பெரும் சக்தியைப் பயன்படுத்தவும் கருதி தூதுவர்களை அனுப்பி கும்பகர்ணனை எழுப்பச் சொல்கிறான். தூதுவர்கள் கும்பகர்ணனின் மாளிகைக்குச் சென்று அவனது நித்திய உறக் கத்தைக் கலைக்கும் வேளையில், "உன் மாய வாழ்வு அழியும் நேரம் வந்துவிட்டது எழுந் திராய்!" என இப்பாடலைப் பாடி எழுப்பு கின்றனர். இதோ அந்தப் பாடல்:-

உறங்குகின்ற கும்பகன்ன! உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்குகின்ற தின்று காண் எழுந்திராய்! எழுந்திராய்!
கறங்கு போல விற்பிடித்த கால தூதர் கையிலே
உறங்குவாய் உறங்குவாய்! இனிக் கிடந்துறங்குவாய்!

இதன் பொருள்: "நீண்ட காலமாக உறங்கிக் கொண்டிருக்கும் கும்பகர்ணனே, இராவணனின் பொய்யான மாய வாழ்வு இன்று அழியத் தொடங்குகிறது. சக்கரத்தைப் போன்ற வில்லை ஏந்திய கால தூதர்களின் கையில் இனி நீ என்றும் இறந்து உறங்கப் போகிறாய் எனவே எழுந்து வா" என்பதாகும்

இங்கும் இப்பாடலில் க் ச் ட் த் ப் ற் என்னும் மெய்யெழுத்துக்களிலிருந்து பிறக்கும் உயிர் மெய் எழுத்துக்களே மிகுத்து வருவதால் இவற்றைச் சந்தத்துடன் படிக்கும்போது படிப்பவர்கள் மனதும் கும்பகர்ணனைத் துயில் எழுப்பும் பாத்திரங்களுடன் ஒன்றிவிடுவது இயல்பாகிவிடும்.

இதைவிட இப்பாடலில் காணப்படும் இன்னொரு அழகு என்னவென்றால்

தனதனந்த தனதனந்த தனதனந்த தானனா
தனதனந்த தனதனந்த தனதனந்த தானனா

என வரும் சந்தம், இரும்புத் தடிகளால் அடித்தும் எழும்பாத கும்பகர்ணன் மீது குதிரைகளையும் யானைகளையும் ஓடவிட்டு எழுப்பும் முயற்சிக்கேற்றவாறு குதிரைகளினதும், யானைகளினதும் பாதஒலி ஏற்படுத்தும் சத்தம் போல அமைந்திருக்கிறது.

❍

இனி மெல்லின எழுத்துக்கள் கவிதைகளில் செலுத்தும் செல்வாக்கினைப் பார்ப்போம். இங்கும் முதலில் இராமாயணத்தில் வரும் பாடல் ஒன்றையே குறிப்பிடுகிறேன்.

சூர்ப்பனகை தன் அரக்கி வடிவத்தை மறைத்துக் கொண்டு அழகான பெண்போல உருக் கொண்டு இராமனை மயக்க வருகிறாள்.

பஞ்சி ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க
செஞ் செவிய கஞ்சம் நிகர் சீறடியள் ஆகி
அஞ்சொல் இள மஞ்ஞை என அன்னம் என மின்னும்
வஞ்சி என நஞ்சம் என வஞ்ச மகள் வந்தாள்.

செக்கச் சிவந்த தாமரை மலருக்கு நிகரான சிறப்பான அடிகளை மெல்ல மெல்ல எடுத்து இனிமையாக அகவும் மயில்போல, அன்னம் போல மின்னும் வஞ்சிக் கொடிபோல விஷம் போல வந்தாள்.

இப்பாடலில் வரும் **ங் ஞ் ண் ந் ம் ன்** என்னும் மெல்லின மெய்யெழுத்துக்களிலிருந்து பிறக்கும் மெல்லின உயிர் மெய் எழுத்துக்கள் மிகுதியாக வருவதால் பாடலில் சூர்ப்பனகை கொண்ட போலி உருவமாயினும் அழகை குதூகலமாக இரசிக்கக் கூடியதாக இருக்கிறது.

இதற்கு மாறாக மெல்லின உயிர் மெய் எழுத்துக்களால் வரும் பாடல்கள் மிக சோகமான உணர்வுகளையும் வெளிக்கொணரும் என்பதற்கு உதாரணமாக அரிச்சந்திர புராணத்திலிருந்து ஒரு பாடலைப் பார்ப்போம்.

பனியா னனைந்து வெயிலால் உலர்ந்து
பசியா லலைந்து முலவா
அனியாய வெங்க ணரவா லிறந்த
அதிபாவ மென்கொ லறியேன்
றனியே கிடந்து விடநோய் செறிந்து
தரைமீ துருண்ட மகனே
இனியாரை நம்பி உயிர்வாழ்வ மென்ற
னிறையோனும் யானு மவமே

அயோத்தி மன்னன் அரிச்சந்திரன் விஸ்வாமித்திர முனிவருக்கு வழங்கிய சத்தியத்தை நிலைநாட்ட அரசுரிமையை விடுத்து, அன்பு மனைவி சந்திரமதியுடனும் அருமை மகன் லோகிதாசனுடனும் காசி நோக்கிய பயணத்தில் காடு மேடெல்லாம் இரவு பகலாய்த் திரிந்து, இறுதியாக மனைவியையும் மகனையும் ஒரு கோயில் அர்ச்சகருக்கு அடிமையாக விற்று, தானும் ஒரு சுடுகாட்டில் பிணம் எரிக்கும் சேவகனாய்த் தொழில் பார்த்த கதை பலரும் அறிந்ததே. அச் சந்தர்ப்பத்தில் ஒருநாள் அந்த அர்ச்சகன் லோகிதாசனை தர்ப்பைப் புல் அறுத்துவர ஏவினான். அங்ஙனம் சென்ற பாலகன் காட்டில் அரவம் தீண்டி இறந்ததைக் கூடச் சென்ற சகாக்கள் மூலம் அறிந்த சந்திரமதி காட்டுக்குச் சென்று மாண்டுபோன மைந்தனை மடியில் வைத்து அழுது புலம்பியதாக அமைந்துள்ளது இப்பாடல்

“பனியினால் நனைந்து வெயிலினால் காய்ந்து பசியால் வருந்தியும் இறவாமல் மிக்க கண்களோடு கூடிய பாம்பினால் இறந்த மிக்க பாவம் யாதோ யான் அறியேன்.” தனியிடத்திலே கிடந்து விடம் மிகுந்த தரையின்மேல் உருண்டு இறந்த மகனே! என்றன் தலைவனாகிய மன்னனும் யானும் இனிமேல் யாரை நம்பி உயிர் வாழ்வோம்.

“மகனே ! நீ எங்களுடன் பாலைவனத்து வழியாகவும், சோலைக் கானகத்து வழியாகவும் நடந்து வந்தனை! அப்பொழுது பனியாற் குளிருற்று நடுங்கினை! வெயிலாற் சுடப்பட்டு வெம்பினை! பசியாற் களைத்து விழுந்தனை! அப்போதெல்லாம் பிழைத்திருந்த நீ இப்போது பாம்பின் வாயகப்பட்டு இறந்தனை! நான் என்ன பாவஞ்செய்தேனோ அறியேன்! இது கொடிய பாவம்!” என்று புலம்பினாள்.

சந்திரமதியின் இந்த நெஞ்சை உருக்கும் புலம்பலுக்கு மேலே காட்டிய பாடலில் மிகுதியாக அடக்கிய மெல்லின எழுத்துக்கள் வலுவூட்டி நிற்பதைக் காணக்கிடக்கின்றதன்றோ.

இதுபோல இன்னும் எத்தனையோ பாடல்கள் குறிப்பாக கந்தபுராணம் யுத்த காண்டத்தில் காட்டலாம். “ஞானத்தில்” பக்கங்கள் வேண்டுமே!

❍❍❍

சிறுகதை



# தனக்குத்தானே கல்லறைக்குழி தோண்டிய மனிதர்

கடந்த சில மாதங்களை ஸர.்.பத் மியா மிகவும் களிப்புடன் காலத்தை கடத்தியிருந்தார். சிறிது காலமாகவே அவர் மரணம் தொடர்பான கனவுகள் எதனையும் காணவில்லை. ஆனால் அவருக்கு தற்போது அவரது தூரத்து உறவினர்கள் இவ்வளவு வருடங்களாக தன்னைச் சந்திக்காததற்காக மன்னிப்பு கேட்டு புலம்புவது போன்ற கனவுகள் வருவதாக இருக்கின்றன.

ஸர.்.பத் மியா தனக்கான சொந்த கல்லறையைத் தோண்டிக் கொள்வதைப் பார்ப்பதற்காக அவரது கிராமமான ஸாஸிபூரின் கிழக்கு முனையைச் சுற்றி அனைவரும் கூடினர். கிராமத்து குஞ்சுகுறும்பான்கள் ஸர.்.பத் வாழும் அந்த பழைய குடிசையைச் சுற்றி பதுங்கியிருந்தனர், மாலை முடியும் தருணத்தில் மக்ரிப் தொழுகை முடிந்து தங்கள் தாய்மார்கள் அவர்களை தேடிவரும்வரை கல்லறைக்குழி தோண்டும் வேலை எவ்வாறு நடந்து கொண்டிருக்கின்றது என்பதை அக்கறையுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

93 வயதான மற்ற அனைவரையும் போலவே, ஸர.்.பத் மியாவின் கனவுகளும் பெரும்பாலும் தற்போது தனக்கான மரணத்தைப் பற்றியதாகவே இருந்தன. ஆனால், அவர் அவைகள் குறித்து அஞ்சியதாக இல்லை. திருமணமாகி 70 வருடத்துக்குப் பிறகு, அவரது மனைவி அமினாவும் தனது கணவர் கொண்ட மரணம் குறித்த எண்ணத்தை மிகவும் சகித்து கொண்டவளாக மாறியிருந்தாள். பல ஆண்டுகளுக்கு முன்பு அவர்களின் ஒரே மகள் ருகையா பிரசவத்தில் இறந்ததால், ஸர.்.பத்தும் அமினாவும் ஸாஸிபூரில் தனியாக தாங்கள் சந்திக்கப்போகும் மரணத்திற்காக பொறுமையாகக் காத்திருந்தனர்.

கடந்த புதன்கிழமை ஸர.்.பத்தின் வழக்கமான கனவு காட்சி அசாதாரண திருப்பத்தை ஏற்படுத்தாமல் இருந்திருந்தால், விடயங்கள் எப்பொழுதும் போலவே இருந்திருக்கும். ஸர.்.பத் தன்னுடையதும் அமினாவினதும் சடலங்கள் அவர்களின் வீட்டில் அழுகிக்கொண்டிருப்பதாக ஒரு கனவு கண்டார். அவர்களின் இறந்த உடல்களை உரிமை கோரவோ அல்லது அடக்கம் செய்யவோ யாரும் இல்லை என்பதாக கனவு அவருக்கு உணர்த்தியது. அதற்கு



ஹசீப் உர் ரஷீத் இப்தி
(பங்களாதேஷ்
ஆங்கில எழுத்தாளர்)

ஹசீப் உர் ரஷீத் இப்தி (Hasib Ur Rashid Ifti) பங்காளதேச பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் இருந்தவாறு தலைநகர் டாக்காவிலிருந்து வெளிவரும் டெய்லி ஸ்டார் பத்திரிகையில் எழுத்தாளராக உள்ளார்.



தமிழில்
சு.முரளிதரன்

பின்னரே அவருக்கு கல்லறைக்குழி தோண்டும் எண்ணம் தோன்றியது. அமினா இந்த யோசனையை முற்றிலுமாக ஏற்றுக்கொள்ளா விட்டாலும், ஸர.்.பத் பகலில் அவர்களின் கொல்லைப்புறத்தில் தனக்கான சுய கல்லறைக் குழியைத் தோண்டத் தொடங்கினார், மேலும் அதற்கு அருகில் அமைக்கப்பட்ட ஒரு கட்டில் மாதிரியான படுக்கையில் தனது இரவுகளைக் கழித்தார்.

கிராமவாசிகள் ஆரம்பத்திலிருந்தே இந்த விடயத்தில் அதி ஆர்வம் காட்டியமை காரண மாக, ஒரு உள்ளூர் பத்திரிகை இதனை ஒரு செய்தியாக பதிவுசெய்ய வந்ததன் விளைவாக அடுத்தடுத்து திருப்பங்கள் ஏற்பட்டன.

''உங்களை அடக்கம் செய்ய இந்த உலகில் யாரும் இல்லையா?" என்று மிகுந்த சிரத்தை யுடன் செய்தி சேகரிக்க வந்த பத்திரிகையாளர் கேட்டார்.

''இந்த கோடையாகும் போது எனக்கு 94 வயதாகிறது," என்று ஸர.்.பத் கூறினார், "எங்கள் குடும்பத்தில் இன்னும் உயிருடன் இருப்பவர்கள் நாங்கள் மட்டுமே. எனக்கு இங்கேயும் வேறு பலவிடங்களிலும் சில உறவினர்கள் இருக்கின்றார்கள், ஆனால், நான் பல வருடங்களாக அவர்களுடன் பேசவில்லை. அமினாவும் நானும், எங்களுக்காகவே மட்டுமே இருக்கிறோம்."

''உங்கள் பிள்ளைகள்? அவர்கள் வெளியூர் களில் வசிக்கிறார்கள் என்று நினைக்கிறேன்?" பத்திரிகையாளர் அனுதாபத்துடன் தலைய சைத்தவாறே கேட்டார்.

''இல்லை, ஐயா, "ஸர.்.பத் சிரித்தார், ''எங் களுக்கு ஒரு மகள் இருந்தாள், அவள் சில வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டாள்."

''ஓ", பத்திரிகையாளர் ஏமாற்றமடைந்தார், ''உங்கள் நிலைமைக்கு யாரையும் குறை சொல்ல வில்லையா? அரசாங்கம் உங்களைப் போன்ற வயோதிபர்கள்மீது அக்கறை செலுத்தாமல் தவற விட்டிருக்கின்றது என்று நினைக்கிறீர்களா?"

''நான் அப்படி நினைக்கவில்லை", ஸர.்.பத் மியா அந்தக் கேள்வியால் குழப்பமடைந்தார். ''ஊர் ஆட்கள் எங்களிடம் மிகவும் அன்பாக நடந்து கொண்டுள்ளார்கள். உண்மையில், என் பக்கத்து வீட்டுக்காரர்தான் இப்போது நான் பயன்படுத்தும் மண்வெட்டியை எனக்குக் கொடுத்தார்."

''என்னடா எனக்கு இதிலே உப்புச்சப்பு இருப்பதாக தெரியவில்லையே", பத்திரிகை யாளர் கேமராமேனிடம் கிசுகிசுத்தார், ''சரி பெரியப்பா, மண்வெட்டியை முதுகில் வைத்துக் கொண்டு கல்லறைக் குழி அருகே நின்று கேமராவைப் பார்க்கிற மாதிரி நில்லுங்கள்"

ஸர.்.பத் தனது லுங்கியால் முகத்தில் இருந்த அழுக்கை துடைத்துவிட்டு கேமராவுக் காக சிரித்தார். ''பெரியப்பா! நீங்கள் உள்ளே போக கல்லறையை நீங்களே தோண்டிக் கொண்டிருக்கிறீர்கள், அதிலிருந்து வெளியே வரவில்லை! சிரிக்காமல் இருங்கள்", கேமராமேன் ஸர.்.பத்தை நோக்கி வீசிய வார்த்தைகள் கொஞ்சம் தடிப்பாகத்தான் இருந்தன.

ஸர.்.பத்தின் கதை, அவரது குழப்பமான மற்றும் சீண்டப்பட்ட தோற்றமுடைய படத்துடன், டோயினிக் கோம்தி பத்திரிகையின் 7வது பக்கத்தில் 5x5 மூலையில் இடம்பிடித்தது. பின் அதன் விதி அது விரும்பியபடி நகர்ந்தது. தலைநகரில் இருந்த தி டாக்கா டைம்ஸின் ஒரு பிரக்ஞைபூர்வமான பத்திரிகையாளர் அதை பார்த்தார். டோயினிக் கோம்தியில் உள்ள வெறும் பயல்களான பத்திரிகையாளர்களுக்கு இந்த விவகாரத்தில் ஒரு கதையைக் கண்டுபிடிக்கும் தொலைநோக்கு பார்வை இல்லாமல் இருக்கலாம், ஆனால் டாக்கா டைம்ஸ் அதை எப்படி உருவாக்குவது என்று அறிந்திருந்தது.

***"இது ஸரஃபத் மியாவின் கல்லறையா அல்லது தேசத்தின் கல்லறையா?"*** மறுநாள் தி டாக்கா டைம்ஸின் 3வது பக்கத்தில் அந்த தலைப்புச் செய்தியை மக்கள் பார்த்தனர். ஒரு உதவியற்ற முதியவர் தனது சொந்த கல்லறையைத் தோண்டிய செய்தியால் சமூக ஊடகங்கள் நிரம்பி வழிந்தன, இது அனைத்து தலைமுறை களையும் சேர்ந்த மில்லியன் கணக்கானவர்களின் இதயங்களைத் தொட்டது. ஸர.்.பத்தின் இந்த கவலைக்குரிய நிலவரம் அவரை இளைஞர் களிடையே ஒரே இரவில் ஒரு தாக்கமேற்படுத்தி யவராக மாற்றியிருந்தாலும், நகரத்தில் உள்ள முதியவர்கள் ஸர.்.பத்தின் விரக்தியில் தங்கள் சொந்த பிரதிபலிப்பைக் காண்பவர்களாக இருந்தார்கள்.

இந்த சம்பவத்தில் யாரைக் குறை கூறுவது என்று விவாதிக்கும் ஒரு தொலைக்காட்சியில் காராசாரமாக விவாதங்கள் நடந்தன. ஸர.்.பத்தின் நிலைமை தற்போது ஆளும் கட்சியின் கீழ் மூத்த

குடிமக்களின் கிலேசத்தை சித்தரிப்பதாகவும், அரசாங்கத்தின் பயங்கரவாத ஆட்சியைக் குறை கூறுவதாகவும் எதிர்க்கட்சியான தேசிய கட்சி கூறியது. "ஸர.்.பத் மியா 93 வயதுவரை வாழ்வது இந்த அரசாங்கத்தின்கீழ் மருத்துவத் துறையின் விருத்தியைக் காட்டுகிறது" என்று சுகாதார அமைச்சர் அடித்துக் கூறினார், "அவர்கள் ஆண்ட 2003ஆம் ஆண்டாக இருந்திருந்தால், ஸர.்.பத் மியா தனது 70களில் அப்போதைய மோசமான சுகாதார நிலை காரணமாக இறந் திருப்பார்." என்றார்.

தொலைக்காட்சி அலைவரிசைகள் தொடர்ந்து தொடர்ந்து, ஸர.்.பத் மியா ஓய்வில்லாமல் தனது கல்லறையைத் தோண்டிக் கொண்டிருப்பதைக் காட்டின. கல்லறைக்குழி தோண்டுதல் சிறிது காலத்திற்கு முன்பு முடிக்கப்பட்டிருந்தாலும் ஊடகங்கள் அங்கு வந்து தோன்றும் ஒவ் வொரு முறையும் அவர் அதை கேமரா விற்காக தோண்ட வேண்டியிருந்தது. ஸர.்.பத் அதைப் பொருட்படுத்தவில்லை. அமினாவும் அவரும் மாலை முழுவதும் செய்திகளைப் படிப்பார்கள், "அவர்கள் என்னை என் அழகான சட்டையை அணிய அனுமதித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்." நேர்காணல் செய்ப வர்கள் எப்போதும் ஸர.்.பத் தனது கிழிந்த வெள்ளை மேலங்கியை கேமராவிற்காக அணியவேண்டும் என்று வலியுறுத்துவார்கள், அது அவரை மேலும் யதார்த்த நம்பகமாக காட்டுவதாகக் கூறுவார்கள்.

சில வாரங்களுக்குப் பிறகு, ஒரு சூட் அணிந்த ஒருவர் ஸர.்.பத் மியாவிடம் ஒரு பெரிய தொகைக்காக எழுதப்பட்ட காசோலையுடன் வந்தார், "பெரியவர் ஸர.்.பத் மியாவே, நீங்கள் எப்போது இறக்கத் திட்டமிட்டிருக்கின்றீர்கள்?"

ஸர.்.பத் காசோலையைப் பார்த்தார். காசோலையில் உள்ள பூஜ்ஜியங்களை எண்ண போராடியவாறு அவர் அண்ணாந்துப் பார்த்தார், "நான் அதைப் பற்றி உண்மையில் யோசிக்க வில்லை. அல்லாஹ் என்னை அழைத்துச் செல்ல முடிவு செய்யும் போதுதான் அது நடக்கும்."

"உங்களைப் பார்த்து சொல்கிறேன், நான் என்றால் ஒரு வருடத்திற்கும் குறைவாகவே தான் காலக்கெடு தருவேன்" என்று அந்த மனிதர் சிரித்தபடியே கூறினார் "கேளுங்க பெரியவரே, நீங்கள் இறந்த பிறகு உங்கள் கதையைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது நீங்கள் எழுதிய புத்தகத்தை நான் வெளியிட விரும்புகிறேன்."

"நான் ஒரு படிப்பறிவில்லாத மனிதன்", ஸர.்.பத் மியா சிரித்தார்.

"நீங்கள் எதுவும் எழுதத் தேவையில்லை!" அந்த மனிதர் மீண்டும் சிரித்தார், "உங்களுக்காக அதை எழுத வேறு ஆட்களை வைத்து நான் சமாளிப்பேன். நீங்கள் எனக்கு பதிப்புரிமையைக் கொடுத்தால் போதும். பெரியவரே, இப்போது ஏப்ரல் மாதம். அடுத்த சில மாதங்களுக்குள் அதைத் தயார் செய்து இந்த ஆண்டு இறுதிக் குள் அறிவிக்கலாம். நமக்குத் தெரியும் இது நடத்தவிருக்கும் புத்தகக் கண்காட்சியின் போது ஒரு சுனாமியாக உருவெடுக்கும். நீங்கள் இறப்பதற்கு முன்பே, முன்கூட்டிய ஆர்டர் களுக்காக அந்த புத்தகங்களில் நாங்கள் அதை உங்களிடம் கையெழுத்துப் பெற்றுத் தருவோம். இறந்த ஒருவர் தனது கல்லறையைத் தானே தோண்டி எழுதி கையெழுத்துப் பெற்ற புத்தகமா? மக்களுக்கு மயிர் கூச்செறியும்."

ஸர.்.பாத் முதலில் தயங்கினாலும், அன்றிரவு அமினா அவரை சமாதானப்படுத்தினாள், "இவ்வளவு நேரமும் நீ சாக வேண்டும் என்று தானே தொடர்ந்து வலியுறுத்தி வந்தாய், ருக்கையாவின் அப்பாவே," என்று அமினா கேட்டாள், "நீ எனக்கு எதையாவது சேர்த்து வைத்துவிட்டுச் செல்லப் போவது பற்றி நீ எப்போ தாவது யோசித்தாயா?" இப்போது நீ உன் மரணத்தை வைத்து உண்மையான பணம் சம்பாதிக்க போகின்றாய், அதில் என்ன தவறு?"

ஸர.்.பத் புத்தக ஒப்பந்தத்தையும், பாதி பணத்தையும் முன்கூட்டியே ஏற்றுக்கொண்டார், மீதமுள்ள தொகையை அமினா பேகத்திற்கு அவளது மறைவுக்குப் பிறகு செலுத்த வேண்டும். "எனக்கு ஏற்கனவே பெரிய தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து திரைப்பட ஒப்பந்தங்களில் சலுகைகள் கிடைக்கின்றன", என்று வெளியீட்டாளர் சிரித்தார்.

அடுத்து சில மாதங்கள் ஸர.்.பத் மியாவுக்கு மிகவும் உற்சாகமானவையாக இருந்தன. அவர் சிறிது காலமாக மரணத்தைப் பற்றி கனவு காணவில்லை. இப்போது அவருக்கு அவரது தூரத்து உறவினர்கள் இவ்வளவு ஆண்டுகளாக அவரைச் சந்திக்காததற்காக மன்னிப்பு கேட்டு புலம்புவதுபோல கனவுகள் வந்துபோயின.

**“உங்களைப் பார்த்து சொல்கிறேன், நான் என்றால் ஒரு வருடத்திற்கும் குறைவாகவேதான் காலக்கெடு தருவேன்... கேளுங்க பெரியவரே, நீங்கள் இறந்த பிறகு உங்கள் கதையைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது நீங்கள் எழுதிய புத்தகத்தை நான் வெளியிட விரும்புகிறேன்.”**



காலம் வெகு வேகமாக ஓடியது, டிசம்பர் மாதம் வந்துவிட்டது. கையெழுத்துப் பிரதி, அட்டைகள் மற்றும் முன்கூட்டிய ஆர்டர் செய்யப்பட்ட பிரதிகளில் உள்ள கையெழுத்து இடப்பட்ட பிரதிகள் அனைத்தும் திட்டமிட்டபடி தயாராக இருந்தன. துரதிர்ஸ்டவசமாக, ஸர.ஃபத் மியா இன்னும் உயிருடன் இருந்தார். “பெரியவரே, இன்னும் வலுவாக இருக்கின் றீர்கள், இல்லையா?” வெளியீட்டாளர் ஒவ்வொரு வாரமும் அழைத்து சிரிப்பார். ஆனால் விரைவில், மகிழ்ச்சியான சிரிப்புகள் உறைந்து போக தொடங்கின.

வெளியீட்டாளர் ஒரு மாலைநேரத்தே “கேளுங்க பெரியவரே, உங்களிடமிருந்து இனியும் அதை மறைக்க முடியாது”, என்றார், “உங்கள் மரணத்திற்குப் பிறகு புத்தகத்தை அறிவிப்பதே திட்டம். இந்த அறிவிப்பை வெளியிடுவதற்கு குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்பே, அதாவது பெப்ரவரியில் அறிவிப்பை வெளியிட வேண்டும். ஜனவரி முதல் வாரம் வரை உங்களுக்கு ஒரு காலக்கெடுவை நாங்கள் வழங்க முடியும்.”

“நான் என்ன செய்ய முடியும், பாபா?” உடைந்த பற்களுடன் ஸர.ஃபத் மியா சிரித்தார், “நான் ஒரு தசாப்த காலமாக மரணத்திற்காக பிரார்த்திக் கொண்டு வருகிறேன்.”

“சரி, இன்னும் அதிகமாக பிரார்த்தியுங்கள்,” வெளியீட்டாளர் கூறினார், “அல்லது என் பணத்தை எனக்குத் திருப்பிக் கொடுங்கள்.” “உங்களால் முடியாவிட்டால், ஒரு வழியைக் கண்டுபிடியுங்கள், இல்லையெனில் நான் உங்களுக்கு ஒன்றைக் கண்டுபிடிக்க உதவ முடியும்.”

அப்போது பெரும்பாலான பணத்தை செலவழித்துவிட்டதால், அதைத் திருப்பித் தர ஸர.ஃபத்துக்கு வழி இல்லை. கல்லறைக்கு அருகிலுள்ள கட்டிலில் தனது இரவுகளைக் கழிப்பதை அவர் நிறுத்திவிட்டார். ஸர.ஃபத் தனது வீட்டில் தீ விபத்து ஏற்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு, கல்லறையை மூட மண் நிரப்புவதைக்கூட சிலர் பார்த்திருந்தார்கள்.

ஸர.ஃபத் தீயில் இறந்தாலும், சிலர் அமினாவுக்கு கடுமையான காயங்கள் ஏற்படு வதற்கு முன்பே குடிசையிலிருந்து வெளியே இழுத்தெடுத்துவிட்டார்கள். ஸர.ஃபத்தின் கனவு களைப் போலல்லாமல், அவரது இறுதிச் சடங்கில் பிரபலமான கல்லறைக்குழிக்கு வெளியே ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்தனர்.


பிப்ரவரியில், டாக்கா நகரில் நடந்த அவளது கணவரின் நூல் வெளியீட்டில் அமினா பேகம் கலந்து கொண்டாள். அவள் ஒவ்வொரு நாளும் கண்காட்சி திடலில் அமைந்த அந்த புத்தக நிலையகத்தில் இருந்தாள், நூற்றுக் கணக்கானோர் அவளுடன் புகைப்படம் எடுக்க வெளியே கூடினர்.

ஸாஸிபூரில், ஸர.ஃபத்தின் தூரத்து உறவினர்கள் இறுதியாக தங்கள் தாய் நிலத்திற்குத் திரும்பினர். அவரது தூரத்து உறவினர்களில் ஒருவரின் கனவில் தோன்றியதாகக் கூறப்படும் ஸர.ஃபத் மியாவின் அறிவுறுத்தல்களின்படி, அவர்கள் அந்த பிரபலமான கல்லறையை கல்லறை மாடங்கொண்ட ஒரு நினைவாலயமாக அமைத்திருந்தனர்.

○○○

அட்டைப்பட அதிதி

# ஈழத்தின் சொற்கொண்டல் அஷ்ஷெய்ஹ் மௌலவி அப்துர் றஊப் மிஸ்பாஹீ பஹ்ஜி



ஈழத்து முஸ்லிம்களின் தாயகம் காத்தான் குடியில் கி.பி 1944ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ம் திகதி ஆரிப்பில்லாஹ் அப்துல் ஜவாத் பெரிய ஆலிம் (ரஹ்) அவர்களுக்கு அருமை மைந்தராக இப்பூமியில் மலர்ந்தார்கள். இவர்களது குடும்பம் துருக்கியிலிருந்து இந்தியா நாகூருக்கு வந்து காத்தான்குடி வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. பெரும் மார்க்க அறிஞர்களை ஈன்றெடுத்த இப் பரம்பரையில் ஏழாவது ஆலிமாக இவர்கள் அங்கம் பெறு கிறார்கள்.

தனது ஆரம்பக் கல்வியை தரம் 5 வரை காத்தான்குடி அல்-ஹிரா மகா வித்தியால யத்திலும் குர்ஆன் கல்வியை தனது தந்தையின் பாசறை அல்-மத்ரஸதுர் றப்பானிய்யஹ்விலும் பெற்றார்கள். திருக்குர்ஆன் கல்வி பூர்த்தியின் பின்னர் தனது தந்தையிடமே ஆரம்ப அரபுக் கல்வியைப் பெற்றார்கள். தனது அருமை புதல்வரின் ஆன்மீக கல்வி மீதான ஈடுபாட்டையும், வளர்ச்சியையும் கண்ட பெரிய ஆலிம் அவர்கள் மகனை வெளியூருக்கு அனுப்பி கல்வி கற்பிக்க முடிவு செய்தார்கள். அதன்படி 1958.05.05 அன்று காலி கோட்டையில் அமைந்துள்ள பஹ்ஜதுல் இப்றாஹிமியாற்கு அழைத்துச் சென்று மார்க்கக் கல்வியை பயில்வதற்கு சேர்த்துவைத்தார்கள் அங்கு அறிஞர் அவர்கள் ஆறு வருடங்கள் கல்வி கற்றார்கள்.

பின்னர் பாணந்துறை தீனிய்யஹ் அரபுக் கல்லூரி, இந்தியாவில் அமைந்துள்ள மிஸ் பாஹுல் ஹுதா, அல் பாகியாத்துஸ் ஸாலிஹாத் போன்ற அரபுக் கல்லூரிகளிலும் தனது உயர் கல்வியை தொடர்ந்து இறுதியாக மதீனா பல்கலைக்கழகத்திலும் சிறிதுகாலம் கல்வி கற்றார்கள். தனது ஆரம்பகால பகுதியில் அரச பாடசாலைகளில் மௌலவி ஆசிரியர் நியமனம் பெற்று தொண்டர் ஆசிரியராக பணியாற்றி மாணவர்களின் மார்க்க கல்வியை சீர்படுத்தியுள்ளார்கள். (1972 தொடக்கம் 1975 வரை காங்கேயனோடை அல் அக்ஸா வித்தியாலயம், பூநொச்சிமுனை வித்தியாலயம், காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம் போன்றவற்றில் பணியாற்றி உள்ளார்கள்) 1970ஆம் ஆண்டு முதல் 1971ஆம் ஆண்டு வரை அக்கரைப்பற்று மன்பஉல் ஹைறாத் அரபுக் கல்லூரியிலும் அதன்பின் காலியில் அமைந்துள்ள ஜிப்ரிய்யஹ் அரபுக் கல்லூ ரியமிலும் இரு வருடங்கள் கடமையாற்றி உள்ளார்கள்.

### மொழிப் புலமை தொடர்பான பார்வை

மௌலவி அவர்களின் மொழிப் புலமையானது மொழியியல் (Linguistics), இலக்கணத்தில் (Grammatology), இலக்கி யத்தில் (Literature), வேர்ச்சொல் ஆய்வில் (Etymology), சொற்பொருள் (Semantics), அகராதி இயல் (Lexicography), சொல் வழக்கு முறையியல் (Lexicology), நாட்டார் வழக்காற்றியல் (Folklore) போன்ற துறைகள் சார்ந்து நோக்கமுடியும்.

### மொழிப் புலமையின் ஊடாக பிரதேச வாழ்வியலை கூறும் திறன்



லத்பான் றோஸின்
பேராதனைப் பல்கலைக்கழகம்

இவர்கள் மூலம் எழுதப்பட்ட கவிதைகள், பாடல்கள், நூல்கள் பெரும்பாலும் இஸ்லாமிய சட்டத்துறை மற்றும் சூபித்துவ ஆன்மீக சிந்தனையை மையப்

படுத்தியதாக இருந்தாலும், அந்த எழுத்துக்களில் சில இடங்களில் கிழக்கு முஸ்லிம்களின் கலாசார, பண்பாடு, வாழ்வியல் பழக்க முறை களை நுணுக்கமாக தெளிவுபடுத்த முனை வதை காணமுடிகிறது.

என் தாய் வந்து என்னங்க
என்று உங்களை கேட்டாலோ
எனக்குத் தெரியும் நீ போடி
என்றே கூறிச் சாத்திடுவீர்

*(அல் பவாகிஹுல் ஜனிய்யஹ் மினல் ஹதீகதில் ஜவாதிய்யாஹ் : 21)*

மேற்குறிப்பிட்ட பாடல் வரிகளில் என்னங்க என்று சொல்லானது கிழக்கு முஸ்லிம் பெண்களில், குறிப்பாக காத்தான்குடி முஸ்லிம் பெண்கள், தமது குடும்ப வாழ்வில் பாசத்துக்குரிய தன்னுடைய கணவனை இரக்கமாக காதல் உணர்வோடு அழைப்பதற்கு பயன்படுத்தும் மரபுவழி சொல்லாக இது காணப்படுகின்றது. இதனை நகைச்சுவையாக தனது பாடலில் மௌலவி அவர்கள் இணைத்துள்ளமை கிழக்கு முஸ்லிம்களின் வாழ்வியல் அம்சங்களை நிலைநிறுத்துவதாக அமைந்துள்ளது.

**கவிதை மற்றும் பாடல்களை இயற்றுதல்**

மௌலவி மிஸ்பாஹீ அவர்கள் தமிழ் மற்றும் அரபு மொழிகளில் பாடல்கள் மற்றும் கவிதைகளை இயற்றுவதில் தனித்துவ மானவர்கள். இந்தப் பாடல்கள் மற்றும் கவிதைகளில் அநேகமானவை இலங்கை, இந்தியா, பக்தாத் போன்ற பல நாடுகளில் வாழ்ந்து மறைந்த இஸ்லாமிய பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை கூறுவதாகவும், அவர்களிடம் இரட்சிப்பு கேட்பதாகவும் அமைந் துள்ளன. இவற்றில் ஒவ்வொரு பாடல்கள் தனித்துவமான இராகங்களை கொண்டதாக காணப்படுவதுடன் இவற்றில் சில பாடல்கள், கவிதை வரிகளை நோக்கும்போது அவை சமூக நல்லிணக்கம் மற்றும் நாட்டின் சிறப்பினை எடுத்துக் கூறுவதாகவும் அமைந்துள்ளன.

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது இயற்றப்பட்ட கவிதை

நிழலற்ற உங்களின் திருவுடலை
நிகரற்ற உங்களின் திருமுகத்தை
நித்தம் நான் கண்டு முக்தி பெற
நீங்களே வழிதிறந்தருள்வீரே

*(சுவர்கத்தின் சுவடுகள்:4)*

நாட்டின் சிறப்பு சமூக ஒற்றுமையை பேணும் பாடல் வரிகள்

நாட்டிலும் காட்டிலும் வாழுகின்ற நல்லோர்
தீயோர் நாடுகின்ற நாட்டங்கள் தீர்த்து மூளுகின்ற
நாட்டின் போர்த்தீ அணைத்திடுவீர்

மூவின மக்களும் இந்நாட்டில்
முழுவளம் பெற்றுயர் திருநாட்டில்
முடிவற்ற இறைவனின் வழிபாட்டில்
மூழ்கிடச் செய்திடுவீர் வலீயே

*(சுவர்கத்தின் சுவடுகள்:26)*

எதுகை மோனையை காட்டும் பாடல் வரிகள்

ஏந்திய கைகளை எடுக்கவில்லை
ஏந்திய கைகள் கடுக்கவில்லை
ஏகனே உன்னை மறக்கவில்லை
ஏற்றுக்கொள் எனை நான் இல்லை

*(அல் பவாகிஹுல் ஜனிய்யஹ் மினல் ஹதீகதில் ஜவாதிய்யாஹ் :37)*

பாடலின் கடைசி ஓசை ஒன்றுபடக்கூடிய இயைபு நிலை பாடல் வரிகள்

இவர்களுக்கே தான் நீராறு
இவர்களுக்குதான் பாலாறு
இவர்களுக்குதான் தேனாறு
இவர்களுக்கேதான் மதுவாறு

*(அல் பவாகிஹுல் ஜனிய்யஹ் மினல் ஹதீகதில் ஜவாதிய்யாஹ்: 37)*

**பழமொழிகளை பிரயோகித்தல்**

தமிழில் பொதுவாக சமூக வாழ்க்கையோடு பண்பாடு, கலாசாரம் வாழ்வியல் அம்சங்களை தழுவியும் சமூக விழிப்புணர்வுசார் விடயங் களை பெரும்பாலும் பழமொழிகள் உள்ளடக் குகிறது. இந்த வகையில் மௌலவி மிஸ்பாஹீ அவர்கள் சன்மார்க்க சொற்பொழிவுகளை நிகழ்த்தும் வேளைகளில் கிழக்கு முஸ்லிம்களின் வாழ்வியல், கலாசாரம் மற்றும் பண்பாட்டுடன் இணைந்த வகையில் சில நகைச்சுவையான பழமொழிகளை பிரயோகிப்பது அவர்களின் தமிழ் புலமையும் மதிநுட்பத்தையும் விளக்கு வதாக அமைகின்றது.

உதாரணம்:- *ஆப்பிழுத்த குரங்கு போல என்ற கூற்றை ஒருவர் தன்னாலே தனக்கு தீங்கை ஏற்படுத்திக் கொள்ளுதலுக்கு உதாரணமாக அடையாளப்படுத்துகிறார்.*

**இஸ்லாமிய இறையியல் கோட்பாட்டில் காணப்படும் சிக்கலான கருத்துக்களை எளிமையாக தெளிவு படுத்தல்**

மௌலவி அவர்கள் இஸ்லாமிய அகீதா நம்பிக்கை சார்ந்து மிக நுணுக்கமான விடயங்களை கற்றவர்கள் விளங்கும் அளவிற்கு பாமரர்களை விளங்க வைக்கும் அளவிற்கு எளிமையான உவமைகளை (Metaphors) கையாள்வதில் முதன்மை பெறுகிறார்.

*உதாரணம் :- கடலுக்கும் அலைக்கும் உள்ள தொடர்பை வைத்து இறைவனுக்கு படைப்பிற்கும் உள்ள தொடர்பை தெளிவுபடுத்த முயல்கின்றமை அதாவது கடல் வேறு அலை வேறு அல்ல. அலை என்பதை ஒரு தனியான உள்ளமை கொண்டதல்ல. மாறாக அது கடலின் வெளிப்பாடு என எளிய தமிழ் மொழியில் தெளிவுபடுத்துவதை கூறலாம்.*

**கலைச் சொற்களை உருவாக்குதல்**
(Coining Terminology)

பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த இஸ்லாமிய அறிஞர்கள் பயன்படுத்திய ஸூபி கலைச் சொற்களுக்கு இணையான தமிழ் சொற்களை பயன்படுத்தி வருகின்றமை சிறப்பம்சமாகும்.

வுஜூத் – உள்ளமை/மெய்ப்பொருள்
அதம் – இன்மை
அல் ஹக் – உண்மைப் பொருள்
ஆரிபீன் – மெஞ்ஞானிகள்

**அரபுக் கவிதைகளை தமிழாக்கம் செய்தல்**

மௌலவி மிஸ்பாஹீ அவர்கள் இமாம் இப்னு அரபி (ரஹ்), இமாம் பூஸிரி (ரஹ்), இமாம் மன்ஸூர் ஹல்லாஜ் (ரஹ்), அபுல் ஹஸன் அலீ அஷ் ஷாதுலி (ரஹ்) போன்ற இறை ஞானிகளின் கவிதைகளின் எதுகை மோனை நயம் சருகாது அதனைத் தமிழில் ஒரு குறள் போல சுருக்கமாகவும், நறுக்கென்றும் மொழிபெயர்க்கும் திறன் இயல்பாகவே காணப்படுகிறது.

**தூய செந்தமிழ் சொற்களை பயன்படுத்துதல்**

தனது நூல்கள் கவிதைகளில் இலக்கணச் செறிவுள்ள தூய தமிழ்ச் சொற்களை பயன் படுத்தும் திறமை காணப்படுதல் சிறப்பம்சமாகும்.

*உதாரணம் :- அருள், அருள் மாரி, திரு முடி, திருப் பாதம், திருச் சபை*

**நாடக உரையாடல் மற்றும் உருவகித்தல் திறன்**
(Dramatic Dialogue and Personification)

தனது சொற்பொழிவுகளில் மௌலவி மிஸ்பாஹீ அவர்கள் வெறுமனே கருத்துக்கள், தத்துவங்கள் மற்றும் சம்பவங்களை பட்டிய லிடாமல் அவற்றை உயிரோட்டம் உள்ள விடயங்களாக மாற்றும் திறன் கொண்டவராக காணப்படுகின்றார். திருக்குர்ஆனில் உள்ள சம்பவங்கள் நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் இடம்பெற்ற வரலாற்றைச் சொல்லும்போது கதா பாத்திரங்களின் மன ஓட்டத்தை குரல் நடை மூலம் வெளிப்படுத்தும் தன்மை காணப்படுவது அதனை கேட்போர் அந்த காட்சியின் உள்ளே இருப்பதுபோன்ற உணர்வை பெறச் செய்கிறது.

*உதாரணம்:– நபி ஸல் அவர்களுக்கும் உகாஸா (ரழி) அவர்களுக்கும் இடையில் நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவத்தை கூறும் நிலை.*

**சொற்பொழிவுகளின்போது கேட்போருடன் நேரடி தொடர்பு கொள்ளல்**

மௌலவி அவர்களின் கதை சொல்லும் பாணி கேட்போரையும் கதையின் அங்கமாக மாற்றுவதாக சில நேரங்களில் அமைகிறது அதாவது ஒரு வரலாற்றுச் சம்பவத்தின் நடுவே இப்போது நீங்கள் அங்கே இருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? அந்த சூழலில் நாம் இப்படி நடந்து கொள்வோமா? என்று கேட்போர் பக்கம் கேள்விகளைத் திருப்பி அவர்களை தார்மீக ரீதியாக சிந்திக்கத் தூண்டுதல்.

**சொல்லாட்சி திறன்கள்** (Oratory skills)

மௌலவி மிஸ்பாஹீ அவர்களின் சொற் பொழிவுகளின் மிகவும் பிரபலமான கருத்தை ஆணித்தரமாக பதியவைக்க பயன்படுத்தும் தமிழ் வார்த்தைகள் சக்தி வாய்ந்தவை ஆன்மிகக் கருத்துகளை பேசும்போது அல்லாஹ் என்ற வார்த்தையோடு மட்டும் நின்றுவிடாமல் மெய்ப்பொருள், ஏகப்பொருள், அநாதி, நித்திய ஜீவன் போன்ற ஆழமான தத்துவ சொற்களையும் பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இது சிலபோது சித்தர்களின் பாடல்களின் தமிழ் நடையை ஒத்ததாக அமைந்திருக்கிறது.

**மூல நூல்களை ஆய்வு செய்யும் திறன்**

இஸ்லாமிய தத்துவ ஞானிகளான இப்னு அரபி (ரஹ்), இமாம் கஸ்ஸாலி (ரஹ்) போன் றோரின் கடின அரபு நூல்களை (புதுகாதுல்

மக்கியா, புஸூஸூல் ஹிகம்) எவ்வித தடுமாற்றமும் இன்றி அதன் சாரம்சத்தை விளங்கி எளிய தமிழில் விளங்கப்படுத்தும் திறன் தனித்துவமானது. இது சாதாரண அரபு அறிவு கொண்டவர்களால் செய்ய முடியாத ஒன்றாகும்.

**மொழிபெயர்ப்புத் திறன்** (Translation skills)

மௌலவி அவர்களின் ஆகச் சிறந்த திறமையாக இது பார்க்கப்படுகின்றது. அரபு மொழியின் ஆன்மா சிதையாமல் *(Soul of the Language)* தமிழுக்கு கொண்டு வரும் திறன் விசேடமானது. திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஸூபி ஞானிகளின் கருத்துக்களில் வரும் வார்த்தைகளுக்கு வார்த்தை அர்த்தம் வைக்காமல் அந்த அரபு வார்த்தை வெளிப் படுத்தும் நிலைக்கும், ஆழமான கருத்தை *(Contextual meaning)* தனது மொழிப் புலமையால் வெளிக்கொண்டு வருகிறார்.

**தென்னிந்திய தமிழுடனான தொடர்பு**

தென்னிந்தியாவில் வாழ்ந்த பிரசித்தி பெற்ற ஆன்மீக ஞானி குணங்குடி மஸ்தான் ஸாகிபு (ரஹ்) அவர்களின் செய்யுள் வரிகளின் ஆழமான தத்துவங்களை ஈழத்து முஸ்லிம்களின் வாழ்வியலிலும் பண்பாட்டிலும் சேர்த்த பெருமை மௌலவி அவர்களே சாரும். மஸ்தான் சாகிபு (ரஹ்) அவர்கள் தமிழ் இலக்கியம் ஊடாக ஞானம் பெற்றவர்களின் உள்ளுணர்வின் கொந்தளிப்பை இறைவனுடன் சினந்து பேசுவது, கொஞ்சுவது, மன்றாடுவது எனப் பல வழிகளில் தெளிவு படுத்துகின்றார். இதனை அடிப்படையாக கொண்டு மௌலவி மிஸ்பாஹீ அவர்கள் சமூக விமர்சனங்களை கலைந்து இறையியல் கோட்பாட்டை நிறுவுவதற்கு மஸ்தான் ஸாகிபு (ரஹ்) போன்ற தென்னிந்திய இஸ்லாமிய புலவர்களின் பாடல்களை பயன்படுத்துகின்றார்.

எனவே சுருக்கமாக மௌலவி அப்துர் றஊப் மிஸ்பாஹீ அவர்கள் அரபு மொழியில் ஆழத்தையும், தமிழ் மொழியின் அழகையும் ஒருங்கே பெற்ற ஈழத்து இஸ்லாமிய மார்க்க மேதை. அறபு மொழியிலான மார்க்க ஞானத்தை *(Religious Knowledge)* தமிழ் மொழியின் வழியாக மக்கள் ஞானமாக மாற்றியது இவரின் மொழிப் புலமையின் வெற்றி ஆகும். அதே போல் அவரின் மொழிப்புலமை வெறும் சொல்லறிவாக நிற்காமல், ஈழத்து கிழக்கு முஸ்லிம்களின் கல்வி, ஆன்மீகம், பண்பாட்டு மற்றும் வாழ்வியலில் அழியாத முத்திரையாக இன்று பதிந்துள்ளது.

**உசாத்துணைகள்**


அல்-மிஸ்காத் ஞானச் சஞ்சிகை, காத்தான்குடி : அகில இலங்கை மெய்ஞானப் பேரவை.

இப்றாஹீம் நத்வி, ஜெ்ய்ஹுனா மிஸ்பாஹி நாயகம் அவர்களின் வாழ்க்கையில் இடம்பெற்ற உண்மைச் சம்பவங்கள்.

மு.ல லத்பான் றோஸின், (2025), தற்போதைய இலங்கை அரசியலமைப்பில் காணப்படும் அடிப்படை உரிமைகளில் மிகப் பிரதானமான ஒன்றே மத உரிமையாகும் காத்தான்குடி: முஹிப்புர் றஸூல் கலை கலாசார நன்னோக்குச் சங்கம்.

*Mowlavi Sahlan Rabbanee , Jemsith,* ***Wahdat Al- Wujud is the theological tenet of Islamic Sufism****, Al-Haj Abdul Jawath Alim Waliyyullah Trust, kattankudy.*

*Mowlavi Sahlan Rabbanee,* ***Sufism An Introduction,*** *Shums Media Unit, Kattankudy.*


❍❍❍

## மனிதன் ஏன் பிறந்தான்?

எத்தனையோ துன்பங்கள்
கொஞ்சம் இன்பங்கள்
சந்ததிகளைப் பெற்றவர்கள்
தனியே வீதிகளிலும்
அநாதை விடுதிகளிலும்
விடப்பட்டே அன்புக்கு
ஏங்கி நிற்கின்றனரே!
மனிதன் நொந்தே பிறந்தான்
நொந்தே இறக்கின்றான்
சிரிப்பதும் அழுவதும்
வந்து செல்கின்றனவே.

**கலாதினி பா.முருகானந்தன்**
(உடப்பு)



இராமாயணச் சிந்தனைகள் 5

# மூலைக் கண்களை போக்கியது முறையோ...?

தமிழ்மணி அகளங்கன்

**ஆசை காட்டினானா இராமன்?**

சூர்ப்பனகை தன் தந்தை அந்தண மரபு என்றும், தன் தாய் சத்திரிய அரச மரபு என்றும் சொன்னபின் அதை மறுக்கமுடியாத இராமன் அரக்கர்களோடு மானுடர்கள் திருமணம் செய்து கொள்ளல் பொருத்தமானது இல்லை என்று மிகுந்த புலமையுள்ளவர்கள் சொல்லியிருக் கிறார்கள் என்று சொல்கிறான்.

அப்போது மிகவும் நம்பிக்கை வரப்பெற்ற சூர்ப்பனகை சொல்கிறாள் "என்னை இராவண னின் தங்கை என்று சொல்வது மிகவும் பெறுமதி குறைந்த கருத்து. நான் என்னைப் பற்றி முன்னமே சொல்லியிருக்கிறேன். இருப் பினும் சொல்கிறேன்" என்று சொல்லித் தொடர்கிறாள். நான் தேவர்களை வணங்கி அந்தப் பழிபொருந்திய பிறவியிலிருந்து நீங்கி விட்டேன் என்கிறாள்.

இதைக்கேட்ட இராமன், உன்னோடு உடன் பிறந்தவர்களில் ஒருவனோ மூன்று உலகங் களிற்கும் தலைவனான இராவணன். அது மட்டுமின்றி இன்னொருவனோ குபேரன். அவர்கள் உன்னை எனக்குத் தந்தால் நான் உன்னைத் திருமணம் செய்வேன். இல்லாவிட் டால் முடியாது. நீ வேறு இடத்திற்குச் செல் என்கிறான்.

ஒருவனோ உலகம் மூன்றிற்கு
　　ஓங்கு ஒரு தலைவன், ஊங்கில்
ஒருவனோ குபேரன். நின்னொடு
　　உடன்பிறந்தார்கள் அன்னார்
தருவரேல் கொள்வேன்.....

இராமன், சூர்ப்பனகையிடம் சொல்லும்போது உன் உடன் பிறந்தவர்கள் உன்னை எனக்குத் தந்தால் நான் உன்னைத் திருமணம் செய்வதைப் பற்றி யோசிக்கலாம் என்று சொல்லியிருந்தால் கூட சூர்ப்பனகை நம்பிக்கை இழந்திருப்பாள்.

இராமனுக்குத் தெரியும் அவர்கள் வந்து அவளைத் தனக்குத் தரப்போவதில்லை என்று. அதனால்தான் அந்த நிபந்தனையைச் சொல்லுகிறான். அது இராமனுக்கு விளையாட்டு. ஆனால் சூர்ப்பனகைக்கு அது நம்பிக்கை தரக்கூடிய சத்திய வாக்கு. இராமனுக்கு தன்னில் விருப்பம் இருக்கிறது, அதற்கு இந்த நிபந்தனை ஒன்று மட்டுந்தான் தடை என்று அவள் நினைக்கக் கூடியதாக இருந்தது இராமனின் பதில்.

அது சாத்தியமில்லை என்பதை அறிந்திருந்த சூர்ப்பனகை உடனே சொல்கிறாள் என்னை நீ திருமணம் செய்வதற்கு இதுதான் தடை என்றால், நாங்கள் திருமணம் செய்வதற்கு வேறு வழி ஒன்று இருக்கின்றது. அதுதான் காந்தர்வத் திருமணம். அதாவது காதல்த் திருமணம். இதற்குக் கொள்ளல், கொடுத்தல் தேவை இல்லை. இருவர் மனங்களும் ஒன்றுபட்டுவிட்டால் போதும். நாங்களாகவே திருமணம் செய்துகொள்ளலாம். என்று மிகுந்த நம்பிக்கையோடு சொல்கிறாள்.

காந்தர்ப்பம் என்பது உண்டால்
　　காதலில் கலந்த சிந்தை
மாந்தர்க்கும் மடந்தை மார்க்கும்
　　மறைகளே வகுத்த கூட்டம்
ஏந்தல் பொன் தோளினாய்! ஈது
　　இயைந்தபின் எனக்கு மூத்த
வேந்தர்க்கும் விருப்பிற்று ஆகும்
　　வேறும் ஓர் உரையுண்டு என்றாள்.

காந்தர்வத் திருமணம் வேதங்களாலேயே வகுக்கப்பட்டுள்ளது. அதனால் தவறில்லை. நாங்கள் திருமணம் செய்துகொண்டபின் எனது மூத்த சகோதரர்களுக்கும் அது விருப் பமானதாக இருக்கும் என்கிறாள். அத்தோடு இன்னொன்றையும் சொல்கிறாள்.

"என்னை நீ திருமணம் செய்தால் இந்தப் பூமியையும் ஆகாயத்தையும் உனது ஆட்சி யாக்குவேன். எனது சகோதரர்களாகிய குபேரன் இராவணன் ஆகியோர் உனக்கு அன்பு கொண்டவராய் வந்து உனது ஏவலின்படி உன் பணியாற்றுவார்கள்" என்று சூர்ப்பனகை இராமனுக்கு ஆசை காட்டுகிறாள். அதைக்கேட்ட இராமன் சொல்வதாக அமைந்த பாடல் மிகவும் வேடிக்கையானது.

நிருதர்தம் அருளும் பெற்றேன், நின்
நலம் பெற்றேன். நின்னோடு
ஒருவ அருஞ் செல்வத்து யாண்டும் உறையவும்
பெற்றேன். ஒன்றோ
திரு நகர் தீர்ந்தபின்னர் செய்
தவம் பயந்தது? என்னா
வரிசிலை வடித்த தோளான் வாள்
எயிறு இலங்கை நக்கான்.

உன்னைத் திருமணம் செய்துவிட்டேன். அதனால் நான் பெறற்கு அரிய பேறுகள் எல்லாம் பெற்றுவிட்டேன் என்றபொருளில் சூர்ப் பனகைக்குப் பெரும் நம்பிக்கை தரக்கூடிய வாசகங்களைச் சொல்கிறான் இராமன்.

"உன்னைத் திருமணம் செய்ததால் அரக்கர் களின் அருளும் கிடைத்துவிட்டது. உனது அழகான உருவமும் என் வசமாகிவிட்டது. நீங்க முடியாத செல்வத்தோடு எக்காலமும் வாழ் கின்ற வாழ்வும் கிடைத்து விட்டது. செல்வமும் அழகும் பெருமையும் மிக்க நகரை விட்டு நீங்கியபின் நான் செய்த தவம் பலித்துள்ளது," என்று சொல்லி பற்கள் பிரகாசித்து வெளியில் தெரியும்படியாகச் சிரித்தான் என்கிறார் கம்பன்.

**இராமனின் வேடிக்கை:**

இராமன் வேடிக்கையாகச் சொன்னான் என்று எடுத்துக் கொண்டாலும் சூர்ப்பனகை இராமனின் பேச்சை முற்று முழுதாக நம்பிவிடுகிறாள். இப்படி இராமன் பேசியிருக்கவே கூடாது. இராமனின் பெருமைகளாக ஒருவில். ஒருசொல். ஒரு இல் என்பவற்றைச் சொல்வார்கள். இராமன் வாக்குத் தவறாதான். சத்தியம் காப்பவன் என்று சொல்லும் சொல் உண்மையானது என்பதுபோல பின்னால் நடைபெறவில்லை. சூர்ப்பனகைக்கு ஆசை காட்டி மோசம் செய் தான் என்பதுபோல ஆகிவிட்டது

இராமனின் இந்தச் செய்கையால் . சூர்ப் பனகை பரிதாபத்துக்குரியவளாக ஆக்கப் பட்டு விடுகிறாள். இராமன் ஏகபத்தினி விரதன் என்ற பெருமைக்கும் அதாவது ஒரு இல் என்ற சிறப்புக்கும் இது பங்கம் விளைவிக்கிறது. இராமன் அவதார புருஷன் என்பதையே கேள்விக்குரியதாக்குகிறது. இது கிருஷ்ண அவதாரமோ என்று எண்ண வைக்கிறது.

இராமன் திருமணம் ஆனவனா இல்லையா என்பது சூர்ப்பனகைக்குத் தெரியாது. சூர்ப் பனகை திருமணமாகியவள் கணவனை இழந்தவள் என்பது இராமனுக்குத் தெரியாது. சூர்ப்பனகை இராமனைக் கண்ட உடனேயே அவனை விரும்பிவிடுகின்றாள். இதில் என்ன தவறு, பேரழகு வாய்க்கப் பெற்ற அழியா அழ குடைய அண்ணலாகிய இராமனைப் பார்த்து அவள் ஆசைப்படாது விட்டால்தான் அவளின் பெண்மையிலே தவறு இருக்கமுடியுமே தவிர ஆசைப்பட்டது எப்படித் தவறாகும்.

**சூர்ப்பனகையின் காதல் தவறா?**

இராமனை முதன் முதல் கண்ட மாத்திரத் திலேயே சீதை காதல் கொண்டது மட்டும் எப்படிச் சரியாகும்? இராமன் மிதிலையிலே உலாப்போனபோது இராமனது அழகிலே ஈடுபடாத பெண்களும் உண்டா? "தோள் கண்டார் தோளே கண்டார்.." என்று தொடங்கி இராமனின் உறுப்புக்களில் எதை முதலில் பெண்கள் பார்த்தார்களோ அந்த உறுப்பை மட்டுமே பார்த்துகொண்டு நின்றார்கள். பரவசப் பட்டார்கள். காதல்கொண்டார்கள் என்று கம்பன்தானே பாடியிருக்கிறான். வைத்தகண் வாங்காமல் பார்த்தார்கள் என்று கம்பன்தானே சொல்லியிருக்கிறான்.

ஆண்களே இராமனின் தோள் அழகைப் பார்த்து ஆசைப்பட்டு தாங்கள் பெண்களாகப் பிறந்திருந்தால் இராமனின் தோள் அழகை இன்னும் உணர்வு பூர்வமாகப் பருகியிருக்கலாமே என்று ஆசைப் படுவார்கள் என்ற பொருளில் "ஆடவர் பெண்மையை அவாவும் தோளி னாய்---" என்று விசுவாமித்திர முனிவர் சொல்வ தாக கம்பன்தானே பாடியிருக்கிறான். அதுவும் தோள் அழகைக்கண்டு மட்டுமே. சூர்ப்பனகையோ இராமனை முழுதாக அருகில் நின்று காண்கின்றாள். அவள் இராமனில் ஆசைப்பட்டது காதல் கொண்டது எப்படித் தவறாகும்.

தமிழ் இலக்கியத்திலே **உலா** என்று ஒருவகைப் பிரபந்தமுண்டு. அரசன் உலாப் போகும் போது தூரநின்று பார்க்கும் ஏழு பருவத்துப் பெண்களும் அவ் அரசனின் அழகில் ஈடுபட்டு

ஆசைப் படுவதாகப் பாடப்படுவதே உலா ஆகும். ஒருவனைப் பார்த்து ஒருபெண் ஆசைப்படுவது உலக வழக்காக இருக்க சூர்ப்பனகை இராமனை அருகில் நின்று பார்த்து ஆசைப்பட்டது மட்டும் எப்படித் தவறாகும். பெண்கள் ஆண் களைக் கவர்வதற்காகத் தங்களைப் பலவகை யிலும் அலங்கரித்துக் கொள்ளல் முறைதானே. அப்படியிருக்க சூர்ப்பனகை அழகான பெண்ணாக வடிவெடுத்து வந்தது எப்படித் தவறாகும்.

சூர்ப்பனகையை அரக்கி என்றும், கெட்டவள் என்றும் கம்பன் சொல்லுவதை மறந்துவிட்டு அவளை ஒரு பெண்ணாகப் பார்த்தால் அவளின் உணர்வை நியாயப் படுத்தமுடியும். அதற்கும் மேலாக இராமன் சூர்ப்பனகையோடு வரம்புமீறி உரையாடியது மாபெரும் தவறு என்று சொன்னால் என்னில் நீங்கள் கோபிக்கக் கூடும்.

சூர்ப்பனகையைப் பொறுத்தவரையில் அவள், இராமனைத் திருமணம் செய்துகொள்ள இராமன் கேட்ட அத்தனை நிபந்தனைகளையும் நிறைவு செய்கிறாள். கந்தர்வத் திருமணம் வரையில் மிகவும் அறிவோடும் புத்தி நுட்பத்தோடும் உரையாடுகிறாள். கம்ப இராமா யணத்தில் சூர்ப்பனகையும் வாலியும், கூனியும் தான் பெரும் அறிவோடு யாவரும் திகைக்கும் வண்ணம் உரையாடுகிறார்கள் என்பது எனது அபிப்பிராயம்.

திருமணமாகி மனைவியோடு காட்டுக்கு வந்து இலட்சியத் தம்பதிகளாக உலகம் போற்றும்படி வாழ்ந்துகொண்டிருக்கின்ற இராமன், "இந்த இப் பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்" என்று சீதைக்குச் சத்தியம் செய்து கொடுத்த இராமன் சூர்ப் பனகையிடம் இவ்வளவு தரந்தாழ்ந்து உரை யாடியிருக்கத் தேவையில்லை.

சிறையிருந்த சீதையை சிறை மீட்ட பின் இராமன் சீதையைத் தீக்குளிக்கச் சொல்லும் போது தன் கணவனோ அல்லது உலகோரோ தன்மேல் சந்தேகம் கொள்ளக் கூடாது என்ப தற்காக தீக்குளிக்கச் செல்லும் சீதை நெருப்பைப் பார்த்து "மனத்தினால் வாக்கினால் மறு உற்றே னெனில் சினத்தினால் சுடுதியாய் தீச் செல்வா!" என்று சொல்லித் தீப் புகுந்தாள் என்கிறான் கம்பன். சீதை வாக்காலும் களங்கமற்றவள். இராமன் சூர்ப்பனகையோடு உரையாடிய விதத்திலிருந்து பார்க்கும்போது இராமன் வாக்கினால் களங்கம் கொண்டவன் என்றே சொல்லலாம்.

**சூர்ப்பனகையின் சந்தேகம்**

இந்த நேரத்தில்தான் கற்பின் கனலியான சீதை இராமனின் அருகில் வருகிறாள்.

மனைவியோடு இருப்பவன் இப்படி நடந்து கொள்வானா? என்ற சந்தேகம் சூர்ப்பனகைக்கு

---

**எறும்பு ஊர்வலம் ○○○ – காரைக்கவி**

சாவுக்கு வாழ்க்கைப் பட்ட
சனங்கள் கஞ்சிக்கு வரிசையில்
நகர்வது போல மெது மெதுவாக
உணவைத்தேடி நகர்ந்து போனது
கட்டெறும்புக் கூட்டம் ஒன்று ..

அவற்றின் இருப்பிற்கு ஏதும்
ஆபத்தோ தெரியவில்லை
என்னவோ ஒரு செய்தியை
எறும்புக்கு எறும்பு சொல்லியபடி
பரபரத்தபடி ஊர்ந்து போயின ...

கஞ்சி வரிசையில்
முன்னுக்கு நகர முடியாமல்
கடைசியாகப் போகும் நடக்கேலாக் கிழவன்
தான் போகும் வரையும் கஞ்சி
இருக்க வேண்டுமே என்று
நப்பாசைப்படுவது போல
வரிசையில் கடைசியாக
விந்தி விந்தி ஊர்ந்த எறும்பின்
முகத்தில் ஏதோ ஒரு எதிர்பார்ப்பு இருந்தது ...

கஞ்சி வரிசையில் வெடி விழுந்தது போல
எறும்பு வரிசையில் திடீரென்று
ஏதோ ஒரு குழப்பம் எறும்புகள்
நாலா பக்கமும் சிதறியோடின....

முகம் மறைத்த நுள்ளான்கள்
சில வழிகாட்ட
நாக்கைத் தொங்கப்போட்டபடி
எறும்பு வரிசையிற்குள்
வந்து கொண்டிருந்தது அழுங்கு ஒன்று ...

எழுந்திருக்கலாம். சீதையின் அழகைப் பார்த்து அதிசயித்து யோசிக்கிறாள். சீதையை

இராமனின் மனைவி என்று அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இவ்வளவு அழகான

மனைவியை காட்டுக்குக் கொண்டுவர மாட்டான். இவ்வளவு அழகு கொண்டவராக இங்கு வேறு எவரும் இல்லை. தாமரை மலரிலே இருக்கும் இலக்குமிதேவி அம்மலரை விட்டுவிட்டு கால்கள் நிலத்தில் படும்படியாக இங்கே வருவாளோ? அது சாத்தியமில்லை. என்று நினைத்து உள்ளம் திகைப்படைந்தவளாக நின்றாள். இதனைக் கம்பன் “மருவு ஒன்று கூந்தலாளை வனத்து இவன் கொண்டு வாரான்.---” என்று தொடர்கிறான்.

இங்கே வந்து நிற்பவள் இவனது மனைவியாக இருக்கவே முடியாது. இந்தத் தண்டகாரணியத்தில் நான் எடுத்துவந்த இந்த உருவத்தை ஒத்த உருவத்தைக் கொண்டவராக யாருமே இல்லை. இவளது கால்கள் பூமியில் படுகின்ற காரணத்தால் மகாலக்சுமியாகவும் இருக்கமுடியாது. என்று உள்ளம் திகைத்து நின்றாள் சூர்ப்பனகை என்கிறான் கம்பன்.

சீதையின் அழகை உற்று நெடுநேரம் பார்த்து வியக்கிறாள். பெண்ணாகப் பிறந்த எனக்கே எனது கண்கள் பிறிதொன்றைக் காணாது இவள் அழகிலே நிலைத்து நிற்கின்றனவே எனது உள்ளமும் இவளின் அழகிலேதான் நிலைத்துநிற்கிறது. அப்படியென்றால் ஆண் ஒருவன் இவளைப் பார்த்தால் என்ன நிலையை அடைவான். என்று நினைக்கிறாள்.

இவளும் என்னைப்போல இடையிலே வந்தவளாகத்தான் இருக்க வேண்டும், என்று நினைக்கிறாள்.. இவளை அவமானப்படுத்தி உண்மையைப் புரியவைப்பேன் என்று நினைக்கிறாள் சூர்ப்பனகை. இவள் அரக்கி அழகிய பெண்ணாக வடிவம் எடுத்து வந்திருக்கிறாள் என்று சொல்லி ஏசுகிறாள்.

“வரும் இவள் மாயத்திலே வல்ல வஞ்சனை பொருந்திய அரக்கி, இவளது இந்த உருவம் இவளது உண்மையான உருவம் அல்ல, மாமிசங்களை உண்ணுகின்ற வாழ்க்கை கொண்ட இவளைக் கண்டு நான் அச்ச மடைந்துள்ளேன். உன்னை நெருங்க விடாது இவளை விலக்கு” என்று சூர்ப்பனகை சொல்லுகின்றாள். சீதையை இராமனின் மனைவி என்று அறியாத சூர்ப்பனகை இராமன்மேல் கொண்ட அன்பினால் ஆசையினால் காமத்தால் பிறந்த அக்கறையால்தான் அப்படிச் சொல்கிறாள் என்பதை உணர முடிகிறது.

சீதை பயந்துபோய் இராமனை நெருங்கி நிற்கிறாள். தான் விளையாட்டாகச் செய்த காரியம் தீமையாக வந்துவிட்டதே என்று நினைத்து உடனே விலகிச் செல்லும்படி இராமன் கூறுகிறான்.

அரக்கர்களோடு விளையாட்டுக்காக ஒரு காரியம் செய்தாலும் தீமையே விளையும். என்பதை உணர்ந்த இராமன் “துன்பந் தரத்தக்க செயலைச் செய்யாதே! எனது தம்பி உனது நிலையை உணர்வானாகில் கோபிப்பான். அதற்கு முன்பே விரைவாக இவ்விடத்தை விட்டுச் செல்.” என்கிறான்.

சூர்ப்பனகையோடு உரையாடியது இராமனுக்கு விளையாட்டாக இருக்கலாம். ஆனால் சூர்ப்பனகைக்கு அது எப்படி இருந்திருக்கும். இராமனின் கேள்விகளுக்கு தகுந்த பதிலை சூர்ப்பனகை சொல்லியிருக்கிறாள். ஒவ்வொரு பதிலையும் ஏற்றுக்கொண்டுதான் இராமன் அடுத்த கேள்விக்குச் சென்றிருக்கிறான். இராமனின் எல்லாக் கேள்விகளுக்கும் பொருத்தமான சரியான பதில்களைச் சூர்ப்பனகை சொன்னபின் இனிக் கேள்விக்கே இடமில்லாத நேரத்தில் சீதை வந்தவுடன் இராமன் கதையை மாற்றுகிறான்.

**தடை, சீதை மட்டுந்தான்**

தன்னை இராமன் திருமணம் செய்வதற்குத் சீதை மட்டுந்தான் தடை என்று உணருகிறாள் சூர்ப்பனகை.. “மைக்கருங் குழலினாள் மாட்டு அன்பினில் வலியன்..” மைபோன்ற கரிய கூந்தலைக் கொண்ட இந்தப் பெண்ணிடத்தில் இவன் வலிமையான அன்பு வைத்திருக்கிறான். அதனால் இவள் இருக்கும்வரை இராமன் தன்னைச் சேரான் என்பதைத் திடமாக உணருகிறாள்.

இராமன் அவளைச் செல்லும்படி கூறிவிட்டுச் சீதையோடு சென்று விடுகிறான். மறுநாள் சூர்ப்பனகை சீதையை இராமனிடத்திலிருந்து பிரிப்பதற்காக சமயம் பார்த்து வருகிறாள். சீதையை இராமனிடத்திலிருந்து பிரித்துவிட்டு தானே சீதைபோல் வடிவெடுத்து வந்து இராமனுடன் வாழவேண்டுமென்று அவள் விரும்பியிருக்கலாம் என்பர் சில ஆய்வாளர்கள்.

இராமன் வெளியே சென்றிருந்தான். இலக்குவன் இருந்ததை அவள் காணவில்லை.

இதுதான் நல்ல சந்தர்ப்பம் என்று கருதிச் சீதையைத் தூக்கிச் செல்ல முயல்கிறாள். சீதைக்குக் காவலாக இருந்த இலக்குவன்

அதைக்கண்டு "நில்லடீ..." என்று சத்தமிட்டவ னாக விரைந்து வந்தான்.

சூர்ப்பனகையைக் கண்டு இவள் ஒரு பெண் எனநினைத்து வில்லை எடுக்காது அவளது சுவாலித்து எரிகின்ற நெருப்புப்போன்ற விரிந்த கூந்தலைத் தனது சிவந்த கை ஒன்றினால் திருகிப் பிடித்து அவள் சீதையைத் தூக்கிக் கொண்டு போகும் முன் அவளை இழுத்து வயிற்றிலே உதைத்து பிரகாசம் வீசுகின்ற வாளை உருவி எடுக்கிறான்.

"சுவாலித்து எரிகின்ற நெருப்புப்போன்ற விரித்த கூந்தலை.." என்று சூர்ப்பனகையின் கூந்தலைப் பற்றிக் கம்பன் சொல்லியுள்ளதால் சூர்ப்பனகை தனது சொந்த உருவமாகிய கம்பன் சொல்வதுபோன்று அழகற்ற அரக்கிக் கோலத்தில்தான் வந்தாள் என்று அறிய முடிகிறது. அத்தோடு இவள் சீதையைத் தின்னத் தான் வந்தாளோ என்று பின்பு இராமனிடம் சொல்வதிலிருந்தும் தெரிகிறது.

நில் அடீஇ எனக் கடுகினன். பெண் என நினைத்தான்.
வில் எடாது அவள் வயங்கு எரி ஆம் என விரிந்த
சில் வல் ஓதியைச் செங்கையில் திருகுறப் பற்றி
ஒல்வ யிற்றுதைத் ஒளிகிளர் சுற்று வாள் உருவி

என்று கம்பன் இதனைச் சொல்லி பின் இலக்குவன் என்ன செய்தான் என்று சொல்கிறான். சீதையைத் தூக்கிக் கொண்டு ஆகாய மார்க்க மாகச் செல்வேன் என்று கோபத்தோடு எழுந்த வளை நோக்கி கொடிய காரியத்தைச் செய்யாதே என்று கூறி விரைவாக அவளது மூக்கையும், காதுகளையும், வெப்பம் பொருந்திய முலைக் காம்புகளையும், ஒன்றன் பின் ஒன்றாக அறுத் தெறிந்து தனது கோபத்தைத் தணித்துக்கொண்டு தான் பிடித்திருந்த கூந்தலை விட்டான்.

ஊக்கித் தாங்கி விண்படர்வென் என்று
உருத்து எழுவாளை
நூக்கி நொய்தினில் வெய்து
இழையேல் என நுவலா
மூக்கும் காதும் வெம் முரண்
முலைக் கண்களும் முறையால்
போக்கி போக்கிய சினத்தோடும்
புரிகுழல் விட்டான்.

என்கிறான் கம்பன். மூக்கும் காதுகளும் முலைக்காம்புகளும் வெட்டப்பட்டதால் சூர்ப் பனகைக்கு ஏற்பட்ட வலியைக் கம்பன் சொல்லும் போது அதைப் படிப்பவர்கள் யாவருக்கும் வலிக்கும். சூர்ப்பனகையை ஒரு கெட்டவளாக, காமுகியாக அரக்கியாகப் பார்ப்பவர்கள் அவள் பட்ட வேதனையையும் அவமானத்தையும் உணர மாட்டார்கள்.

எங்கள் மண் மீட்புப் போராளிகளை எங்களுக்குச் சார்பானவர்கள் விடுதலைப் போராளிகள் என்று சொன்னார்கள். நாங்கள் தியாகிகள் என்று சொல்கிறோம். எங்கள் எதிரிகள் பயங்கரவாதிகள் என்கின்றனர். வென்றவனின் சரித்திரத்தை வென்றவனுக்குச் சார்பானவர்கள் எழுதும்போது இப்படித்தானே எழுதுவார்கள். இதில் ஆச்சரிய மில்லை. இப்படித்தான் ஆயிற்று இராமாயணமும்.

**வான்மீகியில் இக்காட்சி**

வான்மீகியின் இராமாயணத்தில் சூர்ப் பனகையோடு இராமன் மட்டுமின்றி இலக்கு வனும் உரையாடுகிறான். சூர்ப்பனகை இராமன்மேல் காமங் கொண்டு இராமனை நெருங்கி இராமனை யார் என்று கேட்டு அறிந்துகொண்டு தன்னை யார் என்று சொல்லி தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி வேண்டுகிறாள். அதற்கு உடன்படாத இராமன் விளையாட்டாக மனைவியுடனிருக்கிற என்னை நீ மணம் செய்துகொள்ளுதலில் விசேடமில்லை. மனையாளுடன் கூடியிராத என் தம்பியை மணம் செய்துகொண்டு சக்களத்தி இல்லாமல் வாழ்வாய். என்று கூறுகிறான்.

அதைக்கேட்ட சூர்ப்பனகை இலக்குமணனை அடைந்து தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி கேட்கிறாள். அதற்கு இலக்குவன் அடியவனான எனக்கு மனைவியாய் நீயும் அடியவளாதலிற் சிறப்பு என்ன? தலைவனான இராமனையே கணவனாகப் பெறுவாய் என்று கூறுகிறான். அவ்விதமே இராமனிடம் சென்று கேட்க இராமன் மறுக்கிறான்.

உடனே இந்த மானுட மகளை உண்டொழித்து மாற்றாள் இல்லாமல் உன்னுடனே கூடி வாழ்வேன் என்று சொல்லி சீதையைப் பிடிக்கத் தொடர அதுகண்டு கோபங்கொண்ட இராமன் இலக்குவனை நோக்கி "கொடியவளோடு பரிகாசம் செய்தல் தக்கதன்று இவளைத் தண் டிப்பாய்" என்று கட்டளையிட இலக்குவன் வாளை எடுத்து காதையும் மூக்கையும் அறுத்திட அவள் இரத்தம் பெருக்கிக்கொண்டு கதறி இரைச்சலிட்டபடியே கரனை நோக்கிச் சென்றாள் என்று உரையாசிரியர் வை.மு.கோ. சொல்கிறார்.

கம்பராமாயணத்தின்படி சூர்ப்பனகை அங்கங்கள் அறுபட்டுப் புலம்பிக் கொண்டிருக்கும் போதுதான் இராமன் தன்னை யாரென்றும் தாங்கள் காட்டுக்குவந்த காரணத்தையும் சொல்கிறான். அதைக்கேட்ட சூர்ப்பனகை

சீதை இராமனின் மனைவிதான் என்று உறுதியாக நம்பி தன்னையும் மணக்கும்படி வேண்டுகிறாள். இலக்குவனுக்காவது என்னை மணம் முடித்துவை என்று கேட்கிறாள். இலக்குவன் அவளைக் கொல்வோம் என்று சொல்கிறான். இவள் போகாமல் இங்கு நின்றால் கொல்வதே வழி என்று இராமன் கூற சூர்ப்பனகை ஓடிவிடுகிறாள்.

**இலக்குவன் செய்தது சரியா?**

கந்தபுராணத்தில், சூரபன்மனின் மகன் பானுகோபன் சுவர்க்க உலகத்தைத் தீக்கு இரையாக்கி தேவேந்திரனின் மகன் முதலான தேவர்கள் பலரைப் பிடித்துச் சிறையிலே அடைத்துவிடுகிறான். தேவேந்திரனும் அவனது மனைவியும் சில தேவர்களும் தப்பி பூலோகத்தில் வந்து தங்கியிருக்கிறார்கள்.

தேவேந்திரன் தேவர்களுடன் சேர்ந்து சிவபெருமானிடம் தம் நிலையை எடுத்துச் சொல்லச் சென்று விடுகிறான். அவனது மனைவி இந்திராணி மாகாளர் என்பவரின் காவலில் இருக்கிறாள். அங்கே சூரபன்மனின் தங்கையான அசமுகி வருகிறாள். இந்திராணியைக் கவர்ந்து கொண்டுபோக முயல்கிறாள். காவலாக நின்ற மாகாளர் அவளது கையை வெட்டிக் கலைக்கிறார்.

இங்கே இலக்குவனோ கையை வெட்டாது மூக்கையும் காதுகளையும் மட்டுமின்றி அவளது முலைக் காம்புகளையும் வெட்டி துன்புறுத்திய தோடு அவமானப் படுத்தியும் விடுகிறான்.

கம்பன் கவிக் கூற்றாகப் பல இடங்களில் சூர்ப்பனகையின் முலைக்காம்புகளை அறுத்ததைச் சொன்னாலும், பாத்திரங்கள் வாயிலாகச் சொல்லவில்லை. சூர்ப்பனகைகூட அதைச் சொல்வது அவமானம் என்று கருதுகிறாள்.

"பெண்பிறந்தேன் பட்ட பிழை," என்றும் "யான் பட்ட பழி", "நாணாது முகம் காட்ட வல்லேனோ?", "மூக்கிழந்து நாணமிலா", "மானமதாற் பாவியேன்" என்று மூக்கறுபட்டதை விட முலைக்காம்புகள் அறுபட்டதையே பெரிதாக நினைக்கிறாள். "காதோடு மூக்குடன் அரிய", "மூக்கிழந்து", "உதைத்துருட்டி மூக்கரிந்த" என்று மூக்கும் காதுகளும் பற்றித்தான் அவள் வெளிப்படையாகச் சொல்கிறாள்.

இராமன் வந்து விசாரித்தபோது தனது கொங்கைகளும், காதுகளும் மூக்கும் இழந்த நிலையைச் சொல்லுகிறாள். "கொங்கைகளும் குழைக்காதும் கொடி

# என்னதான் செய்ய?

என்னதான் செய்ய?
காட்சிகள் சொல்வதெல்லாம் ஒன்றுதான்.

சிலர் ஆள்வதும்
சிலர் வாழ்வதும்
பலர் மாள்வதும் இயல்புதான்.

அதிகார வெறியும்
அதனால் வரும் யுத்தமும்
வலியும் வேதனையும்
மரண ஓலமும்
இயல்புதான்.

ஒருவன் சுரண்டுவதும்
மற்றவன் சுரண்டப்படுவதும்
பசியும் பட்டினியும் பஞ்சமும்
இயல்புதான்.

இது சரியென்றும் அது பிழையென்றும் வகுத்துக்
கூற நீ யார்? இல்லை நான்தான் யார்?

பகுத்தறிந்து சரி பிழை காணச் சொல்கிறாய்?
இயற்கைக்கு ஏது பகுத்தறிவு?
தீதும் நன்றும்
அறமும் மறமும்
நீதியும் அநீதியும்
இன்பமும் துன்பமும்
இயற்கைக்கு ஒன்றுதான்.
நீயும் நானும் அந்த இயற்கையின் தொடர்ச்சிதான்!



**இஹ்ஸான் ஜுனைதீன்**
ஏறாவூர்.

மூக்கும் குறைத்தழித்தால்" என்கிறாள். முலைக் காம்புகள் என்று சொல்லாமல் முலைகள் என்றே சொல்கிறாள். இராமன் இலக்குவனிடம் விசாரித்த போது "இவள்தன் விடுகாதும் கொடிமூக்கும் ஈர நினைந்து இவள் இழைத்த பிழை என்" என்று கேட்கிறான். "நீ இவளது காதும் மூக்கும் அரிய இவள் செய்த பிழை என்ன" என்று மட்டுமே கேட்கின்றான். முலைகளை அறுத்தது பற்றி எதுவும் கேட்கவில்லை. அப்படிக் கேட்பது நாகரிகம் இல்லை என்று இராமன் கருதி யிருக்கலாம். அப்படிக் கேட்பதே நாகரிகம் இல்லையென்றால் அவற்றை அறுத்தது மட்டும் நாகரிகமாகுமா?

இராவணன் சூர்ப்பனகையிடம் "உனது காதுமடலையும் மூக்கையும் வலிய அறுக்குமாறு நீ அவர்களிடத்தில் செய்த பிழை என்ன சொல்" என்றே கேட்கிறான். முலைக் காம்புகளை அறுத்ததைப் பற்றி எதையும் கேட்கவில்லை.

நீஇடை இழைத்த குற்றம என்னைகொல்
நின்னைபின்னே
வாயிடை இதழும் மூக்குமவலிந்தவரகொய்ய என்றான்..

***வரதமணி*** என்பவரின் கம்பராமாயணம் உரை நடைச் சுருக்கம் என்ற நூலில் இதைப்பற்றி எழுதும்போது "ஆற்றல்மிக்க லக்ஷ்மணன் தன் வாளினால் அவளுடைய மூக்கையும், காது களையும், மற்றும் இரண்டு அங்கங்களையும் அரிந்து அவளை மானபங்கம் செய்தான்." என்று எழுதுகிறார்.

சக்கரவர்த்தித் திருமகன் என்ற பெயரில் ***இராஜாஜி*** எழுதிய புகழ் மிக்க நூலில் இதைச் சொல்லும்போது "லக்ஷ்மணன் அவளை எளிதில் பிடித்துத் தள்ளி அங்கவீனம் செய்தான்." என்று எழுதியுள்ளார். இதே பெயரில் ***ஏ.எஸ். வழித்துணை இராமன்*** என்பவர் எழுதிய நூலில் இதை இராஜாஜி போலவே "அங்கஹீனம்" செய்தான் என்று எழுதியுள்ளார். "கம்பராமாயணம் உரை நடையில்" என்ற நூலில் முனைவர் ***அறிவொளி*** இதைப்பற்றி எழுதும்போது "மூக்கும் காதும் முலைக்காம்பும் அறுத்து" என்று கம்பன் சொல்வதை அப்படியே சொல்கிறார்.

பசுவின் முலைகளை அறுத்த அறனற்ற செயலைச் செய்தவர்க்கும், பெண்ணின் கருவைச் சிதைத்தோர்க்கும், பெற்றோர் ஆசிரியர் முதலான குரவர்களுக்கு கொடுஞ் செயலைச் செய்தோர்க்கும், கூட பாவ விமோசனம் உண்டு. ஆனால் நன்றி கொன்றோர்க்கு விமோசனம் இல்லை என்று ஆலத்தூர்க்கிழார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடும் புறநானூற்றுப் பாடலில் "ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்.." என்று தொடங்கிப் பாடுகிறார்.

இதில் பசுவின் முலையை அறுத்தல் எவ் வளவு அறமற்ற செயல் என்று சொல்லப் பட்டுள்ளதைக் காணலாம். ஆண்களைப்போல பெண்கள் அட்டாங்க நமஸ்காரம் செய்யக்கூடாது பஞ்சாங்க நமஸ்காரம்தான் செய்யவேண்டும் என்ற இந்துசமயக் கோட்பாட்டுக்கு விளக்கம் சொல்வோர் பிள்ளைக்குப் பால் கொடுக்கும் அமுத கலசங்களாகிய மார்பகங்களும் பிள்ளை யைத் தாங்கி இருக்கின்ற கருவறை பொருந்திய வயிற்றுப் பகுதியும் மண்ணில் படக்கூடாது என்பர்.

இலக்குவனோ வயிற்றில் காலால் உதைத்து முலைக்காம்புகளை அறுத்து கொடுமைப் படுத்திவிட்டான். பசுவுக்கே செய்யக் கூடாததை பெண்ணுக்குச் செய்யலாமா?

## திருவள்ளுவரும் பெண்மையும்

சூர்ப்பனகையின் முலைக்காம்புகளை இலக்குவன் அறுத்தான் என்று சொல்வதில் பலர் தயக்கமடைவது ஏன். இலக்குவன் தவறுதலாக அறுக்கவில்லை வேண்டுமென்றேதான் அறுத் தான் என்பது கம்பராமாயணப்படி தெளி வாகிறது.

கல்லாதான் சொல்காமுறுதல் முலை இரண்டும்
இல்லாதாள் பெண் காமுற்றற்று

என்ற திருக்குறளிற்கு. "கல்வியில்லாதான் ஒருவன் அவையின்கண் ஒன்று சொல்லுதலை அவாவுதல் இயல்பாகவே முலை இரண்டும் இல்லாதாள் ஒருத்தி பெண்மையை அவாவி னாற் போன்றதாம்" என்று ***பரிமேலழகர்*** உரை தருகிறார். பெண்மைக்குரிய சிறப்பம்சம் வாய்ந்த அந்த உறுப்பை அறுத்து இவள் இனி பெண் என்ற உணர்வோடு இருக்கக்கூடாது. யாரையும் மயக்க நினைக்கக் கூடாது என்று நினைத்துத்தான் இலக்குவன் இதைச் செய் தானோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் சூர்ப்பனகை அழகான காம வல்லியாக வந்ததையோ தன் தமையன் இராமனைத் தன் அழகால் மயக்க முயன்றதையோ இலக்குவன் அறிந்திருக்கவில்லையே! அதனால் சூர்ப்பனகை யின் முலைகளை அறுத்ததை அந்த அடிப்படை யிலும் நியாயம் என்று சொல்ல முடியாது.

இலக்குவன் சூர்ப்பனகையை பெண் என்று நினைத்து பெண்ணைக் கொல்லுதல் பாவம் என்றும், பழிவந்து சேரும் என்று நினைத்து

வில்லை எடுக்காமல் வாளை உருவி எடுத்து வெட்டினான் என்கிறான் கம்பன்.

யாகத்தை அழிக்க வந்த தாடகையைக் கொல்லும்படி விசுவாமித்திரர் வேண்ட இராமன் தாடகையைப் பெண் என்று கண்டு அவளைக் கொல்லுதல் பாவமாகும். பழிவந்து சேரும் என்றுதான் நினைத்தான். இதனைக் கம்பன் “பெண் என மனத்திடை பெருந்தகை நினைத்தான்.” என்கிறான். விசுவாமித்திரர் ஆணுக்கும் பெண்ணுக்கும் உருவம் அல்ல வேறுபாடு என்று தொடங்கி பல சமாதானங்களைச் சொன்ன பின்பே இராமன் தாடகையைக் கொல்கிறான். விசுவாமித்திரர் கூறிய அறிவுரையை நேரில் கேட்ட இலக்குவன் சீதையைத் தின்ன வந்த சூர்ப்பனகையை மட்டும் எப்படி பெண் என்று நினைத்தான். அவளைக் கொன்றிருக்கலாமே.

**இராவணனைக் கொன்றவர் யார்?**

இராவணனது மரணத்துக்கு சூர்ப்பனகையே காரணியாக இருந்தாள் என்று இராவணன் இறந்தபின்பு விபீடணன் சொல்லி அழுகிறான். “கொல்லாத மைத்துனனைக் கொன்றாய் என்றே.. பல்லாலே இதழ் அதுக்கும் கொடும்பாவி பழி சூழ்ந்தாளோ?” என்கிறான். சீதை என்னும் பெருநஞ்சை நீ பார்த்ததால்தான் உன் மரணம் நிகழ்ந்தது என்றும் சொல்கிறான்.

எந்த நஞ்சும் உண்ணாமல் உயிரை உண்ணாது. ஆனால் சீதை என்ற பெரு நஞ்சு நீ உண்ணாமலேயே உன்னைக் கொன்றுவிட்டது. சீதையை நீ பார்த்ததால் அந்த நஞ்சு உன் உயிரைப் போக்கியது. என்கிறான்.

உண்ணாதே உயிருண்ணாது ஒருநஞ்சு
சனகி எனும் பெருநஞ்சு உன்னைக்
கண்ணாலே நோக்கவே போக்கியதே
உயிர். நீயும் களப் பட்டாயே!

சீதை ஒருபோதும் இராவணனைப் பார்க்கவில்லை என்றும் அசோகவனத்தில் இராவணனோடு உரையாடும்போது ஒரு புல்லைப் பிடுங்கிப் போட்டு உன்னை ஒரு புல்லாகவே மதிக்கிறேன் என்று சொல்லி உரையாடியதாகவும் கம்பன் சொல்கிறான். அதனால் சீதை பார்க்காமலேயே இராவணன் பார்த்த பார்வையில் இராவணனுக்கு விஷம் ஏறியது என்பது இதன் பொருள்.

கும்பகர்ணனைப் போருக்கு அனுப்பும்போது அவன் இராவணனிடம் “கிட்டியதோ செரு கிளர் பொன் சீதையைச் சுட்டியதோ.. திட்டியின் விடம் அன்ன கற்பின் செல்வியை விட்டிலையோ?” என்று கேட்கின்றான். சீதையின் பொருட்டா இந்த யுத்தம்.? சீதையை நீ இன்னும் விடவில்லையா? அவள் திருஷ்டிப் பாம்பு போன்றவள் என்கிறான்.

திருஷ்டிப்பாம்பு என்ற ஒருவகைப் பாம்பு தன் பார்வையாலேயே விஷத்தைப் பாய்ச்சிக் கொல்லுமாம். இந்த வகைப் பாம்பு ஆபிரிக்கக் காடுகளில் இருப்பதாக ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். அதைத்தான் திட்டியின் விடம் என்கிறான் கும்பகர்ணன். சீதை திட்டிப் பாம்பைவிடக் கொடிய ஆற்றல் கொண்டவள் என்ற கருத்திலேயே விபீடணன் சொல்கிறான்.

இராவணனது மரணத்துக்கு ஐந்து காரணங்களை அவனது மனைவி மண்டோதரி சொல்கிறாள். தசரதரது வேண்டுதலால் விரதம் மேற்கொண்டு இராமன் காட்டுக்குச் சென்றதும். சூர்ப்பனகை இழந்த மூக்கும், சீதைமேல் இராவணன் கொண்ட காதலும், சீதையின் பேரழகும்,அவளுடைய கற்பும் என இவையே இராவணனின் மரணத்துக்குக் காரணம் என்கிறாள்.

ஆனால் மேலே சொல்லப்பட்ட ஐந்து காரணங்களுக்குள்ளே மிகமிக முக்கியமான ஒரு காரணத்தை இதுவரையில் யாருமே சொல்லாத ஒரு காரணத்தை மண்டோதரி சொல்லியிருக்கிறாள். இராவணனது மரணத்துக்கு காரணம் இலக்குவன் என்கிறாள் அவள்.

இலக்குவன் சூர்ப்பனகையின் மூக்கினை அறுத்ததற்குப் பதிலாக அவளது நாக்கினை அறுத்திருக்கவேண்டும். அல்லது அவளைக் கொன்றிருக்கவேண்டும் என்கிறாள்.

மூக்கினை அறுத்த தம்பி மூட்டியதீ அந்நாளின்
நாக்கினை அறுத்திருந்தால் நாசம் ஏற்பட்டிராது.
தீக்கணை ஒன்றால் அந்தச் சிறுக்கியின் ஆவிதன்னைப்
போக்கி விட்டிருந்தால் நானும் பூவிழந்திருக்க மாட்டேன்.

நாக்கை அறுத்திருந்தால் அவள் சீதையின் அழகை இராவணனுக்குச் சொல்லியிருக்க மாட்டாள். அவளை இலக்குவன் கொன்றிருந்தால் ஒருபிரச்சினையும் வந்திருக்காது, நான் என் கணவனை இழந்திருக்க மாட்டேன். என்று மண்டோதரி சொல்வதாக கம்பராமாயணத்தில் ஒரு பாடல் உண்டு. ஆனால் இப்பாடலில் வரும் சிறுக்கி என்ற சொல் கம்பனின் காலத்தில் இல்லையென்று சொல்லி இப்பாடலை இடைச் செருகற் பாடல் என்று நீக்கி விட்டார்கள்.

பாஞ்சாலிக்கு இழைக்கப்பட்ட கொடுமை உலகம் முழுக்க அறிந்ததுதான். ஆனால் சூர்ப்பனகையின் முலைக்காம்புகளை அறுத்த கொடுமையை உலகம் கண்டுகொள்ளவில்லை.

❍❍❍

# சாயாத தராசு

ஆண் – பெண்
என்று கேள்விப்பட்டோம்
நியதிகள்...
வாழ்கின்றன
விருப்பம்... வெறுப்பு
எல்லைகளைத் தாண்டி...

யார் கேட்கிறார்கள்?
இது உன் ஆசையா?
– இல்லை.

கட்டாயத்தின் பெயரில்
எய்யப்படும் அம்புகள்,
அமைதியின் மார்பில்
துளைக்கின்றன...

நீங்கள் ஏன்
தலை குனிகிறீர்கள்?
தராசு சாய்ந்தால்
சுமை சுமப்பது
பெண் மட்டுமா?

நிமிர்ந்து நில்லுங்கள்...
சொல்லுங்கள்...
உரக்கச் சொல்லுங்கள்...
அவர்கள் காதில் விழும்வரை அல்ல,
மனதால் உணரும்வரை...

உணரும் பக்குவம் இருக்கிறதா?
உணரும் எண்ணமே இல்லை.

பெண் என்றால்
ஆணிற்கு அடிமை!
பெண் என்றால்
தலை குனிந்தே வாழ
பிறந்தவள்!

யார் வைத்தார்கள்
இந்த அளவுகோலை?
யார் வகுத்தார்கள்
இந்த அடிமைத்தனத்தை?

தூக்கி வீசுங்கள்
சாய்ந்த தராசுகளை
வார்த்தைகளை விட
வலிமையான ஆயுதத்தால்...
செயலால்.

இவற்றைச் சொன்னால்
பெண்ணியவாதியா?
அப்படியானால்
நான் பெண்ணியவாதியே.

பண்பாட்டை உடைக்க அல்ல,
பண்பாட்டில்
சமத்துவம் விதைக்க
பேசும் பெண்ணியவாதி.

தலை தூக்கி,
நெஞ்சு நிமிர்த்தி,
மார் தட்டி
சொல்வேன்...

பெண் என்ற கர்வத்தில்...
சாயாத தராசு நான்.
நான் பேசுவது
பெண்ணியமே

**– அம்பிகை சண்முகலிங்கன்**

**தே**வதாசன் அவனது ஐந்தாவது வயதில் அவரைக் கண்டான். அச்சிறு பையன் முன்னொரு போதும் பார்க்காத கோலம் அது. தலையின் உச்சியில் திரட்டி முடித்து வைக்கப்பட்டிருந்த சடையே அவரது அடையாளம். உடம்பெல்லாம் அப்பிய சாம்பல், நெற்றியில் பளிச்சென்று தெரியும் பெரியதோர் குங்குமத் திலகம். அவரைச் சடைச்சாமி என ஊரவர் அழைத்தனர்.

திராய்மடு என்றழைக்கப்படும் காடு ஒன்றினுள் ஓர் ஆச்சிரமம் அமைத்து அவர் வாழ்கிறார் என ஊரவர் பேசிக்கொண்டனர்.

வாரம் ஒரு முறை ஆச்சிரமம் விட்டு வெளி வரும் அவர் ஊர்முழுதும் சுற்றிவிட்டு ஆச்சிரமத்தில் போய் ஒடுங்கிக்கொள்வார்.

அவர் குளிப்பதே இல்லையாம். நெருப்புக் கருகில்தான் எப்போதும் இருப்பாராம் நெருப்புக் குளியலே அவரது குளிப்பு.

மூக்கொலியினால் பேசுவார். கலகலவென்று சிரிப்பார். வாகனம் எதிலும் ஏறியது கிடையாது.'' காரில் ஏறுங்கள் பஸ்ஸில் போகலாமே'' என்று யாராவது அழைத்தால் ஒரு புன்சிரிப்புடன் மறுத்து விடுவார். மாட்டு வண்டிலில் சைக்கிளில் கூட ஏறியது கிடையாது. அவை அவர்க்கு ஓர் மெசின். மட்டக்களப்பின் மூலை முடுக்குகள் எல்லாவற்றையும் தனது இரு கால்களினாலும் அளந்தவர் அவர்.

நடராஜா என்ற பெயர் அவருக்கே பொருந்தும். மட்டக்களப்பு நகரிலிருந்து சடைச் சாமியாரின் திராய்மடு ஆச்சிரமம் போகும் வழியில் எங்கள் வீடு இருந்தது.

ஒருநாள் இந்தச்சடைசாமியார் தேவதாசன் வீட்டுக்கு வந்தார்.

அவர்களது கடப்படியைத் திறந்தபடி வளவுக்குள் வந்த சடைச் சாமியாரைக் கண்ட




# காத்திருப்பு

பேராசிரியர்
சி. மௌனகுரு

நெருப்பு அவருக்குத் தண்ணீர்போல என்று கூறுவார்கள். குளிக்காத அவர் உடலில் எந்த துர்நாற்றமும் கிடையாது.

அவர்தலையிலே பெரியதோர் சடாபாரம். தலையில் அரசர் வைக்கும் ஒரு பெரிய முடிபோல கறுத்து உயர்ந்து கம்பீரமாகக் காட்சிதரும். சின்ன மீசை. நாடியிலே சில மயிர்களாலான தாடி. சடாபாரம் வளர்ந்த அளவு என் தாடி வளரவில்லை என்பது எல்லோருக்கும் ஓர் அதிசயம்.

வெற்றுமேல் அதன் மேல் பழந்துணியிலான ஓர் போர்வை. போர்வையை அகற்றினால் அவர் மெலிந்த உடலில் எலும்புகள் தெரியும் சாம்பலை அள்ளிப்பூசியது போல உடல் முழுதும் வெண்ணீறு

தேவதாசனின் தாயார் முத்தம்மா, பதை பதைப் புடன் ''சடைச்சாமியார் சடைச் சாமியார்'' என்றபடி பரபரத்து பாயை எடுத்துத் திண்ணையில் விரித்து, அதன் மீது ஒரு வெள்ளையும் விரித்தார்.

இது எதற்கு என்றபடி முடக்குத் தடியை ஒருபக்கம் சாத்தி வைத்து பாயில் அமர்ந்தார். சடைச் சாமியார். அவருக்கு தேநீரும் தரப்பட்டது.

''பொன்னையா எங்கே முத்தம்மா?'' என்று கேட்டார். சடைச்சாமியார் தேவதாசனின் அம்மா விடம் தேவதாசன் அப்பா பெயர் பொன்னையா.

அவரும் ஒரு சாமியார் போலக் கருதப் பட்டவர் தாமரை இலைத் தண்ணீர்போல வாழ்ந்த ஒரு கிரகஸ்தர்.

தேவதாசனின் அப்பாவைத் தேடி அவரது வீட்டுக்குப் பல சாமிமார்கள் வருவதும், அவர்கள்

உட்கார்ந்து கதைப்பதும், அவர்கட்கு அவனது அம்மா உணவு சமைத்துக்கொடுப்பதும் வழமை. இச்சாமிமார் பல வகையினர்; பல இடத்தினர்; பல சாகியத்தினர். அனைவரும் சித்தர்கள் போலத் தோற்றம் அளிப்பவர்கள். சமூகப் பார்வையில் விசர்ப்போக்கினர். அவர்களின் உலகே வேறு.

இந்த உலகைச் சிரிப்போடு அவர்கள் பார்த்தனர்.

அவர்கள் சுற்றி இருந்து கஞ்சா அடிக்கும் அழகே அழகு. ஒரு விதமான கூட்டு வாழ்க்கை அவர்களிடம் நிலவியது. அவர்கள் பேச்சு ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாத மாதிரி பார்ப் போருக்குத் தோன்றும். விளங்கிக் கொள்வது கடினம். நிறையப் பரிபாசைகள் பரிமாறிக் கொள்ளப்படும்.

பைத்தியக் கூட்டம் ஒன்றுக்கொன்று தொடர் பில்லாமல் கதைப்பதுபோல அவ்வுரை யாடல் அமைந்து இருக்கும்.

ஆனால் ஊரவர்கள் தமது பார்வையில் இவர்களைக் கிண்டல்கள் பேசினாலும், இவர்கள் மீது ஒருவித பயம் கலந்த மரியாதை வைத்தி ருந்தனர்.

சிறிது நேரத்தில் பொன்னையாவும் வந்து விட்டார். இல்லறச் சாமியாரும், துறவறச் சாமி யாரும் தமது பரிபாசையில் உரையாட ஆரம்பித்து விட்டனர்.

தேவதாசன் விளையாடப் போய்விட்டான். அவனுக்கு விளையாட்டு முக்கியம்.

சடைச் சாமியார் ஒவ்வொரு முறையும் தன் ஆச்சிரமம் நோக்கி செல்லும்போது வழியில் இருக்கும் தேவதாசன் வீட்டைக் கடக்கையில் பொன்னையா இருந்தாலும் இல்லாவிட்டாலும் பொன்னையாவின் தேவதாசன் வீடு வந்து அவனது அம்மா கொடுக்கும் தேநீர் அருந்தி இளைப்பாறி அம்மாவுடன் உரையாடி அம்மா கொடுக்கும் பணத்தையும் பெற்றுக் கொண்டு செல்வது வழமை. பணத்தை அம்மா தேவதாசனி டம் கொடுக்க அவனே சாமியாருக்கு அதனைக் கொடுப்பான் அவரும் அவனை ஆசீர்வதித்து வாங்கிக் கொள்வார். வரும் நேரம் பொறுத்து சடைச் சாமியாருக்கு மதிய இரவு உணவுகள் வழங்கப்படும்.

சடைச் சாமியார், அப்பா, அம்மா, உறவை தேவதாசன் இப்போது நினைத்துப் பார்க்கிறான். அவன் இப்போது தேவதாசன் அல்ல தேவதாஸ் ஐயா சடைச்சாமியார் அம்மா அப்பா உறவு. அது ஓர் குடும்ப உறவுபோல தேவதாசனுக்குப்பட்டது.

தன் வீட்டுக்கு வரும் தமையனை உபசரிப்பது போல தேவதாசன் தாயார் அவரை உபசரிப்பார் தேவதாசன் அம்மா ஒரு வெகுளி அன்பைத் மிக மிகத் தாராளமாக எல்லார்மீதும் கொட்டுவர்.

எல்லையற்ற அன்பு அது அவரது அன்புக்கு அனைவரும் அடிமை எதிரிகள் கூட அதற்கு அடிமை.

பாச பந்தங்கள் கடந்த சடைச் சாமியாரும் அதற்கு அடிமையானார்.

தேவதாசன் தந்தை அவனிடம் உறவுகள் பல வகைப்படும் என்பார்.

அப்போது அந்தப் பரிபாசை அவனுக்கு விளங்கவில்லை.

அவனையும் குடும்பத்தையும் அப்பா அழைத்துக்கொண்டு திராய்மடுக் காட்டில் அமைந்திருந்த சடைச் சாமியார் ஆச்சிரமம் செல்வார் அங்கு ஓரிரவு தங்கியும் மீள்வார்கள். சூழவரக் காடு குளிர் பயங்கர மிருகங்கள் பச்சைபசேலெனத் தோப்பு அருகில் ஒரு சிறு குளம் அதுவே திராய்மடு. அங்கே சமைத்துச் சாப்பிட்டு அங்கு வரும் சாமிமார்க்கும் உணவளித்து வீடு வருவார்கள்

தேவதாசனுக்குத் திராய்மடு முருகன் கோவிலும் அதன் சுற்றுச் சூழலும் மிக விருப்புக்குரியனவாகி விட்டன.

சடைச்சாமியாரின் மிக அன்பிற்குரிய பிள்ளை யுமாகி விட்டான் தேவதாசன்.

தேவதாசன் 11 ஆவது வயதில் ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் சித்தியடைந்ததால் அவனது கிராமப்புறப் பாடசாலையை விட்டு 13 மைல்களுக்கு அப்பாலுள்ள விடுதி வசதி மிகுந்த வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் இணைந்து கொண்டான்.

அங்கு போகுமுன் அவனது அப்பாவும் அம்மாவும் வழமைபோலச் சடைச் சாமியாரின் திராய்மடு முருகன் கோவிலுக்கு அழைத்துச் செல்கிறார்கள்.அவரும் அவனை ஆசீர்வதித்து அனுப்புகிறார்.

“நீர் பெரிய ஆளாக வருவீர் உலகத்தாரால் பேசப்படுவீர் அதைக்காண நாங்கள் இருக்க மாட்டோம்”.

என தன்னையும் அவன் தந்தையையும் காட்டிக்கூறி அவனை வழியனுப்பி வைத்தார் சடைச்சாமியார்.

இரண்டுகிழமைக்கொருமுறை அல்லது ஒவ்வொரு மாதமும் வீடு வந்து விடுவான் தேவதாசன்.

அக்காலங்களில் சடைச் சாமியார் வீடு வரும்போது அவரைக் காண்பதும் கதைப்பதுமாக இருந்தான் அவனது படிப்புகள் பற்றியும் அங்கு கிடைக்கும் அனுபவங்கள் பற்றியும் சாமியார் விசாரிப்பார்.

12 ஆம் வயதில் தேவதாசனது பாடசாலைக்கு யோகி சச்சிதானந்த யோகீஸ்வரர் வந்தார்.

அவர் தென்னக் கும்புரை எனும் அழகிய மலைப்பகுதியில் ஆச்சிரமம் அமைத்து வாழ்பவர்.மிகப் பிரபல்யம் பெற்ற யோகி எனப் பெயர் பெற்றவர்.ஒரு பணக்காரச் சாமியார். தோற்றம் காவிஉடை பேச்சு எல்லாவற்றிலும் ஒரு பணக்காரத் தோற்றம் அளித்தது

காரில்தான் வந்து இறங்கினார். அவரை மாணவருக்கு ஓர் உரையாற்ற அவர்கள் அதிபர் அழைத்திருந்தார்.

மச்சம், மாமிசம் சாப்பிடுவதால் ஏற்படும் தீமைகள் பற்றி அவர் மாணவருக்கு ஓர் அழகான உரையாற்றினார். சைவ சமயத்தின் அடிப்படையே மரக்கறி உணவே என்றும், சமய குரவர்களும் ஞானிகளும் சைவ சமயத்தில் மரக்கறி உணவுண்டு ஞானம் பெற்றமை பற்றியும் உரையாற்றினார்.

மச்சம் தேவதாசன் குடும்பச் சாப்பாட்டோடு ஊறிப்போன ஒன்று. மச்சம் இல்லாமல் அவர்களுக்குச் சோறு இறங்காது.மரக்கறி உணவு விசேட நாட்களில் மட்டும்தான் இப்படி வளர்ந்த தேவதாசன் அவ்வுரைகேட்டதும் மச்சம் சாப்பிடுவதைக் கைவிட்டு விட்டான் அவனது நண்பர்கள் பலரும் கைவிட்டனர்.

மரக்கறிக்கூட்டம் ஒன்று விடுதியில் உருவாகிவிட்டது.

மரக்கறி உணவையே அம்மாவிடம் வேண்டினான் தேவதாசன். அம்மாவுக்கோ அவனது இம்முடிவு பெரும் ஆச்சரியம் அளித்திருந்தது.

விடுமுறையில் அவன் வீடு வந்தபோது வழமைபோல சடைச்சாமி அவர்கள் வீட்டுக்குத் தன் முடக்குத் தடியுடன் வந்திருந்தார்.

அன்று அவர்கள் வீட்டில் அம்மா பெரிய கயல் மீன் வாங்கிச் சமைத்திருந்தார்.

கயல் மீன் பொரியல் அதன் சினைப் பொரியல் கயல் மீனில் கமகமக்கும் குழம்பு கயல் மீன் தலையில் ஆணம் (சொதி) இதனை விட இரண்டு மரக்கறிகள் அவனுக்குப் பிடித்தமான கத்தரிக்காய்ப் பிரட்டல். அம்மாவின் கறிகளுள் இந்தக் கத்தரிக்காய்ப்பிரட்டல் அவனுக்கு மிகப் பிடித்த ஒன்று.

உணவு பரிமாறும் நேரம் அம்மா கயல் மீன் பொரியல், கயல்மீன் சினைப்பொரியல், கயல் மீன்கறி, கயல் மீன் தலை என்பன வைத்துக் கத்தரிக்காய்ப் பிரட்டல் கறியும் வைத்து சடைச் சாமியாருக்குப் பரிமாறினார்.

சாப்பாட்டுத் தட்டு முழுவதும் மீன் மயம். மச்சம் மச்சம் மச்சம். எனக்கு இவை வேண்டாம் என்று கூறிய தேவதாசன் கத்தரிக்காய்க்கறியோடு மாத்திரம் சாப்பிட்டான்.

அம்மா வற்புறுத்தியும் அவன் மசியவில்லை

அவன் சாப்பிடுவதை சடைச்சாமியார் நன்கு அவதானித்தார்.

அம்மா அவனிடம் ''மச்சம் சாப்பிடு உடம்பு வளரும்'' என வலியுறுத்தினார்.

அவனுக்கு மீன் சினைப்பொரியல் மிக விருப்பம் என அம்மாவுக்குத் தெரியும் அதனை அவன் சாப்பிடாதது முத்தம்மாவுக்கு மிகுந்த வருத்தமளித்திருக்க வேண்டும்.



தேவதாசன் சச்சிதானந்த யோகீஸ்வரரின் பேச்சினை அங்கு சுருக்கியுரைத்தான்.

''நாம் எல்லோரும் சைவர். சைவத்தின் பிரதான அம்சம் இந்த மரக்கறி உணவு'' என வயதுக் கேற்ற குட்டிப் பிரசங்கம் ஒன்றும் செய்தான்.

சடைச்சாமியார் அம்மாவிடம் அமைதியாகக் கூறினார்.

''முத்தம்மா தேவதாஸை அவன் பாட்டில் விட்டுவிடு''

அவனுக்கு இவ்வார்த்தைகள் தந்த உற்சா கத்தில் சடைச்சாமியாரைப் பார்த்து துடுக்காக ஒரு கேள்வியும் கேட்டேன்.

“நீங்கள் சைவச் சாமியார் எப்படி மீன் சாப்பிடுவீர்கள்? அது பாவம் அல்லவா? சைவத் துரோகம் அல்லவா?”

வழக்கம் போல தன் வெண்கலக் குரலில் கல கல எனச் சிரித்த அவர்.

“துறவிக்கு எந்த உணவும் ஒன்றே. துறைவி சைவத்துக்கும் கட்டுப்படார். இதனைப் புரிந்து கொள்ள உனக்கு வயது போதாது நீண்ட நாட்கள் எடுக்கும் இப்போது நானும் நீரும் கிடைத்ததைச் சாப்பிடுவோம்” எனச் சாப்பிட ஆரம்பித்து விட்டார்.

தேவதாசனுக்கு அவர் மீதிருந்த பக்தி சற்றுக் குறைந்து விட்டது போல இருந்தது. ஆனால் பாசம் குறையவில்லை.

தன் தாயாரின் உறவில்லாத ஆனால் அம்மா மிகவும் அன்பு செலுத்தும் சாப்பாடுபோடும் தமையன் அல்லவா? அவர்.

அவரிடம் அப்படி நீர் பேசியிருக்கக்கூடாது என்று அம்மா அவனிடம் பின்னர் கடிந்து கொண்டார்.

அப்பா ஒன்றுமே கூறவில்லை அவர் சாமியார் கட்சி.

தேவதாசன் குடும்பத்தார் மாதம் ஒருமுறை அல்லது இரு மாதம் ஒருமுறை சடைச்சாமியார் ஆச்சிரமம் சென்று வருவது தொடர்ந்து நடை பெற்றுக்கொண்டேயிருந்தது.

அங்கு பல சாமிமார்களைக் காணவும் அவர்கள் உரையாடுவதை அவதானிக்கவும் முடிந்தது அவர்கள் கூடியிருந்து கஞ்சா போடுவதும் பின்னர் கதைப்பதும் மிகுந்த சுவராஸ்யமாக இருக்கும்.

ஆறு ஏழு பேர் வட்டமாக வெள்ளை மணலில் அமர்ந்துகொள்வர். கீழே வெள்ளை மணல். வானத்தில் பூரணச் சந்திரன் பால்போல எறிக்கும் நிலவு.அற்புதமான இயற்கைச் சூழல்.

கஞ்சாச் செடியை மெல்லிதாக அரிந்து அதனைப் பஸ்பம் போலாக்கி தென்னை ஓலையால் செய்த அடி சிறுத்து தலை பருத்த குழலின் தலைப்பகத்தில் அதனை நிரப்புவர். அதனை தண்ணி பாதி நிரம்பிய கஞ்சாக் குடுவையினுள் இடுவர். கஞ்சாக்குடுவை என்பது செம்பு போன்ற ஒரு பாத்திரம். சாமியார் ஒருவர் குழலின் தலைப்பாகத்தில் வைக்கப் பட்ட அரிந்த கஞ்சாச் செடியில் நெருப்பினை வைப்பார்.

இன்னொருவர் செம்பின் விளிம்பினில் தன் வாய்வைத்து இடது கையில் குடுவையைத் தாங்கிக்கொண்டு வலது கையால் குடுவையின் வாயை பொத்தியபடி தனது வாயால் பூ பூ எனத் தண்ணீருக்குள் காற்றை ஊதுவார்.

அக்காற்றுபட்டு குழலின் மேலுள்ளநெருப்பு பிரகாசித்து கஞ்சாச் செடித்தூளை எரிக்கும். கஞ்சாப் புகை மேல் எழும். அப்புகையை தன் உள் வாங்கும் மூச்சால் உறிஞ்சித் தனக்குள் எடுத்து அதனை அனுபவித்தபடி அடுத்த சாமியாரிடம் குடுவையை இவர் கொடுப்பார். மற்றவர் இந்த உறிஞ்சுதலைச்செய்ய இன்னொருவர் அவருக்கு நெருப்பு வைத்து

## அற்புத அகத்திய தாகம்

விழியில் விழும் விம்பங்களை
வரைந்து காட்டும் சாதனமாக
வண்ணமான எண்ண எழுச்சியை
வரிசையாகப் பரப்பும் ஆயுதமாக
வானவில்லாகச் சேர்த்து உலகை
வனப்பாக மாற்றும் ஓவியமாக
வையகத்தில் விளைந்தவற்றை
வரைபடமாக
விளக்கும் வெள்ளித் திரை கவிதையே!

வார்த்தைகளில் அடங்காத களகதும்பி
வாக்கியமான எழுத்தெனும் பூக்காட்டு
வாசாலகமான(சொல்வன்மை)
கவிதையில் நனைந்து
விளாவினால் கவிதையொரு போதையே
நீ தொலையாதிருக்க நாட்டு
நினைவு ஓவியங்களை அழகாக!
அறிவு நதியில் அழியாதது
அற்புத அகத்திய தாகம்.

**புதுமைக்கவி**
**வேதா. இலங்காதிலகம்**
- டென்மார்க்

உதவுவார். இந்த குடுவை வட்டமாகச் சுற்றி இருப்போரின் கை மாறி வரும்.

தண்ணிரை ஊதும்போது கேட்கும் கள களவென்று தண்ணீர் ததும்பும் ஓசையும் அவர்கள் கஞ்சாப் புகையினை இழுக்கும் மூச்சோசையையும் தவிர வேறு ஓசைகள் இல்லை.

கஞ்சாவின் நறுமணம் முகந்து அப்புகையைத் தமக்குள் இழுத்து அது தரும் போதையில் மிதந்து திளைத்துக் கிடப்பார்கள். எவரும் எதுவும் பேசார். பூரண அமைதியே நிலவும். அமைதியும் அவர்களுக்கு ஓர் போதை போல. அது ஒரு வகையான பேசா கூட்டு மன இன்பம் எனப் பின்னால் அறிந்து கொண்டான் தேவதாசன்.

இந்த இன்பத்தைத் தனித்தனியாக அனுபவித்த பின் அவர்களது உரையாடல் தொடரும். அவ்வுரையாடலில் எதுவுமே தேவதாசனுக்கு ஒன்றுமே புரிவதில்லை. அது அவர்களின் ஞான நிலை என சிலர் கூறியதைக் கேட்டுள்ளான் ஆவன்.

கஞ்சாவை அவர்கள் சிவ மூலிகை என அழைத்தனர்.மேல் மனதை மயக்கி அடிமனதை இது இயக்கும் என பின்னால் உளவியல் கற்றபோது தேவதாசன் அறிந்து கொண்டான்.

ஒருபோதையில் அவர்கள் நிஜ உலகை சிலமணி நேரம் மறந்து இன்னோரு உலகில் தாம் சிருஸ்டித்துக் கொண்ட உலகில் வாழ்ந்தனர். எனவே பின்னால் அவன் நினைத்தான்.

இந்த ஞான நிலை அடையவே அனைவரும் இணைந்தனர் என்பது பின்னால் அவனுக்குப் புரிந்தது. இதிலே சாதி இனம் பிரதேசம் பார்க்காத ஓர் கூட்டுணர்வு இருந்தது என்பதையும், அக்கூட்டுணர்வு ஏற்றத்தாழ்வும் கொடுமையும் மிகுந்த இச்சமூகத்திலிருந்து அவர்களைத் தற்காலிகமாக விடுவித்திருந்தது என்பதையும், பின்னால் அறிந்து கொண்டான். சாமிமார் என்றவகையில் அவர்களுக்கு இதற்கான சமூக அங்கீகாரமும் கிடைத்தது.

திராய்மடு ஆச்சிரமத்தில் அவனுக்குப் பல சாமிமார் அறிமுகமானார்கள்.அவர்களுக்கு சடைச் சாமியார் அவனை அறிமுகம் செய்வார். அவன் பாடசாலையில் படிப்பது பற்றியும் அவனால் அதிகம் ஆகவேண்டியிருக்கிறது என்றும் அவனது நல்ல குணாம்சங்களையும் கூறி தேவதாசனை அவர் ஆச்சிரமத்தின் பிள்ளை என்றும் கூறுவார்.

அவர் தேவதாசன் மீது மிகுந்த பிரியம் வைத்தமையினால் அவனும் அவர்மீது மிகுந்த பிரியம் வைத்தான். அவரைக் காண்பது அவனுக்கு ஒரு ஆறுதல் போல. வீட்டுக்கு வந்தால் அவனை விசாரித்த பின்னரே சாமியார் வேறுகதைகள் பேச ஆரம்பிப்பார் என்று அம்மா கூறுவதும் அவர் மீது அவன் பிரியம் வைக்கக் காலாயிற்று.

பாடசாலையில் உயர்தரக்கல்வி பெற்ற காலங்களில் தேவதாசன் பெரியார், அண்ணாதுரை கருணாநிதி ஆகியோரின் பகுத்தறிவுக் கருத்துக் களுக்குப் பரிச்சயமானானான். அக்கருத்துக்களை அவனை அன்புக்குரிய அப்பாவிடமும் சடைச் சாமியாரிடமும் விவாதிப்பான். புராணக் கதை களைக் கேள்வி கேட்பான், விமர்சிப்பேன். இவை அவர்களுக்குப் புதிது. எனினும் புராண நிந்தனை கடவுள் நிந்தனை என்று அவர்கள் இருவரும் அவனை ஒருபோதும் அடக்கியது கிடையாது.

தேடி அடை என்றே அவனது அப்பா அவனிடம் கூறுவார். கலகல எனச் சிரித்துக் கொண்டே அதனை சடைச் சாமியார் ஆமோதிப்பார்.

1960களில் தேவதாசன் பேராதனைப் பல்கலைக்கழகம் வந்து விடுகிறேன் அங்கு அவனுக்கு மார்க்ஸிஸம் அறிமுகமாகின்றது. தத்துவப் பக்கம் ஈர்க்கப்படுகின்றேன். பகுத் தறிவுப் பார்வைமூலம் கடவுளர்களின் புராணக் கதைகளை விமர்சித்த அவன் இப்போது பொருள் முதல் வாதச் சிந்தனைகளின் தாக்கத் தினால் கடவுள் இல்லை என வாதிக்க ஆரம்பித்தேன்

உளவியல் அறிமுகம். மூளை பற்றியும் அதன் சிந்தனைகள் பற்றியும் அறிவைத்தந்தது. சிக்மன்ட் பிரைடின் உளப்பகுப்பு ஆய்வியல் அவனைக் கவர்ந்தது

சுவாமிமார்களின் நிஸ்டை அவர்களின் மனம் செல்லும் பிரயாணம் பற்றிய இன்னொரு கருத்துரு அவனுக்குள் உருவானது.

சித்தர்கள் பற்றி வாசிக்க ஆரம்பித்தான். அவர்களின் பாடல்களையும் ஆழமாகப் படித்தான்.

அவர்களின் விஞ்ஞானப் பார்வையும் உடலைப்பற்றி அவர்கள் அறிந்து வைத்திருந்த அறிவும், அதை ஓம்பவும் அதனைகருவியாகக் கொண்டு அவர்கள் பிரபஞ்சத்தைத் தம்மளவில் அளக்க முயன்றதும், சமூகக் கொடுமைகளைக் கண்டு ஆற்றாது அவர்கள் தமக்குள் ஓர்

வாழ்க்கையை உருவாக்கி ஒதுங்கி கொண்டமை யையும் அவன்புரிந்து கொண்டான்.

இந்த நல்ல உள்ளம் கொண்ட சித்தர்கள் என்ற சாமிமார் மீது அவனுக்கு ஓர் அன்பும் அனுதாபமுமே ஏற்பட்டது.

வீட்டுக்கு வரும் சடைச்சாமியாருடனும் அப்பாவுடனும் கடவுள் இல்லை என விவாதிக்க ஆரம்பித்தான்.

பிரபஞ்சத் தோற்றம், உலகத் தோற்றம், உயிரின் தோற்றம், மனிதத் தோற்றம், சமயங் களின் தோற்றம் என தேவதாசன் விரித்துரைத்த கதைகள் அவர்களுக்குப் புதிதாக இருந்தன. அவர்களும் எதையோ தேடினாரக்ள்இவனும் எதையோ தேடினான். அவன் தேடி அடைந்தவை வேறு அவர்கள் தேடி அடைந்தவை வேறு' அவனது வாதங்களை செவிமடுக்கும் சடைச் சாமியாரும் அப்பாவும் அவற்றை மறுத்து வாதிட்டது கிடையாது. அவர்களை அவன் புரிந்து கொண்டான். அவனை அவர்கள் புரிந்து கொண்டனர்.

1970களுக்குபிறகு தேவதாசனுக்கு கொழும்பு யாழ்ப்பாணம் என இடம் மாறி அப்பகுதிகளில் வாழும் சந்தர்ப்பம் கிடைக்கிறது மட்டக்களப்பின் தொடர்பு அற்றுப்போய் விடுகிறது.

1974 இல் அவன் தந்தையும் இறந்து விடுகிறார். தந்தையின் இறுதி வணக்கத்திற்கு தேவதாசன் செல்கிறான். சடைச்சாமியாரை அங்கு காண்கிறேன். அமைதியாக வந்து தந்தையின் உடலைத் தரிசித்துவிட்டு சென்று விடுகிறார் அவர்.

தேவதாசனது தாயாரும் தந்தையாரும் மிக மிக நெருக்கமாக வாழ்ந்தவர்கள். அப்படியோர் நெருக்கத்தை அவன் எவரிடமும் இன்றுவரை காணவில்லை.

தனித்துப் போன அம்மாவைத் தன்னுடன் வந்து இருக்குமாறு அழைக்கிறான் தேவதாசன். அவர் இருந்த இடத்தில் இருப்பதே எனக்கு ஆறுதல் என்று கூறி அவனுடன் வர அம்மா மறுத்து விடுகிறார். அவனுக்கு அம்மாவின் ஆறுதலே முக்கியம். அம்மாவை. ஊரில் விட்டு விட்டு யாழ்ப்பாணம் வந்துவிடுகிறான்.

மட்டக்களப்பு யாழ்ப்பாணப் பயணம் அன்றைய காலச் சூழலால் மிகக் கஸ்டமாகிவிட்டது அவன் மட்டக்களப்பு வருவதும் குறைந்து விட்டது. பின்னர் நடை பெற்ற விடயங்கள் அதிகம்.

தமிழர் மத்தியில் போராட்ட இயக்கங்கள் தோன்றத் தொடங்கின, போராடவும் ஆரம்பித்து விட்டன.

சடைச் சாமியாரின் ஆச்சிரமம் ஒரு போராளிக் குழுவின் முக்கிய சரணாலயம் ஆகியிருந்தது என அறிகிறான். அவரின் ஆச்சிரமம் இராணுவத்தால் பல தடவைகள் சுற்றி வளைக்கப்பட்டதாகவும் சடைச் சாமியாரை அவர்கள் பரிசோதித்ததாகவும், எச்சரித்ததாகவும் அறிந்தான். சடைச்சாமியார் சந்தேக்கப்படுபவர்களில் ஒருவரானார்.

மட்டக்களப்பு வாவி மட்டக்களப்பை படுவான் கரை, எழுவான்கரை என இரு பெரு நிலப் பிரிப்பாகப் பிரித்திருந்தது. வாவிக்கு இப்புறம் எழுவான் கரை அப்புறம் படுவான்கரை.சூரியன் எழும் நிலப்பரப்பு எழுவான் கரை. படும் நிலப் பரப்பு படுவான் கரை.

எழுவான் கரை போராளிகளின் கட்டுப் பாட்டின் கீழிருந்தது. படுவான்கரையோ இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. படுவான் கரைக்கு ஆறு கடந்து ஓடத்தில் அல்லது பாதையில்தான் செல்ல வேண்டும்.

படுவான் கரைப்பகுதிக்குச் செல்லும் எழுவான்கரை மனிதர்கள் இராணுவ சென்றிப்

## மனிதனுக்காக...

விதியோடு தன் பலவீனம் மறைக்கும்
மனிதனுக்காக
ஆங்காங்கே சில கண்ணீர்த் துளிகள்....
விட்டுச் சென்ற நதி
போன இடம் தெரியவில்லை!
கண்ணீரைத் திருடுகின்ற சூரியன்
நீந்தி மகிழ்கிறது
இரவின் நிழலில் நிலவு!
தொலைந்து போகும் நதியின் சுவடுகளை
மீட்டெடுக்கும் முயற்சியில்
மரங்களின் உயிர்ப்பு
கோடரிகளின் எதிர்ப்பையும் மீறி....!

**கனகசபாபதி செல்வநேசன்**
**அல்வாய்**

பொயின்ரில் இராணுவத்தால் பரிசோதிக்கப்பட்ட பின்னரே அனுப்பப்பட்டனர்.

எழுவான்கரைப் பகுதியில் வாழும் போராளிகளுக்கு மட்டக்க்ளப்பு நகரிலிருந்து முக்கியமாக பற்றரி முதலான பொருட்கள் செல்வது தடை செய்யப்படிருந்தது' எனினும் பொது மக்கள் சிலர் எத்தனையோ உத்தி முறைகளைக் கையாண்டு தடை விதிக்கப்பட்ட பொருட்களைப் படுவான்கரைக்கு எடுத்துச் சென்று போராளிகளுக்கு வழங்கினர்

சடைச்சாமியார் வழமைபோல தன் நடையுடனும் முடக்குத் தடியுடனும் எழுவான் கரை படுவான் கரைப் பகுதிகளை வலம் வந்து கொண்டேயிருந்தார்.

ஒரு நாள் பின்னேரப் பொழுதில் சூரியன் மறையும் மம்மல் பொழுது நேரத்தில் அவர் படுவாங்கரைப் பகுதி செல்லும் வழியில் இராணுவத்தால் ஆற்றோரத்தில் சென்றி பொயின்ரில் மறிக்கப்பட்டார்.

அவர் சடாமுடியினுள் ஏதாவது வைத்துக் கடத்திக்கொண்டு சென்று போராளிகளுக்குக் கொடுக்கக்கூடும் என்ற சந்தேகத்தில் அவரை இடை மறித்த இராணுவம் அவர் சடாபாரத்தை அவிழ்த்துக் காட்டும்படி கட்டளை இட்டது.

பயந்து விடுவீர்கள் எனச் சிரித்தபடி சொன்னார் சடைச்சாமியார். அதெல்லாம் எமக்குத் தெரியும் முடியை அவிழ்த்துக் காட்டு உத்தரவு இட்டது இராணுவம்.

அவர் சிரித்தபடியே அந்த ஆற்றோரத்தில் சூரியன் மறையும் அந்த நேரத்தில் தனது சடைப்புரிகளை ஒவ்வொன்றாக அவிழ்த்துத் தரையில் விட்டார் இறுதியில் சடை விரித்த ஆலமரம் போல கண்ணை மூடி நின்றார்.

மாலை வெயிலில் தக தகத்தபடி வெட்ட வெளியில் சடை விரித்தாடிய சிவன் கோலத்தில் அவர் விரித்த சடையோடு நின்ற காட்சியினை வழிமறிக்கப்பட்டு நின்ற சனம் பார்த்தது.

பார்த்த சனம் இரண்டு கைகளையும் தலை மேல் வைத்தது அரோஹரா அரோஹரா அரோஹாரா என உணர்ச்சி வசப்பட்டு அலற ஆரம்பித்தது.

அந்தப் பெரும் தரிசனம். கண்டு வியந்து பயந்த இராணுவ வீரர்கள் அவரை வணங்கி அவரிடம் சென்று பவ்வியமாக "தலை முடியைப் பழையபடி முடியுங்கள் சென்று வாருங்கள்" என வழி அனுப்பினர்.

சடைசாமியும் அனைவரையும் ஆசீர்வதித்து விட்டு சிரித்தபடியே அக்கரை சென்றார்.

காலங்கள் சென்றன. தேவதாசன் மட்டக்களப்பு செல்வதும் குறைந்து விட்டது சடைச்சாமியாரும் அவன் மனதில் இருந்து மறைந்து விட்டார்.

அவர் மனதில் இருந்து அவனும் மறைந்து விட்டான் என்றே அவனும் எண்ணியிருந்தேன்.

1991 இல் யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்திலிருந்து கிழக்குப்பல்கலைக்கழகத்திற்கு மாறுதல் கிடைத்ததனால் மீண்டும் அவன் மட்டக்களப்பு வாசியானான்.

ஏறத்தாள 20 வருடங்களுக்குப் பின் மீண்டும் மட்டக்களப்பில் வாழும் சந்தர்ப்பம். மட்டக்களப்போ பெரிதும் மாறிப்போய் இருந்தது. இராணுவக் கெடுபிடிகள். ஒருபுறம் மறுபுறம் ஒரு வகையில் இரண்டு அரசாங்கம்.

இரவில் 6.00 மணிக்குள் அடங்கிவிட வேண்டும். இரவு நடமாட்டம் கிடையவே கிடையாது. அடங்கி ஒடுங்கி குசுகுசுத்துக்கொண்டு மக்கள் வாழ்வதுபோன்ற ஒரு சூழல்.

அம்மாவுடன் மீண்டும் வாழுதல் என்ற ஒன்றே அவனுக்கு ஆறுதலாக இருந்தது. அத்தோடு கிழக்குப்பல்கலைக் கழகத்தில் புதிதாக உருவான கலைப்பீடத்தை இந்த நெருக்கடிகள் மத்தியிலும் வளர்த்தெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு.

அவனுடைய மனைவியின் வீடு மட்டக்களப்பு நகரில் இருந்தது. அவன் பிறந்து வளர்ந்த வீடு கிராமத்தில் இருந்தது.

அம்மா அவனது தங்கையின் வீட்டில் அவர்களுடன் வாழ்ந்து வந்தார்.

மீண்டும் தேவதாசன் தன்னுடன் வந்து இறுதிக்காலத்தில் இருக்கும்படி அம்மாவைக் கேட்டான் தான் வாழ்ந்த சூழலையும் தனது பெண் பிள்ளைகளையும் பேரன் பேர்த்திகளையும் விட்டு விட்டு அவனுடன் வர அம்மா இஸ்டப் படவில்லை.

அந்த வாழ்வு அவருக்கு ஆறுதலாக இருந்தது. அவனுக்கு அம்மாவின் ஆறுதலே முக்கியம்.

இரண்டு நாட்களுக்கு ஒரு முறை சென்று அம்மாவைச் சந்தித்து அளவளாவி வருவான். பழைய கதைகளை அம்மா கூறுவார். அவனுக்கு அவை மிகச் சுவையாக இருக்கும். பழைய நினைவுகளில் அவனது வயது போன அம்மா வாழ்ந்துகொண்டிருந்தார். செல்லும் போதெல்லாம் தன் அம்மாவை வைத்துப்பார்த்த

அவன் தங்கை அகிலாவுடன் உரையாடி வருவான். அகிலா சிறந்த வாசகி. அவளின் காலம் சென்ற கணவன் சித்திரவேல் மிகச்சிறந்த வாசகன் மார்க்ஸிசவாதி. கடும் பொருள் முதல்வாதி.. கடவுள் நம்பிக்கை இல்லாதவன்.

அவனின் சிந்தனைத்தாக்கம் அகிலாவிலும் இருந்தது. அவளும் சமயங்களை விமர்சன நோக்கில் பார்க்கும் பக்குவம் பெற்றிருந்தாள். அவளுடன் உரையாடுவது சுவராஸ்யமாக இருக்கும். அம்மாவைச் சந்திக்கச் சென்ற தேவதாசன் ஒரு நாள். அம்மா உங்களுக்கு ஏதேனும் ஆசை இருந்தால் கூறுங்கள் நிறைவேற்றி வைக்கிறேன் என்று கூறினான்.

“எனக்கென்னடா ஆசை எல்லாம் முடிந்து விட்டது இனிப் போகும் காலம்” எனக் கூறினார். பின்னர் சிறிது நேரத்தின் பின் “சடைச்சாமியாரைப் பார்க்க ஆசையாக இருக்கிறது” என்று கூறினார்.

அவனுக்கு அப்போதுதான் மீண்டும் சடைசாமியாரின் நினைவு வந்தது. நாளைக்கு அழைத்துப்போகிறேன் என்று கூறி விடை பெற்றான்.

மறுநாள் ஒரு வாகனத்தில் தேவதாசனும் அம்மாவும் அவனது தங்கை அகிலாவும் சடைச்சாமியாரின் ஆச்சிரமம் நோக்கிப் புறப் பட்டார்கள்.

ஒரு குறிப்பிட்ட தூரம்வரை காரில் சென்றார் கள் பின்னர் காட்டுப்பாதை இறங்கி நடந்து சென்றார்கள். பாதை கரடுமுரடாக இருந்தது. அது ஒரு வகை யாத்திரை போல அவனுக்குப் பட்டது. போகும் வழியில் அவன் தங்கை “கடவுள் நம்பிக்கை இல்லாத நீங்கள் சாமியாரைத் தேடி செல்கிறீர்களே” என்றாள்

“சாமியாரைத் தேடி அல்ல அகிலா. இது இழந்த எமது உறவைத் தேடிச் செல்லும் ஓர் பயணம்” என்றான் தேவதாசன்.

பயணம் தொடர்ந்தது.

வயோதிபப்பருவத்தில் நடக்க முடியா நிலையில் இருந்த அம்மாவும் எதுவுமே பேசாமல் மெல்ல மெல்ல அவர்களோடு நடந்து வந்தார். சில இடங்களில் அவன் அவனது அம்மாவின் கரம் பிடித்து அழைத்துச் சென்றான்.

இடையில் அம்மா “சடைச்சாமியார் உன்னோடும் என்னோடும் அப்புச்சியோடும் நல்ல விருப்பம். எமது சொந்தக்காரர்களைவிட நம்மோடு பாசமடா” என்று ஒரே ஒரு முறை வாய் திறந்தார். மற்றப்படி அமைதியே அங்கு நிலவியது.

அனைவர் மனதிலும் சடைசாமியார் என்ற அந்த அன்புருவே நிறைந்து நின்றது. ஏதோ எதிர்பார்ப்புடன் அனைவரும் நடந்து கொண்டிருந்தார்கள்.

தூரத்தில் காட்டின் நடுவே ஒரு குடிசை தென்பட்டது கூட வந்தவர். “அதுதான் சடைச் சாமியாரின் முருகன் கோவில்” என்றார். சடைச் சாமியாரைக் காணும் ஆர்வம் அவனுக்குள் குறு குறுத்தது.

அவருடனான பழைய நினைவுகள் ஞாபகம் வந்தன. எத்தனை வருடங்களுக்குப் பிறகு அவரைக் காணப்போகிறோம். கோவிலை அடைந்தார்கள்.

அதே பழைய முருகன் கோவில். ஓலையால் வேயப்பட்ட அதே சிறு குடிசை அதன் மூலஸ் தானதுக்கு முன்னர் நெருப்பு எரிந்து கொண்டி ருந்தது’ விறகுகள் பக்கத்தில் அடுக்கப்பட்டி ருந்தன. என்றும் அணையா நெருப்பு அது. அவனுக்கு அவனது ஐந்து வயதில் கண்ட அந்த அணையா நெருப்புக் குண்டம் ஞாபகம் வந்தது. அதே குண்டம் அதே நெருப்பு அதே ஜ்வாலை அதே வெப்பம்.

அந்த வெப்பத்தை அனுபவித்தபடியே அங்கு நின்ற ஒருவரிடம் சடைச் சாமியார் இருக்கிறாரா? அவரைபார்க்க வந்திருக்கிறோம் என்று கூறினான்

“பக்கத்துக் குடிசையில் படுத்தபடி இருக்கிறார் அவர் இப்போது அசைவதில்லை மிகவும் வயோதிபராகிவிட்டார்” என்றபடி அங்கு எம்மை அழைத்துச் சென்றார்.

அங்கே ஒரு சாக்குக்கட்டிலின் மீது ஓர் உருவம் ஒரு பக்கம் சாய்த்து இரண்டு கைகளையும் கால்களுக்கிடையில் நுழைத்தபடி ஒரு சிறுகுழந்தைபோல குராண்டிக்கொண்டு படுத்துக் கொண்டிருந்தது. அக்குழந்தையின் கண்கள் மூடியபடி இருந்தன.

அருகில் சென்ற அவரது சீடர், “சாமி சாமி உங்களைக்காணச் சிலர் வந்திருக்கிறார்கள்” என இரண்டு மூன்று முறை அவரது காதுக்குள் உரத்து உச்சரித்தார்.


சடைசாமியார் மெதுவாகக் கண்களைத் திறந்தார். கூட வந்த சீடர் சடைச்சாமியை மல்லாக்காகப் படுக்க வைத்தார். அம்மாதான் முதலில் சென்று சாமியைத் தரிசித்தார்.

“சாமி நான் முத்தம்மா வந்திருக்கிறேன்” என்றார் அம்மா. சடைச்சாமி பலமுறை யோசித்தார். பழைய நினைவுகளை அவர் மீட்டெடுக்கிறார் போல தேவதாசனுக்குப்பட்டது.

சிறிது நேரத்தில் சாமிக்கு அவை ஞாபகம் வந்து விட்டன போலும், அவ்வுருவம் சற்று அசைந்தது. முகம் மெல்லத் திரும்பியது. அவர் முகத்தில் ஓர் மாற்றம் உண்டானது.

“முத்தம்மா முத்தம்மா” என என்று அவர் வாய் மகிழ்ச்சியோடு உச்சரித்தது. அவர் கண்கள் யாரையோ தேடுவது போல அவனுக்குப் பட்டது.

தேவதாசன் உணர்ச்சி வசப்பட்டுபோய் நின்றான் பின்னர் அவன் அவர் அருகில் சென்று குனிந்து அவர் காதில்,




“சாமி உங்கள் தேவதாசன் வந்திருக்கிறேன்” என்றான்.

“தேவதாசன்” வாய்க்குள் முணுமுணுத்தபடி சிறிது நேரம் யோசித்தார்.

அவன் தேவதாஸ் தேவதாஸ் என உரக்கக் கூறினான்.

தேவதாசன் தேவதாசன் என அவர் வாய் உச்சரித்தது. அவர் கண்கள் அகலமாகின.

அக்கண்கள் வெறித்து அவனை நோக்கின.

அவனை அவர் உற்றுப்பார்ப்பது போல அவனுக்குத் தோன்றியது.

காலங்களைக் கடந்த பார்வையாக அவனுக்கு அது தோன்றியது.

அவர் தீட்சண்ய பார்வை அவனது உடலுக்குள் புகுந்து ஓர் அதிர்வை அவனுக்குள் ஏற்படுத்தியது

“தேவதாசன் தேவதாசன் தேவதாசன்” அவர் வாய் உச்சரித்தது.

“உனக்காகத்தான் காத்திருந்தேன். நீ வருவாய் என்பது எனக்கு நன்கு தெரியும். இப்போது வந்து விட்டாய்” என்றார் சடைச்சாமி.

அவரது முகம் பிரகாசமாக ஒளி வீசியது போல அவனுக்குத் தோன்றியது.

தேவதாசன் பழம் துணிப்போல படுத்திருந்த அவர் உடலை வருடிவிட்டபடி, அவர் இரண்டு கைகளையும் ஒரு சேரப் பிடித்துக்கொண்டான்.

அவரது உடல் ஸ்பரிசம் அவனுக்குள் இன்னொரு அதிர்வை ஏற்படுத்தியது.

அவரது கண்களையே பார்த்துக் கொண்டிருந்தான் தேவதாசன்.

அவர் இரண்டு கண்களிலுமிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

அவன் கண்களிலும் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அவர்கள் பேசவில்லை கண்ணீரே பேசியது.அமைதி நிலவியது. அவரிடம் விடை பெற்றுத் திரும்பினார்கள். மிக நெருங்கிய உறவொன்றைப் பிரிந்து வரும் சோகத்துடன் திரும்பினான் தேவதாசன்.

மறு நாள் செய்தி கிடைத்தது செய்தி இதுதான்.

சடைச் சாமியார் சமாதி நிலை அடைந்து விட்டார்.

அம்மா அதை கேட்டுவிட்டு தேவதாசனிடம் கூறினார்.

“மகனே அது உன் வரவை எதிர்பார்த்து உன்னைக் காத்துகொண்டிருந்த ஆத்மா.”

❍❍❍

# கண்டி நதி ஓடிய வீதி சில அதிர்வலைகளை ஏற்படுத்தியது



மொழிவரதன்

கலாசாரக் குழு (கண்டி)வின் கலை இலக்கிய சஞ்சிகையான 'நதி' இதழ் 1970-74களில் வெளி வந்தது எனலாம். அச்சொட்டாக 'நதி' ஊற்றெடுத்த காலம் தெரியாதது போலவே கடைசியாக நதி 'வற்றிய' காலமும் தெரிய வில்லை. சில இதழ்கள் அச்சுப் பதிவாகவும், ஆரம்பத்தில் றோனியோ பிரதிகளாகவும் வெளிவந்தது ஞாபகத்தில் உள்ளது.

"தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் புதிய ஜனநாயகக் கலாச்சாரத்தை உருவாக்கும் இயக்கப் பாதையில் இந்நதி ஓடிக் கொண்டி ருக்கும்" என்ற மகுட வாசகத்தோடு விலை 75 சதம் என்றவாறு வெளிவந்தது. இவைகளுள் சில பிரதிகளே என்னிடம் உள்ளன. எனவே, இக்குறிப்பும் நதியின் உண்மையான ஆழத் தினையும், விசாலத்தையும் காட்டுமா என்பது பற்றி கூற இயலவில்லை. எனினும், கட்டுரை யாளனும் நதியோடு சேர்ந்து பயணித்தமையால் சில தகவல்களை தரக்கூடியதாக இருக்கும் என எண்ணுகிறேன்.

குறிப்பாக இந்த நதியில் சங்கமித்த வர்களுள் பெரும்பாலானோர் மார்க்ஸிஸம், லெனினிஸம், மாஓஇஸம் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டோர்களாக காணப்பட்டார்கள். அமரர் சசி கிருஷ்ணமூர்த்தி, அமரர் விசுவானந்த தேவன், அமரர் தங்கவேலு, அமரர் செல்வராஜா (Auditor) மு.சி கந்தையா, மு.இராஜாங்கம் (இந்தியாவுக்கு புலம் பெயர்ந்தோர்) கணேசு (கண்டி) பெ.முத்துலிங்கம், மொழிவரதன், மெய்யநாதன் இப்படி சிலரை ஞாபகப்படுத்த முடிகின்றது.

நதி, ஆசிரியர் குழு, 17 தேவ வீதி, கண்டி எனும் முகவரியிலிருந்து ஊற்றெடுத்த இச்சஞ்சிகை எத்தனை இதழ்கள்வரை வந்தது என்பது தெரியவில்லை. ஆனால் அது புரட்சிகர கலை இலக்கிய ஊற்றாக பிரவகித்துச் சென்றது எனில், தவறில்லை.

இப்பின்னணியில் துளிர்த்தெழுந்த படைப் பாளர்களாக யோ.பெனடிக்ற் பாலன், குறும்பன், கணேசு (கண்டி) சிவா, வீரரராகவன் விசுவானந்த், மணி, ஆனந்தன், மொழிவரதன், இத்ரீஸ், பிரதீபன், எஸ்.எம்.பன்னீர் போன்றோர்களை காணக்கூடியதாக இருந்தது.

கவிதைகள், குட்டிக்கதைகள், சிறுகதைகள், தகவல்கள் நதியின் பக்கங்களை அலங்கரித்தன. நதி ஓடும் வீதி எனும் தலையங்கத்தின் கீழ் பின்வருமாறு ஆசிரியர் குழுவினால் கூறப் படுகின்றது.

"வர்க்க சமுதாயத்தின் கலை இலக்கியம் ஒரு வர்க்கத்துக்கு சொந்தமானதாகவே இருக்கும். ஒரு குறிப்பிட்ட வர்க்க நலன்களுக்கு சேவை செய்பவையாகவே இருக்கும்" என்கிறது.

தொடரும் இந்த ஆசிரியர் உரை "இப் பாதையில் இந்நதி தனது அழிப்பு அலை களையும், ஆக்க அலைகளையும் வேகமாக அடித்துப் புரண்டோடிக் கொண்டிருக்கும்" என்கின்றது.

நதியில் சிலர் புனைபெயர்களில் எழுதி உள்ளனர். உதாரணமாக குறும்பன் சிவசேகர மாகவும் விசுவானந்த விசுவானந்த தேவனாகவும் இருக்க இடமுண்டு. சி.சிவசேகரம் ஆசிரியர் குழுவில் தான் இருக்கவில்லை என ஒரு முறை கட்டுரையாளரிடம் கூறி உள்ளார்.

குறும்பன், மொழிவரதன், கணேசு (கண்டி) மணி, வீரராகவன் போன்றோர்கள் கவிதை களையும் யோ.பெனிடிக்ற்பாலன் சிறு கதை களையும் குட்டிக்கதைகளையும் எழுதி உள்ளனர். கைவசமுள்ள நதிகளின் படியே இத்தகவல்கள் பரிமாறப்படுகின்றன. மேலும் கண்டி கணேசு என்பவர் தலாத்துஓயா கணேசு அல்ல என்பதையும் கூறி வைக்க விரும்புகிறேன்.

இந்த நதியோடு ஓடியவர்களுள் எத்தனை பேர் அதே நிலைப்பாட்டில் தம் பயணத்தினை தொடர்கின்றனர் என்பது ஆராயப்பட வேண்டியதே.. எவ்வாறெனினும் அதே தடத்தில் இல்லா விட்டாலும் ஓரளவு அதே பார்வையில் நாட்டு நடப்பியல்களை பார்ப்போர் சிலராவது உள்ளனர் எனத் துணியலாம்.

❍❍❍

**பெ**ரியமுல்லை என்றாலே சொந்த ஊர் போல்தான். அல்ஹிலாலை விட்டு வந்து பத்து வருடங்கள் கடந்தும், மரண வீடுகள், திருமண வைபவங்கள் என அடிக்கடி வந்து போகின்றேன். அப்படியான நாட்களில் பெரும்பாலும் நெஞ்சுக்கு மிகவும் நெருக்கமான அக்ரமின் அல்லது ரூபிலின் வீட்டில் தங்கி சந்திக்க வேண்டிய வர்களைச் சந்தித்து விட்டுத்தான் திரும்புவ துண்டு.

அக்ரமின் வீட்டில் இரவு தங்கினேன். சுபஹ் தொழுது தேநீர் அருந்திவிட்டுக் கதைத்துக் கொண்டிருக்கும்போது ரூபில் வர இருவரும் “லெல்லம” நோக்கிப் புறப்பட்டோம்.

நீர்கொழும்பிலிருந்து பிடிபன ரோட் ஊடாக பாலத்தைக் கடந்து சிறிது தூரம் சென்றதும் வரக் கூடிய பிஸியான மீன் மார்க்கட்தான் லெல்லம எனப்படுவது. நேரகாலத்துடன் போனால்தான் தேவைக்கேற்ப வசதியாக மீன் வாங்கிக் கொள்ளலாம். பொதுமக்கள், வியாபாரிகள் என நிரம்பி வழிந்தது மார்க்கட்.

கொடவெலயில் வசிக்கும் மகனது வீட்டுக்குக் கொண்டு செல்வதற்காக கெலவல்லா ஒரு குட்டி, பரவ் ஒரு கிலோ, கல்மாலு ஒரு கிலோ என வாங்கிக் கொண்டேன். அங்கிருந்து நீர்கொழும்பு பஸ் நிலையத்துக்கு ரூபில் கொண்டுவந்து விட்டார். புறப்படத் தயாராகவிருந்த கடவத ஹைவே பஸ்ஸில் ஏறிக் கொண்டேன்.

கடுநாயக விமான நிலையச் சந்தியில் பஸ் நிறுத்தப்பட்டது. தற்செயலாகத் திரும்பிப் பார்த்தபோது வலது பக்க பின்னாசனத்தில் அந்த ஜோடி.

அவனது பெயர் ருஹைம். கொட்டரமுல்லை யில் வசிக்கும் எங்கள் ஊரைச் சேர்ந்த நண்ப ரொருவரின் ஆண் வாரிசுகளில் மூத்தவன். கடந்த ஆறு மாதங்களுக்கு முன்புவரை உம்மா வாப்பாவுடன்தான் இருந்தான். தோளுக்கு மேல் வளர்ந்தால் தோழன் என்பதற்கொப்ப இருபத்திரண்டு வயதிலும் வாப்பாவுக்குச் செல்லப் பிள்ளையாக இருந்தவன். தனது தொழிலையும் பழக்கித்தான் தொழில் செய்யுமிடத்தில் தன்னுடனேயே வைத்தும் கொண்டார் நண்பர்.

தொழில் செய்யுமிடத்திலிருந்து ஐந்நூறு, ஆயிரமென வாப்பா அறியாமலேயே ருஹைம் தினமும் சுருட்டிக் கொள்கிறான். இது நண்பருக்கும் தெரிந்ததுதான். வீட்டுக்கென ஒருசதமும் செலவழிக்காதது பற்றியும் வாய் திறந்ததில்லை. அடுத்த வருடத்திலாவது தான் தொழில் செய்யும் அதே பஸாரில் தனியாகத் தொழிலமைத்துக் கொடுக்க வேண்டுமென்பது அவரது நீண்டநாள் ஆசை.

“எடக்கெட நெஞ்சி நோவொண்டு வந்து கொண்டிருச்சிய, சொணங்கி சொணங்கி இருச்சேலா, ஊட்ட கொஞ்ஜம் ரெபயார் பண்ணி தாத்தமார்ட கலியணத்துகள அவசரமா செய்ய பாக்கோணும். அதக்கு பொறகு ருஹைமுக்கு ஒரெடத்தில செட்டாக்கோணும்.....” இப்படி அடிக்கடி எண்ணிக் கொள்வார் நண்பர். காலையில் தொழில் செய்யுமிடத்துக்கு வந்தால் இரவு ஒன்பது பத்து மணிவரை படாதபாடு படுவதும் இதற்காகத்தான்.

ருஹைம் நீண்ட ஜுப்பா அணிந்திருந்தான். இதற்கு முன்னர் இந்தக் கோலத்தில் அவனைப் பார்த்ததில்லை. அவள் “பேஸ்கவர்” பண்ணி யிருந்தாள்

உயரத்தைப் பார்த்தால் சோடிப் பொருத்த மாகப் படவில்லை.

நீண்ட நேரமாக இருவரும் என்னென்னவோ கதைத்துக் கொண்டிருந்தனர். ருஹைமின் பேச்சு வழமைபோல் தெளிவில்லை. அவளது வாயிலிருந்து வெளிவந்த வீஓஜீ, ரிபோட் முதலிய வார்த்தைகளைக்கொண்டு பிள்ளைத்தாச்சியாக இருக்கலாமென ஊகித்துக் கொண்டேன்.




-கஸ்ஸாலி அஷ்ரஃப்-

“டிகட் கன்ன” - கண்டக்டரின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். என்னைக் கண்டதும் ருஹைம் முகத்தை மறைத்துக் கொள்ள முயற்சிப்பது புரிந்தது.

நண்பருடனான நட்பு முப்பது ஆண்டுகளைத் தாண்டியது. நீர்கொழும்பு நண்பர்களாகிய அக்ரம், அஸ்லம், ரூபில் ஆகியோருக்கு அடுத்த தரத்தில் வைக்கக்கூடிய நண்பர்.

ருஹைம் சிறுவனாக இருந்தபோது அவர் களது வீட்டுக்கு ஒருமுறை சென்றிருந்தேன். புலமைப்பரிசில் பயிற்சிப் புத்தகத்தில் அவன் மூழ்கியிருந்த அந்தக் காட்சி இன்னும் மனக் கண்களில். அந்த வீட்டுக்குப் போய்வரும் நேரங்களில் குடும்ப விடயங்கள் பற்றியெல்லாம் அக்கறையுடன் வந்து கதைப்பான். கடந்த ஆறு மாதங்களாகத்தான் ஆளைக் காணக் கிடைக்க வில்லை. “வெளிநாட்டுக்கு பெய்த்து” விசாரிக்கும் நேரங்களில் இப்படித்தான் சொல்லிச் சமாளித்து வந்தார் நண்பர்.

ருஹைமுக்கு மூத்த சகோதரிகள் இருவர். அவனுக்கு வயது இருபத்திரண்டென்றால் அவர்களது வயதுகளை ஓரளவு ஊகித்துக் கொள்ளலாம்.

நீண்டகாலமாக புதல்வியர் இருவருக்கும் மாப்பிள்ளை தேடிக் கொண்டிருக்கிறார் நண்பர். அது அவ்வளவு இலகுவானதாக இல்லை. கடைசிக் கட்டத்தில் கைநழுவிப் போனவை ஏராளம். ஒருவாறாக மூத்தவளுக்கு கல்யாணம் முடிவாகியது. ஊருக்குள்ளும், நீர்கொழும்பு சிலாபத்துக்குள்ளும் மாப்பிள்ளை தேடித்தேடி அலுத்துப்போன நிலையில், மகளின் வயதைக் கருத்திற்கொண்டு நண்பர் இதற்கு உடன்பட்டார்.

நிச்சயதார்த்தம் எல்லாம் முடிவடைந்து, நூறென்றும் ஐந்நூறென்றும் சிறுகச்சிறுகச் சேமித்து வந்த உண்டியல் பணத்தைக் கொண்டு வீட்டைத் திருத்தம் செய்ய எண்ணிய போது உண்டியலைக் காணவில்லை. இரண்டு வருடங்களுக்கு மேலாகச் சேமித்து வந்ததனால் மனக் கணக்குப்படி இரண்டு இலட்சம் ரூபா வாவது இருக்கலாம்.

இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் ருஹைம் வீட்டுக்கு வரவுமில்லை. “கூட்டாளிமாருங்கூட டிப்பொண்டு போற” எனக் கூறிவிட்டுச் சென்றவன் வேறொரு டிரிப் போயிருக்கும் தகவல்தான் வந்து சேர்ந்தது.

“அன்ன ஓங்கட மகன் புத்தளத்திலயாம் கலியாணமும் முடிச்சாம். சொந்தச் செலவில பொண்ணுக்கு நகேம் வேங்கி குடுத்தாம்.”

நண்பரின் வீட்டுக்கு நான்கு வீடுகள் தள்ளி வாடகைக்குக் குடியிருந்து சில தினங்களுக்கு முன்னர் மாறிப் போன குடும்பமொன்று அவனை வளைத்துப் போட்ட செய்தியும் கூடவே வந்து சேர்ந்தது.

“கை தொடச்சி போட்ட குடும்பமொண்டு” - இங்கு குடியிருந்த ஒரு வருட காலத்துக்குள் போட்ட ஆட்டங்களைக் கண்டுவிட்டு ஊரவர்கள் அந்தக் குடும்பத்துக்குச் சூட்டிய அடைமொழி அது. உண்மையும் அதுவே. ஆதலால், அந்த வீட்டு வாசற்படி மிதிப்பதைக்கூட நண்பரோ மனைவியோ விரும்பவில்லை.

முறைப்படி நிகாஹ் செய்திருக்கலாம். ஆனால், “பாஞ்சி போன” என ஊருலகம் கதைப்பதை எப்படித் தடுக்கமுடியும்? வெளியே தலைகாட்ட முடியாமல் தொழிலுக்குச் செல்வதைத் தவிர சமூகத் தொடர்புகளை நண்பர் இயன்றளவு குறைத்துக் கொண்டார்.

தொடர்ந்து வந்த நாட்களில் இன்னுமோர் அடி காத்திருந்தது. பெண் பிள்ளைகளுக்கெனச் செய்து வைத்திருந்த நகைகள் சிலவற்றையும் காணவில்லை. உண்டியலுடனே அதற்கும் கதையைக் கொடுத்திருக்க வேண்டும்!

குடும்பமாகி ஆரம்ப காலத்தில் பிள்ளை களை வளர்க்க நண்பர் பட்ட பாடு..... கிடைக்கும் சொற்ப வருமானத்தைக் கொண்டு வாழ்க்கையை ஓட்ட நடாத்திய போராட்டங்கள்...... ஒழுங்கான தொழிலின்றி முகம் கொடுக்க வேண்டி வந்த கசப்பான அனுபவங்கள்...... அத்தனைக்கு மத்தியிலும், கோழி தன் குஞ்சுகளை சிறகுக்குள் வைத்துப் பாதுகாப்பதுபோல், குடும்பத்தை அரவணைத்து வந்தார். கடந்த ஐந்தாறு வருடங் களாகத்தான் பொருளாதாரம் ஓரளவு சிறப்பாக ஓடிக் கொண்டிருக்கிறது.

நண்பர் வசிக்கும் பகுதியை றப்பர் தோட்டம் என அழைப்பார்கள். முன்னொரு காலத்தில் இறப்பர் மரங்கள் இருந்திருக்கக் கூடும்.

வீட்டுக்கு அடுத்ததாகப் பள்ளிவாசல். நண்பரின் ஆண் பிள்ளைகள், ஐந்து நேரமும் அவ்வல் ஜமாஅத்தில் இருப்பார்கள். பள்ளி வாசலில் இடம்பெறும் எல்லாக் கருமங்களிலும் அந்தக் குடும்பத்தின் பங்களிப்பு இருக்கும்.

"ஸாபிர்ட புள்ளகளெண்டா தங்கபவுண்" அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் வழங்கியிருந்த சான்றிதழ் அது. அதிலும் ருஹைம் இன்னும் ஒருபடி விசேடம். "இந்தப் பூனையும் பால் குடிச்சியோ? அதே சமூகம்தான் இன்று வேறு விதமாகக் கதைக்கின்றது.

மகனால் ஏற்பட்ட அவமானம், மன உளைச்சல், தொடர்ந்து வந்த பொருளாதார நெருக்கடி, நடந்தவற்றைக் கேள்விப்பட்டு நிச்சயார்த்தம் செய்திருந்த இடத்தில் மகளை வேண்டாமெனக் கூறியது..... எல்லாம் சேர்ந்து நண்பரை நோயாளி யாக்கிவிட்டது.

•

முன்னைய இரவு அக்ரமுடன் பல விடயங் களைப் பற்றியும் கதைத்துக் கொண்டிருந்த அசதியினால் என்னை அறியாமலேயே பஸ்ஸில் தூங்கிவிட்டேன். கண் விழித்துப் பார்த்தபோது கடவத எக்ஸிட்டைத் தாண்டி தரிப்பிடத்தில் பஸ் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த ஜோடியினர் இறங்கிப் போய்க் கொண்டிருந்தனர்.

"வாப்பா நோய்ல புழுந்தும் திரும்பி பாக்கில்ல. தாத்தமார பத்தி ஒருசொட்டும் கணக்கில்லாம வயசுக்கு முந்தி பொண்ண தீக்கொண்டோடிட்ட. ஜூப்பவ மட்டும் போட்டா சரி....." இப்படி எரிச்சல் பட்டவனாக குருநாகல் பஸ்ஸில் ஏறிக் கொண்டேன்.

❍❍❍

# அமைதியாக அமர்ந்திருக்க விரும்புகிறேன்

நிழல் பரப்பும்மரத்தின்கீழ்
அமைதியாக
அமர்ந்திருந்து
பறவைகளின்
கீத ஒலியையும்
வண்டுகளின்
ரீங்காரங்களையும்
கேட்கவிரும்புகிறேன்

அமைதியாக அமர்ந்திருந்து
அசைந்து செல்லும்
மேகங்களை
பார்க்க
விரும்புகிறேன்
பின்னர் ஒரு நூலை
வாசிக்க
அல்லது ஒருபாடலைப்
பாடவும்
காட்டுப் பறவை
கத்துவதைக்
கேட்கவும்
விரும்புகிறேன்

பொழுது பெரும்பாலும்
சாய்ந்தபின்
தனிமையில்
அமர்ந்திருந்து
தூரத்து மலையின்
பின்னால்
மின்னிடும்
ஆதவனின்
ஒளிவண்ணத்தைக்
காண விரும்புகிறேன்

பொழுது பெரிதும்
கழிந்தபின்
தனிமையில்
அமர்ந் திருந்து
தூரத்து மலையின்
பின்னால்
ஒளிரும் ஆதவனின்
ஒளிவண்ணத்தைக்
காண விரும்புகிறேன்

அந்தி ஒளிமாலை
நேரத்தில்
அமைதியாக
அமர்ந்திருந்து
தன் சக்தியெல்லாம்
சேர்த்துப் பாடும்
விப்பூர்வில்லின்
பாடலைக் கேட்க
விரும்புகிறேன்

நட்சத்திரங்கள்
நிறைந்திருக்கும்
வானத்தின்கீழே
அமைதியாக
அமர்ந்திருந்து
அனைவரும்
முழுப்பொழுதும்
அமைதியாக
வாழ்ந்திருக்க
மனதார வேண்ட
விரும்புகிறேன்

(

மூலம்– **அல்வின் அலெக்ஸாண்டர்**
தமிழ் வடிவம் – **அன்னலட்சுமி இராஜதுரை**






கலாநிதி
ஜெகநாதன் தற்பரன்
(L.L.M.)

**அ**திகாலையில், பனித்துளிகள் பனை மரத்து இலைகளில் அழகுற பாதரசத் துளிகளாக குமிழ்ந்து கொண்டிருக்கும்போது, மரவங் குளம் கிராமத்தின் மாயாவின் பிள்ளைகள் ஆரம்பக் கல்விக்காக பழைய கிணற்றுப் பாதை வழி நடைபாதையில் நடந்து செல்லக் காணலாம். அவர்கள் இனி சிறு பிள்ளைகள் அல்ல. கவிது இப்போது உந்துருளி பழுது பார்க்கும் அளவுக்கு பெரிய வாலிபன். வயதில் மூத்தவன். வயதில் இளையவன் அனு, இருபது வயதில் மீன் வலைச் சீர்செய்ய திறம்படக் கற்றவன், இரு வயது குறைந்தவனாக இருப்பினும் அண்ணன் அடிக்கடி புகைப்பிடிக்கப்போகும் சமயத்தில் உந்துருளி கடையினையும் பார்ப்பவன். சிறு பிள்ளை தாரணிகூட அவர்களின் வீட்டுக் கதவைவிட இப்போது உயரமாகிவிட்டாள்.

ஆனால், இன்னும் அவர்கள் தங்களுடன் எடுத்துச் செல்லும் அந்தச் சிறிய உலோகக் கலசம்-அவர்களின் காணாமல் ஆக்கப்பட்ட தாய், இவர்களின் இடுப்பில் கட்டிவிட்டுச் சென்றது. அதே ஒன்று. இடுப்பில் சாய்த்து பிள்ளைகளினை தன் தோளில் போட்டு "எங்கள் ஐவரிடமும் இருக்கும் ஒரே மாதிரியான வகை மந்திரித்த தாயத்து இது" "இது தான் எங்க குடும்ப அடையாளம்" எனும் குரல் இன்னமும் உரத்து நிற்கும். இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன. அன்று மாலை வீட்டை விட்டு புன்னகையுடன், "குளிருவதற்குள் திரும்பி வரேன்," என்று சொன்ன வாக்குறுதி யுடன் சென்றாள். உங்கட மாமனை கூட்டிக் கொண்டு போறாங்களாம். என்னவென்று கேட்டு பார்த்துட்டு வாறன். கவிது சின்னதுகளையும் வீட்டையும் பார்த்துக்கொள். சரியாகப் பிந்தினால் மட்டும் அப்பா கடலில் இருந்து வந்ததும் விடயத்தை மறக்காமல் சொல் - என அன்பான உத்தரவுகளை இட்டவாறே சென்றாள். போருக்குப்பின் "மாயன்" சமூகம் கவுத்தமாலாவில் எங்ஙனம் துளிர்த்ததுவோ அவ்வாறே மாயாவின் துணிவும் இருந்தது. குடும்பமும் அவள் தன் பெயருக்கு ஏற்றதான வாழ்வு முறையினை சிறப்பாக கொண்டு சென்றது.

அவள் அடையாள அட்டையையும், வாழ்க்கையைத் தாங்கிக்கொள்ள வேண்டிய தைரியத்தையும் மட்டும் எடுத்துச் சென்று "அவர்களின்" சோதனைச்சாவடியை நோக்கி நடந்தாள். அதற்கு பின்னர் அவள் திரும்பி வரவில்லை. அவள் இல்லாதது ஒரு காயம், அதே நேரத்தில் ஒரு இருப்பாகவும் இருந்தது. முதலில், குழந்தைகள் ஒவ்வொரு கதவிலும் அவள் நிழலைத் தேடினார்கள். பின்னர், அரசு அலுவலக அறிவிப்புகளிலும், உரிமைப் போராட்டப் பணியாளர்கள் கையில் கொண்டிருந்த பட்டியல்களிலும் அவள் பெயரைத் தேடினார்கள். மனிதப்புதைகுழிகளில் தாயத்து இருக்குமா என ஏங்கினார்கள். எட்டு வருடம் மீளத்திரும்பாட்டி "இறப்பு நடந்தது" என ஊகிக்கலாமாம். ஒரு மில்லியனும் கிடைக்குமாம். (சொல்லச்) சொன்ன விதானையை என்ன செய்ய. உடலமும் இன்றி, நடந்ததும் என்னவென்று தெரியாது இறப்பினை உறுதிப்படுத்துவது எப்படி. இறப்பிற்கும் ஒரு நன்மதிப்பும், கண்ணியமும் இருக்க வேண்டாமோ. என்ன நடந்தது என்பனை அறிவதனை விடுத்து, எப்படி நடந்தது என்பதை அறியப் பலரும் வந்தனர். எம்மை அறிய அவர்கள் வந்தனை, வந்ததை, சொல்ல ஏதும் இன்றி பின் சென்றனை நன்கு

அறியக்கூடியதாக இருந்தது. பிறகு அவர்கள் "தெரியாமையை கூறும்" சமாளிக்கும் வினோதக் கலையை பலரிடத்தில் இருந்து மாயாவின் குடும்பம் கற்றார்கள்—நம்பிக்கையை உயிருடன் வைத்துக் கொண்டு, அதே நேரத்தில், அது அவர்களை கருகவிடாமல் பார்த்துக் கொண்டார்கள்.

அவர்களின் தந்தை, கஜன் மீனவன், ஒருகாலத்தில் அமைதியான சிறந்த கட்டடக் கலைஞன், போரில் கட்டிடக்கலை இல்லாது போனதால் மீண்டும் மீனவம் கைகொடுத்தது. புகை இல்லை. மாயா அன்றி பிற மாதுவும், மதுவும் இவரின் வாழ்வில் கடலிலும் இல்லை. ஒரு மரப்பெட்டியில் தன் மனைவியின் ஆவணங் களைச் சேகரிக்கத் தொடங்கினார். ரசீதுகள், படங்கள், அதிகாரிகளுக்குக் கொடுத்த விண்ணப்பக் கடிதங்கள், யாரோ ஒருநாள் வாசிப்பார்கள் என நம்பிய சாட்சியக் குறிப்புகள் யாவும் அதில் இருந்தது. "அவள் திரும்பி வந்தால்," கஜன் சொல்வார், "நாம் ஒருநாளும் தேடுவதை நிறுத்த வில்லை என்று மாயாம்மா தெரிந்திருக்கட்டும்." அந்தப் பெட்டி, அந்தக் குடும்பத்தில் மற்றொரு சகோதரியைப் போல - எப்போதும் அவன் அருகில், எப்போதும் கனமாக இருந்தது. சில இரவுகளில், தாரணி கடற்கரையில் அமர்ந்து, தன் தாயின் குரலை ஒத்த ஒலிகளை கேட்பாள். சமையல் செய்யும் போது மாயா மெதுவாகப் பாடிய முணுமுணுப்பு, ஒவ்வொரு பிள்ளைக்கும் தங்கள் பிடிவாதத்தை மையப்படுத்தி மாயா பெயர்களை அழைத்த விதம் எல்லாம் அழகு. மாயாவை மாயம் செய்தும், எவரும் கபளீகரம் செய்ய முடியாது என்பது கஜனுக்கும் நன்கு தெரியும். அந்த நம்பிக்கையே அவனை தன் விருப்பத்துறையினைக் கைவிட்டு ஆழ்கடல்வரை செல்ல வைத்தது.

"அம்மா உயிரோடு இருக்கிறாரா தெரிய வில்லை," தாரணி ஒருமுறை தன் அண்ணன் களிடம் சொன்னாள். "ஆனா, நாங்கள் உயிரோட வாழ்ந்தோம்… உடைந்துவிடவில்லை என்று அவள் அறிந்திருக்கணும்." கவிது தலை யசைத்தான். "ஒருநாள் அவள் திரும்பினால், எல்லாமே சொல்லப் போறோம். காயப் பட்டவற்றையும், காயப்படுத்தியவற்றையும்." அனு பழைய கிணற்றின் கல்லை தொட்டான். "அம்மா, (கிணற்றை) எட்டிப்பார்த்துப் பின் எட்டி நடந்து தொடர்ந்து போங்க என்பாங்களே."

கிராமத்தில், யாரும் மாயாவை "இருந்தார்" எனப் பேசவில்லை. ஓடிவிட்டாளா என்றே லேசாக கேட்டனர். ஊரில் இருந்த மும்மதக்கடவுளுக்கும் இது தெரியும். மௌனம்-அவர்களின் மத ஒற்றுமை போலும். படைத்தவனுக்குத்தானே பாவம் எல்லாம் சேரவேண்டும். மாயாவின் குடும்பம் அமைதியாகவே இருந்தது. இருபது ஆண்டுகள் கடந்திருந்தாலும், அவள் பெயர் இன்னும் நிகழ்காலத்தில்தான்… வழிபாடுகளில், ஆசி வேண்டுகோள்களில், மெல்லிய உரை யாடல்களில் சுமையில்லாமல் தங்கி இருந்தது. போர்காலத்தில் காணாமல் போன பலரில் ஒருத்திதான் அவள். ஆனால் அவள் குழந்தை களுக்கு, அவள்தான் ஒருத்தி. மாயா ஒரு எண்ணிக்கையோ, ஒரு கோப்போ, ஒரு வதந்தியோ இல்லை.

அவள் - நினைவுக்கும் மர்மத்துக்கும் நடுவில் சிக்கியிருந்த அவர்களின் தாய்தான். அவள் காணாமல் ஆன இருபதாம் ஆண்டில், இவர்கள் ஒரு புதியதைச் செய்தார்கள். எப்போதும் பதில் தராத தெரிஞ்சிராத முகங்களுடன் - பொய் ஆதரவுகளுக்காகக் காத்திருப்பதற்குப் பதிலாக, வீட்டுக்கு வெளியே மூன்று பனை மற்றும் வேப்ப மரங்களை நட்டார்கள். "அம்மா வுக்காக," தாரணி சொன்னாள். "நாம் இழந்த காலத்துக்காக," அனு சொன்னான். "இன்னும் நம்பிக்கைக்காக," கவிது முடித்தான். மரங்கள் மெதுவாக வளர்ந்தன, ஆனால் பிள்ளைகளும் குடும்பத்தலைவனும் ஒருமித்தே கவனித்ததால் அழகுறவே விரைவாகப் பலன் தரும்படி வளர்ந்தன. அந்த மலர்ச்சியில், அந்தக் குடும்பம் சிறிதளவு அமைதியைக் கண்டது. தெரியாமை மறைந்ததால் அல்ல. அவர்கள் மாயாவின் கதையை அழிக்க முயன்ற உலகத் துக்கு எதிராக நெகிழ்ச்சியுடனும், நேர்மையுடனும், அவளைத் தொடர்ந்து உயிரோட வைத்திருந்த தால் எனும் நம்பிக்கையினை மரங்கள் தந்தன. மனிதனால் முடியாததை மரம் செய்தது. மாயாவை அவள் குடும்பம் தினமும் கண்டன. அவள் குறித்த தேடலும் தொடர்ந்தனவே.

**(யாவும் கற்பனை)**

○○○

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்...



பேராசிரியர்
துரை.மனோகரன்

## நாடு படும் பாடு

உலகம் எங்கோ போய்க்கொண்டிருக்கிறது. ஆனால், நமது பேரினவாத முட்டாள்களும், சமய வேடதாரிகளும் நாட்டைத் தொடர்ந்தும் குட்டிச் சுவராக்குவதில் சளைக்காமல் செயல்பட்டு வருகின்றனர். ஏதாவது ஒரு சின்னக் காரணம் இருந்தால் போதும். உடனே வரிந்துகட்டிக் கொண்டு, "விட்டேனா பார்!" என்று கத்திக் குளறிக் கொண்டு ஏதாவது முட்டாள் வேலைகளில் ஈடுபடத் தொடங்கிவிடுவர்.

இப்படித்தான், சமயவேடதாரி ஒருவர் தொடர்பாக எடுக்கப்பட்ட சட்டநடவடிக்கையைச் சாக்காகக் கொண்டு, தலைநகரில் ஒரு கூட்டத்தைக் கூட்டி, தமது முட்டாள்தனத்தின் விஸ்வரூபத்தை வெளிச்சம் போட்டுக் காட்டினர். கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள், தங்களைப் போல எண்ணாயிரம் சமயவேடதாரிகள் திரளு வார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், "குஞ்சு குறுவானுமாகச்" சுமார் ஐந்நூறு சமயவேடதாரிகள் தான் கலந்து மகிழ்ந்தனர். கூட்டத்தில் ஆக்ரோஷமான பேச்சுகள், நாட்டின் இரண்டு முக்கியஸ்தர்கள் தங்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்ற உத்தரவுகள், நாட்டில் எது நடந்தாலும் தம்மைக் கேட்டுத்தான் நடைபெறவேண்டும் என்ற மிரட்டல்கள், சமயவேடதாரிகளுக்கு எதிராக எத்தகைய சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படக் கூடாது என்ற கட்டளைகள் என, தாமே நாட்டின் அதிகார வர்க்கம் என்ற தோரணையில் கூட்டத்தை நடத்தி முடித்தனர். நமது நாட்டின் பழைய அரசுகளின் சுயநலம் கலந்த பலவீனமே சமயவேடதாரிகளை இவ்வளவு தூரம் அதர்ம வழியில் வளர்த்துவிட்டிருக்கிறது. சட்டம் அனைவருக்கும் பொதுவானது என்பதைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வந்தால்தான் சமயவேடதாரிகளின் கொட்டம் அடங்கும்.

வெளிநாட்டில் வசிக்கும் நமது நாட்டைச் சேர்ந்த பெரும்பான்மை இன இளம்பெண் ஒருவர், ராஜவம்சத்து இளவரசரையும், அவரது ராஜவம்சத்தையும் போட்டுக் கிழிகிழி என்று கிழித்துத் தொங்கவிட்ட காணொளி ஒன்று வெளியாகியுள்ளது. இந்த இலட்சணத்தில், இவரையும் ஒரு மனுசன் என்று மதித்து, அயல் நாட்டு அரசின் மறைமுக ஆதரவுடன், அந்நாட்டுக் கல்வி நிறுவனம் ஒன்று, தனது நிகழ்ச்சி ஒன்றுக்கு அவரை ஒரு முக்கியஸ்தராக அழைத்து, திறந்த வண்டியில் உலாவரச் செய்து மகிழ்ந்தது. அது போதாதென்று, நமது நாட்டு முஸ்லிம் கல்வி நிறுவனம் ஒன்று, தனது நிகழ்ச்சி ஒன்றுக்கு இவரை முக்கியஸ்தராக அழைத்து, தனது பெயரைக் கெடுத்துக்கொண்டது. இவை போதாதென்று, வெளிநாடு ஒன்றின் புகழ் பெற்ற இரண்டு கல்வி நிறுவனங்கள், இவரை ஒரு முக்கியஸ்தராக அழைத்திருந்தன. நல்லவேளையாக அவை இரண்டும் கடும் எதிர்ப்பின் காரணமாகத் தமது குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை இரத்துச் செய்துள்ளன. இப்போதெல்லாம் கல்வி நிறுவனங்களுக்கு, யாரை அழைக்கவேண்டும் என்ற விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது.

## கலைச்சுவை வழங்கிய கண்டி

கண்டி இப்போதெல்லாம் கலை – இலக்கியத் துறைகளில் கலகலவென்று பிரகாசிக்கிறது. அடிக்கடி நல்ல நிகழ்வுகள் நடந்தவண்ணமே உள்ளன. அண்மையில் கண்டி முத்தமிழ்ச் சங்கத்தின் நிகழ்வு ஒன்று பேராசிரியர் துரை. மனோகரனின் தலைமையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலாநிதி இரா. மகேஸ்வரன் "நவீன ஊடகங்களும் நாட்டார் கலைகளும்" என்னும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினார். யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மாணவி களான தர்ஷிக்கா நடராஜா, தர்ஷினி மனோகரன்

ஆகியோர் இனிய கானமழை பொழிந்தனர். கண்டி இந்துசிரேஷ்டக் கல்லூரி மாணவிகள் தமது இசைத்திறமையை வெளிப்படுத்தினர். இசைக்கலைஞர் சுனிலின் சக்ஸபோன் இசை, பார்வையாளர்களின் செவிகளையும், இதயங் களையும் வருடிச் சென்றது.

மலையகக் கலை கலாசாரச் சங்கத்தின் எம். ஜி.ஆர் ஞாபகார்த்த நிகழ்வு, கலைஞர் ராஜா ஜென்கின்ஸ் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் துரை. மனோகரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஊடகத்துறை சார்பாக வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற இரா. அ. இராமன், இந்திய, இலங்கை இசை யுலகில் புகழ்பெற்று விளங்கும் மலையகப் பாடகி துலாஞ்சலி ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்விலும் சுனிலின் சக்ஸபோன் இசை அனைவரையும் கவர்ந்தது.

மத்திய மாகாண இந்துமாமன்றக் கண்டி அறக்கட்டளை நிறுவனத்தின் பொங்கல் விழாவும், ஸ்தாபகர் தினமும் அண்மையில் அதன் தலைவர் து. சிவசுப்பிரமணியம் தலைமையில் கண்டியில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பேராசிரியர் துரை. மனோகரன், சிவநெறிச்செம்மல் ஜி. கிருஷ்ணமூர்த்தி, எஸ். ராமசாமி, மோகன் சமரக்கோன், யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளரும், மிருதங்க வித்துவானுமாகிய மகேந்திரன் லோகேந்திரன் ஆகியோர் கௌரவிக் கப்பட்டனர்.

இந்நிகழ்வில் இசைக்கலைமாணி வரதா ரகுநாதனின் மாணவர்களது வீணை இசை ரசிகர்களை மகிழ்வித்தது. ஞானாம்பிகை சந்தானக் கிருஷ்ணனின் நாவலப்பிட்டி மதுராலயா இசைப்பள்ளி மாணவர்களின் குழுப்பாடல் நிகழ்வும், பிரபல பாடகர் சங்கீத கலாவித்தகர் சுபாகரனின் நெறியாள்கையில் ஸ்வர சாகித்திய இசைமன்ற மாணவர்களின் குழுப்பாடல் நிகழ்ச்சியும், இசைக்கலை மாமணி சக்திதேவியின் நெறியாள்கையில் ராமஜெய இசைக்கலாலயா மாணவிகளின் தமிழ் இசைக்கானம் நிகழ்வும் அனைவரையும் கவர்ந்தன.

இந்த நிகழ்வில் அருமையான நடன நிகழ்ச்சிகளையும் கண்டுகளிக்கக்கூடியதாக இருந்தது. பரதசூடாமணி கலாபூஷணம் வைஜந்திமாலா செல்வரத்தினத்தின் மாணவிகள் வழங்கிய நர்த்தன கணபதி மற்றும் மஹாதேவ சிவ சம்போ ஆகிய நடனங்கள், கலாசூரி கலா ஹரிஷின் கம்பளை நிருத்திய கலாலய மாணவிகளின் மயில் நடனம், நாட்டிய வாரிதி உமா ஸ்ரீதரனின் கண்டி சத்தியசாய் கலாலய மாணவிகள் வழங்கிய திருவிழா ஆகிய சகல நடன நிகழ்ச்சிகளும் கண்களுக்குச் சிறந்த விருந்துகளாக அமைந்தன.

இந்நிகழ்வில் மட்டக்களப்பைச் சேர்ந்த திமிலை நளின கலா நாடகமன்றத்தினரின் நாட்டுக்கூத்து ஒன்றும் அண்ணாவியார் வடிவேல் மகேந்திரன் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்டது. கண்டி நகர மக்களுக்கு இந்நாட்டுக்கூத்து ஒரு புதுமையான நிகழ்ச்சியாக அமைந்தது.

கண்டியில் அண்மையில் அருமையான ஒரு நடன அரங்கேற்றத்தையும் கண்டுகளிக்க முடிந்தது. பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சிவானந்தவேள் – மக்கள் வங்கி முன்னாள் முகாமையாளர் சாந்தி ஆகியோரின் புதல்விகள் மாதுமை, ஆர்த்திகா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம், கண்டி சத்தியசாய் கலாலய நடன ஆசிரியை நாட்டிய வாரிதி உமா ஸ்ரீதரனின் நெறியாள்கையில் சிறப்புற நடைபெற்றது. இந்நடன அரங்கேற்றத்தில் பிரதம அதிதியாகப் பேராசிரியர் சி. மௌனகுரு கலந்துகொண்டார். பிற சிறப்பு விருந்தினர்களும் கலந்துகொண்டனர். உமா ஸ்ரீதரனின் உயர்ந்த நட்டுவாங்கம், சங்கீத கலாவித்தகர் சுபாகரனின் இனிய குரலோசை, வாத்திய இசைக் கலைஞர்களின் சிறந்த பங்களிப்பு ஆகியவற்றின் அனுசரணையுடன் மாதுமை, ஆர்த்திகா சகோதரி களின் நாட்டிய அரங்கேற்றம் சுடர்விட்டுப் பிரகாசித்தது.

புஷ்பாஞ்சலி, அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், கீர்த்தனம், பதம், பிருந்தாவன வேணு, தில்லானா என அழகுற அமைந்த இந்நாட்டிய அரங்கேற்ற நிகழ்வில், மாதுமையும், ஆர்த்திகாவும் சளைக்காமல் தமது முழு ஆடல் திறமையையும் வெளிப்படுத்தினர். புஷ்பாஞ்சலியில் தொடங்கிய ஆடல் நிகழ்வு, தில்லானாவில் உச்சம் பெற்றது. நாட்டியத்துக்கே உரிய பாவம், அபிநயம், நாட்டிய ஆளுமை ஆகியவற்றைப் பூரணத்துவப் பொலிவுடன் அவர்கள் இருவரும் வெளிப்படுத்தியமை, பாராட்டத்தக்கதாக அமைந்தது.

❍❍❍




பெப்ரவரி ஞானம் படித்தேன். கதை, கவிதை, கட்டுரை, நூல் விமர்சனம் என எல்லாம் சிறப்புடையனவாகத் திகழ்கின்றன. கலைத்திட்டம் பற்றிய கட்டுரை என்னை மிகவும் கவர்ந்ததாகும். எழுத்தாளர்களின் செல்லிடப்பேசி (Mobile) எண்கள் வழங்கப்படின் அவர்களிடம் உரையாடி பாராட்டுத் தெரிவிக்க இயலும். – **முனைவர் பி.இரத்தினசபாபதி,** மேனாள் தமிழ்க்கல்விப் பேராசிரியர், தமிழ்நாடு.

❍ ❍ ❍

ஞானம் பெப்ரவரி 2026 இதழில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தற்காலிக விரிவுரையாளர் எ. மிலானி எழுதிய - கலைத்திட்டம் ஒரு நோக்கு - என்ற கட்டுரை தொடர்பாக எனது கருத்தினை இங்கு பதிவுசெய்ய விரும்புகிறேன்.

இக்கட்டுரையில் மிலானி கலைத்திட்டத்தினை வரையறுத்து, பின்னர் கலைத்திட்டத்தின் நோக்கத்தினை விபரித்து, அதன் பின்னர் அவர் கலைத்திட்ட மறுசீரமைப்பு என்ற தலைப்பில் 5E முறையினைப் பற்றி விரிவாக விளக்கியுள்ளார். உண்மையில் 5E முறையானது இலங்கையில் 2007ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டு 2015ஆம் ஆண்டுவரை பாடசாலைக் கல்வியில் அமுலில் இருந்த முறையாகும். 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த முறை பாடசாலைகளில் அமுல்படுத் தப்படுவதில்லை. இக்கட்டுரையானது தற்போதைய (2025) கலைத்திட்ட மறுசீரமைப்பானது 5E முறையென்ற மயக்கத்தினை வாசகரிடத்தில் ஏற்படுத்துகின்றது. 5E முறைக்கும் தற்போதைய (2025ஆம் ஆண்டு) கலைத்திட்ட மறுசீரமைப்புக்கும் எந்தத் தொடர்புமில்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. தற்போதைய கலைத்திட்ட மறுசீரமைப்பினைப் பற்றி பின்னர் விரிவாக ஆராயலாமென எண்ணுகிறேன்.

– **பேராசிரியர் தேவராசா முகுந்தன்,** கல்விப் பீடம், இலங்கை திறந்த பல்கலைக் கழகம்.

❍ ❍ ❍

ஞானம் பெப்ரவரி சஞ்சிகையை வாசித்தேன். ஆசிரியர் பக்கம் மிகச் சிறப்பு. தற்காலத்திற்கு மிகத் தேவையான விடயம். நிறைய கவிஞர்கள், நல்ல கவிதைகளை எழுதி இருந்தார்கள். கட்டுரைகள் மிகவும் காத்திரமானவை. தற்கால பிரச்சினைகள், சிறுகதைகளில் அலசப்பட்டு இருப்பதை காணக்கூடியதாக இருந்தது. குறும் கதைகள், நூல் விமர்சனம் அனைத்தையும் வாசித்தேன். பேராசிரியர் துரை மனோகரன் சேர் அவர்களுடைய பத்தி ரசிக்கக்கூடியதாக இருந்தது. மொத்தத்தில் ஞானம் வளர்ந்துவிட்டது என்பதை என்னால் மிக நன்றாக உணரக் கூடியதாக இருக்கிறது. வாழ்த்துக்கள். – **இஸ்மாலிகா,** கண்டி.

❍ ❍ ❍




## அரச இலக்கிய விருது விழா – 2026

### 2026 அரச இலக்கிய விருது வழங்கல் தொடர்பாக நூல்களை சமர்ப்பித்தல்

2026ஆம் ஆண்டு அரச இலக்கிய விருது வழங்கும் வைபவத்தின் பொருட்டு 2025ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட நூல்களை மதிப்பீடு செய்யும்போது அதனை முறையாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் மேற்கொள்ளும் நோக்கில் எழுத்தாளர்களுக்கும், பதிப்பாளர்களுக்கும் தமது நூல் களை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இறுதித் தினம் **2026 மார்ச் மாதம் 30ஆம் திகதி** ஆகும்.

அனுப்பவேண்டிய முகவரி: **அரச இலக்கியக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கிடைக்கச்செய்யலாம்.

# இலங்கை வானொலி சேவை - நூற்றாண்டு விழா 2026




தெற்காசியாவின் முதல் வானொலி ஒலிபரப்புச் சேவையான இலங்கை வானொலி சேவை ஆரம்பிக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைந்ததை யொட்டி, நூற்றாண்டு விழா 12 பெப். 2026 அன்று மாலை அலரி மாளிகையில் நடைபெற்றது. புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகார அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைச் சபை ஆகியன இணைந்து இந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தன.

விழாவின்போது வானொலி வரலாற்றை ஆவணப்படுத்தும் வகையில் இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன. சிறப்பம்சமாக, தற்போது வாழ்ந்து வரும் 30 சிரேஷ்ட வானொலி ஊடகவியலாளர்கள், பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவிய லாளர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். பி. எச். அப்துல் ஹமீத், எஸ்.நடராஜ ஐயர், ஆர்.சந்திரமோகன், வி.எல்.மதியழகன், பி.விக்னேஸ்வரன், எம்.சர்வானந்தா, பாத்திமா ராசிக் காதர், உட்பட சகோதர மொழி ஆளுமையாளர்களும் கௌரவிக்கப் பட்டனர்.

அனைவரையும் ஞானம் வாழ்த்தி மகிழ்கின்றது.



## அதிமூத்த வானொலி ஆளுமையாளர் எஸ்.நடராஜன் அவர்களுக்கு கௌரவம்

வானொலியின் நூற்றாண்டு நிறைவின்போது 95 வயது நிரம்பிய அதிமூத்த வானொலி ஆளுமையாளர், எஸ்.நடராஜ ஐயர் அவர்களுக்கு கௌரவம் வழங்கப்பெற்றமை அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஞானம் சஞ்சிகையில் 2006 ஜூன் இதழிலிருந்து 2007 ஜூன் இதழ்வரை தொடராக எஸ். நடராஜன் எழுதிய தனது ஒலிபரப் புத்துறை அனுபவங்களே "திரைமறைவுக் கலைஞர்கள்" எனும் ஞானம் பதிப்பகம் வெளியீடு செய்த (2017) நூலாகும். அத்தொட ரினை இத்தருணத்தில் ஞாபகப்படுத்துதல் பொருத்தமாகும்.




இந்நூலில் இன்றைய தலைமுறையினர் பலர் அறிந்திராத ஒளி, ஒலி, ஊடகத்துறை சார்ந்த விடயங்கள் பொதிந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. மேலும் இலங்கை வானொலியில் பங்களிப்புச் செய்த பல்வேறு கலைஞர்கள் பற்றியும் அவர்களோடு உரையாடி உறவாடியமைபற்றியும் அவர்கள் பங்களிப்புச்செய்த நிகழ்ச்சிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நூலில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் ஐம்பது வருடகால வரலாற்றின் ஒரு வெட்டு முகத்தைத் தொட்டுச் செல்லும் ஆசிரியர், ஒலிபரப்புத்துறை யினருக்குப் பல பயனுள்ள விடயங்களையும், அறிவுரைகளையும் கூறியிருப்பதோடு வாசகர்களுக்கும் பல சுவையான தகவல் களையும் தந்துள்ளார்.


ஞானம் சஞ்சிகை எஸ் நடராஜன் அவர்களை வாழ்த்தி வணங்குகின்றது.


– தி. ஞானசேகரன்

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/Magazine/38/2026

**ஞானப்பள்ளு (இலக்கியம் – இறையியல் – வரலாறு) – 2022**
**எஸ். மேரி வினிபிரிடா**


யாழ்ப்பாணத்தில் கி.பி. 1650களில் எழுந்ததாக கருதப்பெறும் பள்ளு இலக்கிய வகையைச்சார்ந்த ஞானப்பள்ளு இலக்கியம் பற்றிய ஆய்வாக இந்நூல் அமைந்துள்ளது. கிறிஸ்தவத்தை பரப்பும் நோக்குடன் எழுந்த இலக்கியம் மற்றைய பள்ளு இலக்கியங்களிலிருந்து இதன் கதையமைப்பு வேறுபட்டது என ஆசிரியர் முன்வைக்கின்றார்.
1 - பள்ளுப் பிரபந்தத்தின் தோற்றம் - வளர்ச்சி - பண்பாடு, 2- ஞானப்பள்ளுப் பிரபந்தத்தின் கட்டமைப்பு, 3 - ஞானப்பள்ளுப் பிரபந்தத்தில் இறையியல் கருத்துகள், 4 - ஞானப்பள்ளில் கத்தோலிக்க மறைசார்ந்த வரலாற்றுக் குறிப்புகள், 5 - ஒப்பியல் நோக்கில் ஞானப்பள்ளு எனும் தலைப்புகளில் நூல் அமைந்துள்ளது.




**ஈழத்தில் திரௌபதை வழிபாடு – 2019**
**பாஸ்கரன் சுமன்**

ஒன்பது இயல்களைக் கொண்ட இந்த ஆய்வில் திரௌபதை அம்மன் வழிபாடு என்பது தமிழகத்திலிருந்து ஈழத்துக்கு கடத்தப்பட்ட வழிபாடு என்ற கருத்தியலை முன்னிறுத்தி, அவற்றின் வரலாறு விஸ்தாரமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.
பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயத்தை மையப்படுத்தி கிழக்கிலங்கை, திரௌபதை வழிபாட்டுச் சம்பிரதாயங்களை விபரிக்க முனைகிறது.
இந்நூலில் ஆசிரியர், அரவான் களப்பலி என்பது தமிழ் மரபின் ஊடாக உருவாகியது எனும் கருத்தையும், பாரத அம்மானை என்பது கிழக்கிலங்கைப் பண்பாட்டை இன்னொரு தடத்திற்கு நகர்த்திச் செல்லும் என்பதையும் முன்வைத்துள்ளார்.




**மன்னார் தீவில் கனிம மணல் அகழ்வு – 2025**
**வை. ஜெயமுருகன்**

இந்நூல், மன்னார் மாவட்டத்தின், குறிப்பாக மன்னார் தீவின் சூழலியல் வளங்கள் மற்றும் அதன் மீது உலகளாவிய அதீத இலாப நோக்கிலான தனியார் நிறுவனங்களின் கனிம வளத்திரட்சியைக் கையகப்படுத்தும் செயற்பாடுகளால் நிகழவிருக்கும் ஆபத்துகள் பற்றி ஆக்கபூர்வமான விழிப்புணர்வை, ஏற்படுத்தும் நோக்கிலானது. இது, மன்னார் தீவின் கனிம மணல் அகழ்வின் உள் மற்றும் வெளி நிலைகொள் கண்ணோட்டங்களைத் தருவதோடு, திரண்ட சிந்தனைக்கு ஊக்கமளிக்கும் வகையில், ஒரு வீட்டின் சாளரங்களில் ஒன்றைத் திறந்து பார்ப்பதுபோல், பரந்து விரியும் சிந்தனையையும் முன்வைக்கிறது.

## கிடைக்கப் பெற்றவை...

ISSN 2478-0340
9 772478 034009
PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195